டிராஃபிக் டிக்கெட்
Car Accidents / வாகன விபத்துகள் கிரிமினல் வழக்குகள் (Summary), Provincial Offences / By-law Offences மற்றும் இதர சட்டப்பிரச்சனைகளுக்கு அழையுங்கள்
VINOTHKUMAR
LICENSED PARALEGAL
647.667.6034
WWW.TRAFFICKUMAR.CA
TK LEGALS

28 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 28 பாலம்: 23 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 01, 2018

# தொழில்முனைவோருக்கான புதிய வரிவிலக்கு!

லிபரல் அரசின் வரவு செலவுத்திட்டத்திற்கான இலையுதிர்கால மீளாய்வு 2018 நொவம்பர் 21இல் கனேடிய மத்திய அரசின் நிதி அமைச்சர் Bill Morneau ஆல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் உற்பத்தியாளர்கள் தாம் வாங்கும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் முழுச்செலவையும் உடனடியாக அந்த வருட வருமான வரிச்செலவில் இருந்து கழிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழிலதிபர்கள் சுற்றுப்புறச்சூழல் மாசு அடைவதைத் தடுக்க உதவும் புதிய இயந்திரங்களில் தமது பணத்தை முதலிட்டால் அதையும் அந்த வருடத்தின் வருமான வரிச்செலவில் இருந்து முழுவதும் கழிக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொழில் முனைவோர், தொழில் அதிபர் மற்றும் உற்பத்தியாளர்கள் முதலிடுவதை ஊக்குவிக்கு முகமாக இந்த வரவு செலவுத்திட்ட மீளாய்வில் வரிவிலக்கிற்காக $14.4 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வருமானவரி விதிகளின்படி இவ்வாறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் முதலிடப்படும் பணம் அவற்றின் தேய்மானத்திற்கு ஏற்ப நீண்டகாலப்போக்கிலேயே வருமான வரியில் இருந்து கழிக்கலாம்.

கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் அமெரிக்க நிறுவனங்களுக்கான வரியை 35%இல் இருந்து 21%ஆகக் குறைத்திருந்தார். கனேடிய அரசு இவ்வாறான வரிச்சலுகையை இவ் வரவுசெலவுத்திட்ட மீளாய்வில் கொடுத்ததன் மூலம் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு மீண்டும் கனடாவில் தமது பணத்தை முதலிட வழி வகுக்கப்பட்டுள்ளது என பொருளியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபரின் நிறுவனங்களுக்கான வரிக்குறைப்பால் தொழில் முனைவோரின் முதலீட்டுக்குரிய நிறுவனவரி 18.7% ஆகியது. கனேடிய அரசின் இப்புதிய முயற்சியால் கனடாவில் முதலிடும் தொழில் முனைவோரின் முதலீட்டுக்குரிய நிறுவனவரி 13.8% ஆகிறது. தற்போது G7 நாடுகளில் முதலிடுவோரிற்குரிய நிறுவனவரி கனடாவிலே மிகவும் குறைவானதாக உள்ளது.



கனேடிய அரசின் இந்த வரவு செலவுத்திட்ட மீளாய்வில் கடந்த 2017/2018ஆம் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழுந்த தொகை $19.0 பில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது முன்னர் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது எதிர்பார்க்கப்பட்டதைவிட $0.9 பில்லியன் குறைவானது ஆகும்.

இந்த 2018/2019ஆம் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை $18.1 பில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரவு செலவுத்திட்ட மீளாய்வில் கொண்டுவரப்பட்ட பல புதிய தீர்மானங்களால் கனேடிய அரசின் தொடர்ந்து வரும் ஐந்து நிதியாண்டுகளிலும் வரவு செலவுத்திட்டத்தில் தொடர்ந்து துண்டுவிழும் தொகை குறைந்துகொண்டு போகுமே ஒழிய சமநிலை படுத்தப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கனேடிய அரசின் கடன்சுமை $96.7 பில்லியனால் அதிகரித்து 2023/2024 ஆம் நிதியாண்டில் $765 பில்லியனை எட்டும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனேடிய அரசின் கடன் அதிகரித்தாலும், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கணிப்பிடும் கடனிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பு, கனடாவிற்கு சாதகமாக உள்ளதாக நிதி அமைச்சர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார். கனேடிய அரசின் தற்போதைய கடனிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான வீதம் (Debt to GDP ratio) 30.4 ஆக இருக்கிறது. இது 2023/2024 ஆம் நிதியாண்டில் 28.5 வீதமாகக் குறைந்து விடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கடனிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான வீதம் குறைவாக இருப்பது அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கணிப்பாக பொருளியலாளர்களால் கருதப்படுகிறது.

கனடாவின் வேலை அற்றோரின் எண்ணிக்கையும் அடுத்த ஆண்டு 5.8 வீதமாகக் குறைந்து விடும் எனவும் இந்த வரவு செலவுத்திட்ட மீளாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ஊடகத்துறைசார் நிறுவனங்களுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் $600

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN
MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham& Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Monday to Saturday
10am to 8pm
Dr.Rashmi Jenojan
BDS, University Of London,UK

List your properties around the Globe.
Certified International Property Specialist (CIPS)
CIPS
Sothi Anandakumar
Sales Representative
All Your Real Estate Needs
Dir: 647.408.1859
info@sothihomes.guru
www.sothihomes.guru
List Globally
HomeLife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON L3S 4N8

Ramesh Subramaniam
Cell: 416-272-7361
HomeLife / Future Realty Inc., Brokerage.
205- 7 Eastvale Dr., Markham ON. L3S 4N8
Bus: 905-201-9977 Fax: 905-201-9229

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
MORTGAGE ALLIANCE
SUBRA MORTGAGES INC

CIBC For All your Mortgage Needs...
Mahesh Thangarajah
Mobile Mortgage Advisor
647.524.5237
Toll Free: 1.844.669.6094


Financing Available for Residential & Commercial Properties
Jalal Sayah
Sales Representative
416-569-7570
remax4jalal@gmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-In-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
www.soldbythas.com
SOLD OR WE'LL BUY IT!
வீடு வாங்குவதற்கு பணம் போதவில்லயா? உடன் அழையுங்கள்
$369,000
5% Down
No Mortgage
Broker Fee
Markham Townhouse BR:1+1 WR:1 Maint Fee $180
$499,000
Building with Restaurent and Apartment
$379,000
Assignment Sale 1BR 1 WR Parking and Locker
$69,000
Restaurent
Listed below Market Value
$349,000
Fully Tenanted
4 Unit Apartment
4 Kitchens & 4 Bath
SUBWAY eat fresh.
$968,000
HARVEY'S
SWISS CHALET
$69,000
Convenience/Variety Store Markham
$699,000
Scarborough BR:3 WR:1
Fin. Basement, Sep Entrance
From $175,000
Little Caesars
4 Locations to Choose
CALL US FOR YOUR FRANCHISE OPPORTUNITIES
PIZZA Franchise-7 Locations to choose, From 60K
SUBWAY-Over 15 Locations to choose, From 50K
Restaurent & Bar-Over 20 to choose, From, 30K
INTEREST FREE RENOVATION LOAN


MORTGAGE
First Mortgages
Private Second Mortgages
Residential & Commercial
Fast, Reliable & Result Oriented
JOYITHA DOMINIC
Mortgage Agent
GTA Square Mall, 5215 Finch Ave East,
Suite 220, Scarborough,M1S 0C2, ON,
(Next to Law Office of Kannan Ramnath,
a Professional Corporation)
Tel.: 416-844-4214
A member of Canada International Chamber of Commerce
MORTGAGE ALLIANCE


அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
றொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.
உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல்
2% வட்டி மட்டுமே
(per month)
எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை
416-757-0034, 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
Shankar & Co.
விற்கு அருகாமையில்


HOMES,CONDOS,BUSINESS,COTTAGE, LAND
COTTAGE FOR SALE $488K
Lake front 1 hr north
PAT PUSHPAKANTHAN
REAL ESTATE BROKER - HALL OF FAMER
416-894-1187
Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
OFFICE : 416-290-1200
1% Listing Commission *
Also Available
17 YEARS REAL ESTATE EXPERIENCE
PAT WILL BEAT ANY DEAL*!!
Green Road/Reg. Hwy 2..$699k
This 1 Year New 2930 Sq Ft Detached Property Facing Green Belt*Offers
Brand new condos in Richmond Hill
Yonge Parc condo 1 plus den with 2 Wsrm $450k
Assignment, high in demand Beverly Hill 1 Bedroom + Den & 1 Bathroom
2 bm 2 wsrm with swim pool and gym etc...
Rental corner
1BM CONDO $1,650 RENT IN SCAR..
2 BM CONDO$2,100RENT IN SCARB..
3 BM BUNGALOW FOR RENT $2300.
1 BM BSMNT ELLESMERE/WARDEN 1200/-
3 BM HOME.V. PARK/ YORK MILLS 2200/-
Warden n Lawrence
3 BdrmT2 wsrm Schools
Excellent Investment
START OWN Business
$219k
Markham & 14 th ave.. own your business or with rental income..good return...
1 Bedroom condo
$425k
Richmond hill
3 BM 3 WSRM ..North toronto
Brand new home from builder

# நாமும் நமது இல்லமும் - 523




ஆதன வியாபாரம், அண்மைக்காலமாக மந்த நிலையில் இருப்பதனைக் காணலாம். 2017ஆம் ஆண்டின் இரண்டாவது கால் பகுதியிலிருந்து இந்நிலைமையை அவதானிக்கலாம். இருந்தபோதிலும், சில குறிப்பிட்ட பகுதிகளில் இந்நிலைமை மாறாகக் காணப்படுகின்றது. குறிப்பாக ரொறன்ரோவை சுற்றியுள்ள பகுதியில் ஏற்பட்ட விலை இறக்கம், ரொறன்ரோ நகரத்தில் ஏற்படவில்லை என்பது நிதர்சனம். வீடுகளின் விலையில் இறக்கம் ஏற்பட்ட போதிலும் அடுக்குமாடி மனையின் விலை அதிகரித்தே செல்கின்றது.

இந்த வருடத்தில் (2018) புதிதாக சந்தைக்கு கொண்டுவரப்பட்ட, அடுக்குமாடிக் கட்டிட தொகுதிகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் முந்தைய வருடத்துடன் ஒப்பிடும்போது குறைவானதே. அத்துடன் ஏற்கனவே விற்கப்பட்ட சில அடுக்குமாடி மனைத் தொகுதி அதனது நிறுவனங்களால் சந்தை யிலிருந்து நீக்கப்பட்டு விட்டன. இதனால் இவற்றில் கொள்வனவு செய்தவர்கள், புதிதாக வேறு மனைகளில் முதலிடுவதற்கு எத்தனிப்பதும் விலை அதிகரிப்பிற்கு ஒரு காரணமாகலாம்.

கனடிய மத்தியவங்கியின் வட்டிவீத அதிகரிப்பும், விலை கூடிய வீடுகளின் வியாபாரத்தில் இறுக்கமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. ஜனவரி 2017இல் மத்தியவங்கியின் கனடிய வட்டிவீதம் 0.5% ஆக இருந்தபோது முதன்மை வட்டி வீதம் (Prime Rate) 2.7%ஆகக் காணப்பட்டது. நொவம்பர் 15, 2018இல் 1.75% ஆகக் காணப்படுகின்றது. முதன்மை வட்டிவீதமும் (Prime Rate) 3.95% ஆக அதிகரித்துள்ளது.



இந்த ஆண்டில் ஏற்பட்ட வட்டி வீத அதிகரிப்பு இந்த வருடத்தில் இதுவரையான இறுதி அதிகரிப்பு (ஒக்ரோபர் 24, 2018) ஆகும். இவ் அதிகரிப்பு அடுத்த வருடத்தி லும் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் அடமானக்கடன் பெறுவதிலும், நிலைமை மிகவும் இறுக்கமாகக் காணப்படு கின்றது. இந்தக் காரணத்தினால் விலை கூடிய வீடுகளின் வியாபாரத்தில் மந்த நிலைமை ஏற்படுகின்றது. ஆனால் புதிதாக விற்கப்படுகின்ற அடுக்குமாடி மனையில் வாங்குபவர்கள் உடனடியாக அடமானக் கடன் பெறவேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. நான்கு தொடக்கம் ஐந்து வருட காலம் எடுக்கலாம்.

இதனாலும் புதிதாக நிர்மாணம் செய்யும் கட்டிடத் தொகுதிகளில் அடுக்குமாடி மனைகளை வாங்குபவர்கள் அதிகரிக்க லாம். ஒப்பீட்டளவில் விலையும் குறைவே.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஒக்ரோபர் 2017 உடன் ஒக்ரோபர் 2018ஐ ஒப்பிடும்போது சராசரி விலையில் அதிகரிப்பைக் காணலாம். அத்துடன் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிகையிலும் 6% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வாடகையின் அளவும் அதிகரித்தே செல்கின்றது. புதிதாகக் குடிபெயர்பவர்களினாலும், புதிய வரவாளர்களினாலும் வாடகை அதிகரிக்கச் செய்கின்றது.

புதிதாக நாட்டிற்கு வருபவர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாதவரை வாடகைக்கு இடத்தினைப் பெற்றுக் கொள்வது, இறுக்கமாகக் காணப்படுவதுடன் விலை அதிகரிப்பையும் காணக்கூடியதாக இருக்கும்.

350,000 புதியவர்கள் கனடாவிற்கு வருடா வருடம் வருகின்றனர். அடுத்துவரும் சில வருடங்களிற்கு இது அதிகரிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

| ஒக்ரோபர் | 2017 | 2018 |
|---|---|---|
| சராசரி விலை | $807,340 | $780,400 |
| விற்கப்பட்ட எண்ணிகை | 7069 | 7492 |

எனினும் 2018ஆம் ஆண்டு இதுவரை ஆதன வியாபாரத்தில் 2017 உடன் ஒப்பிடும்போது, வியாபாரத்திலும், சராசரி விலையிலும் குறைந்தே காணப்படுகின்றது.

| ஆண்டு | விற்கப்பட்ட வீடு, மனைகள் | சராசரிவிலை |
|---|---|---|
| 2013 | 87,049 | $522,958 |
| 2014 | 92,782 | $566,624 |
| 2015 | 101,213 | $622,121 |
| 2016 | 113,040 | $729,837 |
| 2017 | 92,263 | $822,572 |
| 2018 | 80,000 | $793,000 |




# *நிகழ்வு நேர மாற்றம்

## யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர் - கனடா

## WINTER GET TOGETHER - 2018

S2M இசைக்குழுவினருடன்,வளாக நண்பர்கள் வழங்கும் இன்னிசை கானங்கள்

மற்றும் பல நடன, நகைச்சுவை நாடக நிகழ்வுகள்!!!!

பசுமை நிறைந்த பல்கலைக்கழக நினைவுகளை மீட்டிப்பார்க்க ஒரு பொன்னான வாய்ப்பு !!!

இடம் : THE ESTATE BANQUET & EVENT CENTRE. SCARBOROUGH காலம்: DEC 9TH , SUNDAY @ 4.00PM

இறுதிநேர ஏமாற்றங்களை தவிர்த்துக் கொள்ள, ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

*LIMITED SEATS

தொடர்புகளுக்கு: SUTHA: 647-919-9362 SHANKARI: 647-545-9381 MUTHU: 416-823-4120 JEY: 416-624-4843

TICKETS கிடைக்கும் இடங்கள்

| | | |
|---|---|---|
| TICKETS கிடைக்கும் இடங்கள் | MORTGAGE CLINIC, 1504 MARKHAM ROAD, SCARBOROUGH ON M1B2V9 | 416-613-2788 |
| | JRS COLLEGE, 4168 FINCH AVE E, SCARBOROUGH, ON M1S 3V1 | 416-292-2455 |
| | ASIAN CASH & CARRY, 8917 THE GORE ROAD, UNIT 11&12 BRAMPTON ON. L6P 0B7 | 905-794-0015 |



# MORTGAGE

- ⇒$35,000.00 வரை Personal Loan (பெர்சனல் லோன் ) தேவையா?
- ⇒In 24 hours $50,000.00 வரை 2nd மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒Unlimited Private 2nd Mortgage தேவையா?- No Income Verification
- ⇒மோட்கேஜ் பலன்ஸ் கட்டாது வீட்டினை பறி கொடுக்கும் நிலையில், அடுத்து என்ன செய்வதென யோசிக்கிறீர்களா?
- ⇒Refinance / Renewal (ரிபைனான்ஸ் / ரினிவல்) செய்ய வேண்டுமா?
- ⇒பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா வேண்டுமா?

நீங்களும் வெல்லலாம் $100,000 * எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும் ...

MORTGAGE CLINIC



ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon). AMP

Team Leader/Mortgage Agent/Real Estate Broker

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

Cell : 416 - 624 - 4843

RIGHT AT HOME REALTY INC.

1504 Markham Road,
Toronto ON M1B 2V9
(Markham Road & HWY 401)

MORTGAGE ALLIANCE Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes




**- ஆதித்தன் -**

# இலங்கையின் அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் நடைபெற்ற மாவீரர் நாள்!

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுத மேந்திப் போராடி உயிர் நீத்த போராளி களை நினைவுகூரும் விதமாக மாவீரர் நாள் தமிழ் மக்களால் வருடந்தோறும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி அனுஷ்டிக் கப்பட்டு வருகின்றது.

தமிழர் தாயகப் பகுதிகளில் அமைக்கப் பட்டுள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் இந்த நிகழ்வுகள் சிறப்பாகவும், உணர்வு பூர்வமாகவும் கடைப்பிடிக்கப்படும். புலம் பெயர்ந்து வாழும் மக்களும் தாங்கள் வாழும் நாடுகளில் இந்த நிகழ்வை கடைப் பிடித்து வருகின்றனர்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலங் களில் விடுதலைப்புலிகள் அமைப்பினால் இந்த நிகழ்வு சிறப்பாக ஒழுங்கமைக்கப் பட்டு நடைபெற்று வந்தது. சமாதான காலப்பகுதியில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளில் தென்னிலங்கையைச் சேர்ந் தவர்களும் வந்து கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வை விடுதலைப்புலிகளின் ஒரு நிகழ்வாகக் கருதாமல் அடக்கி ஒடுக்கப் பட்ட மக்களின் விடுதலைக்காய் போராடி உயிர்த் தியாகம் செய்த போராளிகளுக் கான நிகழ்வாகவே பொதுவாகக் கருதப் பட்டது. சமாதான பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் தென்னி லங்கையிலிருந்து வருகைதந்த சிங்கள ஊடகவியலாளர்கள் மாவீரர் தின நிகழ்வு களை பார்வையிட்டு விட்டு உணர்ச்சி வசப்பட்ட தருணங்களும் உண்டு.

ஒரு தடவை மாவீரர் துயிலுமில்லத்தில் வைத்து ஒரு சிங்களத் தாய் கண்ணீர் விட்டதை நான் கண்டிருக்கின்றேன். “எங் கள் மரண நிகழ்வுகளை நடத்த வேண்டிய பிள்ளைகளின் மரண நிகழ்வுகளையும் நினைவஞ்சலிகளையும் நாங்கள் அவர் களுக்கு நடத்த வேண்டிய வேதனையான நிலைமை ஏற்பட்டுள்ளது” என்று அவர் கூறினார். தமிழ் போராளிகளை பயங்கர வாதிகள் என்று கூறும் சிங்களவர்கள் கூட மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்துகொண்டு மனம் நெகிழ்ந்துள்ளார்கள். அந்த நிகழ் வில் ஒலிக்கவிடப்படும் சோகமான இசை யும், பெற்றோர், பிள்ளைகள், முதியவர்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் உறவுகளுக்காகக் கதறி, கண்ணீர் மல்கும் காட்சியும் எந்தக் கல்நெஞ்சத்தையும் கரைத்து விடும்.

போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட 2009 ஆம் ஆண்டிலிருந்து மாவீரர் நாள்களை அனுஷ்டிப்பது ஆபத்தான காரியமாக மாறி யது. போர் முடிவிற்கு வந்ததும் தமிழர் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களும் படையினரால் அழிக்கப்பட்டன. உயிர்நீத்த போராளிகளின் நினைவுக் கல்லறைகள் புல்டோசரினால் இடித்து சிதைக்கப்பட்டன.



2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வந்த மாவீரர் நாள்களில் மாவீரர் துயிலுமில்லங் களுக்கு பொதுமக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அங்கெல்லாம் இராணு வத்தினர் நிலைகொண்டிருந்தனர். மக்கள் தங்கள் வீடுகளில் கூட விளக்கேற்றி அஞ்சலி செய்ய முடியாத நிலைமை காணப்பட்டது. படையினரும், புலனாய் வாளர்களும் மக்களை அச்சுறுத்தி வந்தனர்.

2015ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இறுக்கங்கள் தளர ஆரம்பித்தன. மாவீரர் துயிலுமில்லங்களில் நிலைகொண்டிருந்த படை யினர் கட்டம் கட்டமாக வெளியேறத் தொடங்கினர். மாவீரர் துயிலுமில்லங் களுக்கு மக்கள் செல்வதற்கு இருந்த தடைகள் தளர்ந்தன.

புதிய ஆட்சியாளர்கள் விரும்பி இவ்வாறான விட்டுக்கொடுப்பை மேற்கொள்ளவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மக்களின் வாக்குகளின்றி ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்ந்திருக்க முடியா தென்பது அனைவருக்கும் தெரியும். ‘நல்லாட்சி’ என்று கூறிக்கொண்டு ஆட் சிக்கு வந்த ரணில் - மைத்திரி அரசாங் கத்தின் மீது சர்வதேசத்தின் அவதானிப்பு இருந்தது. தமிழ் மக்களின் உணர்வு பூர்மான நிகழ்வுகளுக்கு அரசாங்கம் தடை களை விதிக்காமல் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற அறி வுரைகளும் அரசாங்கத்திற்கு சர்வதேசத் தால் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பாக, இறந் தவர்களை நினைவுகூரும் பொதுமக்களின் உரிமையைத் தடுப்பது மனித உரிமை மீற லாகவே சுட்டிக்காட்டப்பட்டது. இதன் கார ணமாகவே புதிய அரசாங்கம் ஒரு நெகிழ்ச்சிப் போக்கை காட்ட முற்பட்டது.

இன்று, நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் கடந்த நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப் பிடிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங் கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஸவை பிரதமராக்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிரடி நடவடிக்கையின் பின்னர் ஏற்பட்ட குழப்பநிலையில், மீண்டும் பழைய தடை கள் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என்கின்ற அச்சம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த சூழ்நிலையிலேயே இந்த மாவீர்நாள் நிகழ்வுகளும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், பாரிய அச்சுறுத்தல்கள் இன்றி மாவீரர்நாள் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. நேரடியான தடைகளை விதிப்பதற்கு அப்பால், நீதிமன்றத்தினூடாக தடைகளைக் கொண்டுவர பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பின் கொடிகள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தி மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை உத்த ரவை வழங்குமாறு நீதிமன்றங்களில் மனுக் களை பொலிஸார் தாக்கல் செய்தனர். வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் பொலி ஸார் இவ்வாறான மனுக்களை தாக்கல் செய்தனர். உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்கு எந்தத் தடையுமில்லை எனவும், விடுதலைப் புலிகளின் சின்னங்கள் மற்றும் கொடிகள், பாடல்கள் என்பவற்றைப் பயன் படுத்துவது உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தடை விதிக்கப்படுவதாகவும் நீதிமன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

முன்னதாக, மாவீரர் நினைவுநாள் நிகழ் வுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களத் தினால் அறிக்கை ஒன்றும் வெளியிடப் பட்டது. எனினும், மாவீரர் துயிலுமில்லங் களில் எழுச்சிப் பாடல்கள் ஒலிக்கப்பட்டு. சிவப்பு, மஞ்சல் கொடிகள் கட்டப்பட்டு கார்த்திகைப் பூக்கள் பொறித்த பதாதைகள் கட்டப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இம்முறை இடம்பெற்றுள்ளன. கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலு மில்லத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ் வை இதற்கு உதாரணமாக சொல்லலாம்.

கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியிலிருந்து மேற்குப் புறமாக கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் அமைந்துள்ளது. ஏ-9 வீதியி லிருந்து கனபுரம் வீதி ஆரம்பமாகும் இடத்தில் இம்முறை மாவீரர் வளைவு ஒன்று அமைக்கப்பட்டிருந்தமை பலரையும் வியப்பிலாழ்த்தியது. போருக்குப் பின்னர் முதல் முறையாக இவ்வாறான வளைவு ஒன்று அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

பொலிஸார், இராணுவத்தினர், புலனாய் வாளர்களின் நடமாட்டங்கள் பல பகுதிக ளில் இருந்தாலும் பாரிய சிக்கல்கள் எவையும் இடம்பெறவில்லை. யாழ்ப்பாணத் தில் வடமராட்சிப் பகுதியிலும் முல்லைத்தீவு பகுதிகளிலும் சிறுசிறு இடையூறுகள் படை யினரால் மேற்கொள்ளப்பட்ட போதும் பொதுமக்களை பாதிக்கும் வகையிலான மோசமான சம்பவங்கள் எவையும் இடம் பெறவில்லை.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 38



குரு அரவிந்தன்


கனடாவின் முதற்குடி மக்களின் வாழ்க்கை நிலையை ஈழத்தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரே மாதிரியான இன்ப துன்பங்களைத்தான் அனுபவித்திருக்கின்றனர். கனடா முதற்குடி மக்கள் எதிர்கொண்ட ஒவ்வொரு கஸ்டமான நேரங்களிலும் இடம் பெயர்ந்தார்களே தவிர அவர்கள் புலம்பெயரவில்லை. ஈழத்தமிழ் மக்களும் தொடக்கத்தில் இன்னலைத் தாங்கமுடியாமல் ஒவ்வோர் இடமாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தனரே தவிர, வேறு நாடுகளுக்குப் புலம் பெயரவில்லை. ஆனால் 1983 ஆம் ஆண்டு நடந்த நிகழ்விற்குப் பின் சொந்த மண்ணில் இனி வாழ முடியாது என்ற நிலையில் அவர்கள் புலம் பெயரவேண்டி இருந்தது. இதுவரை காலமும் உடமைகளை இழந்து கொண்டிருந்த தமிழர்களின் உயிரை இழக்கும் நிலை ஏற்பட்டதே அவர்கள் புலம் பெயர்ந்ததற்கு முக்கிய காரணமாகும். இதைக் காரணமாகக் காட்டி பொருளாதார வசதி கருதி புலம் பெயர்ந்தவர்களும் உண்டு, புலம் பெயர்ந்த மண்ணில் அப்படியான சிலரின் செயற்பாடுகளை அவதானிக்கும்போது பொதுமக்கள் புரிந்து கொள்வார்கள்.

கனடிய முதற்குடி மக்கள் நீண்ட காலத்திற்கு முன் இப்பொழுது பனியால் மூடியிருக்கும் வடபகுதியில் ஆசியாக் கண்டத்துடன் நிலத்தொடர்பு இருந்த காலத்தில் அதன் வழியாகக் கால்நடையாக வந்து குடியேறியவர்கள். பிரேஷர் வலி பல்கலைக்கழகத்தில் (University of the Fraser Valley) நடைபெற்ற ஆய்வின்படி சுமார் 17,700 வருடங்களுக்கு முன் ரஷ்யா வழியாக அலஸ்கா, பிரிட்டிஷ் கொலம்பியா பகுதிகளுக்கு வந்திருக்கலாம் என நம்புகின்றார்கள். தொடக்கத்தில் அப்படி நடந்துவந்து குடியேறியவர்கள் காலப் போக்கில் தெற்கு நோக்கி நகர்ந்தார்கள். குடிநீரும், உணவும் எங்கெல்லாம் கிடைத்தனவோ அப்பகுதிகளை நோக்கியதாகவே முதற்குடி மக்களின் நகர்வுகள் இருந்தன. உணவுக்காக காடுகளில் வேட்டையாடவும், கடல், ஆறு, ஏரி போன்ற நீர்நிலைகளில் மீன் பிடிப்பதையும் முக்கியமாகக் கொண்டு முகத்துவாரப் பகுதிகளில் அவர்களின் குடியிருப்புக்கள் அதிகமாக அமைந்திருந்தன.

ஈழத்தமிழர்களோ நீண்ட காலத்தின் முன் புவியதிர்வும், ஆழிப்பேரலையும் ஒன்று சேர்ந்து மோசமாகப் பாதித்ததால் தென்னிந்தியாவில் இருந்து ஒரு சிறிய தீவாகப் பிரிக்கப்பட்ட நிலத்தில் தொடர்ந்தும் பரம்பரையாக வாழ்ந்தவர்கள். அப்படிப் பிரிக்கப்பட்ட நிலத்தையே இப்போது இலங்கைத் தீவு என்று அழைக்கின்றனர். தென்னிந்தியாவில் மன்னர்கள் ஆண்ட காலத்தில் தென்னிந்தியா முழுவதும் தமிழ் மொழி பேசுபவர்களே வாழ்ந்தார்கள். ஒரு காலத்தில் மூவேந்தர் என்று சொல்லப்பட்ட சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சியின் கீழ் தென்னிந்தியா இருந்தது. பிற்காலத்தில் வட்டார மொழிக் கலப்புக் காரணமாகத் தமிழ் மொழியில் இருந்து மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற உப மொழிகள் உருவாகின. அதனால்தான் ஈழத்தமிழர்களால் மலையாள மொழியை இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. நில அமைப்பும், மண் வகையும் ஒரே மாதிரியாக இருப்பதால், கேரள மண்ணில் இருக்கும் மரம் செடி கொடிகள் எல்லாம் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. அப்படித் தென்னிந்தியாவில் இருந்து பல்லாயிரம் வருடங்களுக்கு முன் பிரிக்கப்பட்ட மண்ணில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்களே இன்று ஈழத்தமிழர் என்ற பெயரில் பல்வேறு நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

நன்னீர் திட்டத்தின் கீழ் மகாவலித் தண்ணீரை வடபகுதிக்குக் கொண்டு செல்வதை எப்படி ஒரு சாரார் தடுத்தார்களோ அதேபோல வான்கூவர் பகுதியிலும் தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டிருக்கின்றது. இதுபோன்ற பிரச்சனை தமிழ்நாடு கேரளா எல்லையிலும் இருக்கின்றது. மனிதன் உயிர் வாழத் தேவையான அத்தியாவசியமான பொருட்களில் தண்ணீரும் ஒன்றாகும். அனேகமான நாடுகளில் இதுதான் முக்கியமான பிரச்சனையாக இருக்கின்றது. வான்கூவர் பீஸ் றிவர்வலியிலும் இந்தத் தண்ணீர் பிரச்சனை இருக்கின்றது. பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் ஜோன் ஹோகன் அணை கட்டுவதற்கான 'சீ அணைக்கட்டு' திட்டத்தை இனி தொடரப் போவதாக அறிவித்ததால் கொடுக்கப்பட்ட வாக்கைக் காப்பாற்றவில்லை என்ற குற்றச்சாட்டு அவர் மீது எழுந்திருக்கிறது. மின்சாரம் பெறுவதற்காகத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக இந்த அணைக்கட்டைக் கட்ட இருக்கின்றனர்.

இப்பகுதியில் வாழும் முதற்குடி மக்களுக்குச் சட்டப்படி அப்பகுதியில் வேட்டையாடவும், மீன்பிடிக்கவும் உரிமை இருப்பதாக முன்பு குறிப்பிட்டு இந்த அணை கட்டும் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தனர். பீஸ்வலியின் தண்ணீர் ஓட்டத்தைத் தடுக்க முற்பட்டதால் முதற்குடி மக்கள் தங்கள் உரிமை மறுக்கப்பட்ட



FISHING LAKE FIRST NATION #89

Housing Department

EVICTION NOTICE

தாக நீதி மன்றில் வழக்குத் தொடுத்திருந்தனர். நீதி மன்றத்தில் இருந்து தீர்ப்பு வரும்வரையும் தாங்கள் காத்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்திருந்தது. இது சம்பந்தமாகப் பொதுமக்களிடம் 120,000 கையெழுத்து பெறப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றது. மத்திய அரசுக்கு அறிவிக்கும்படி சில ஆலோசனைகள் அதில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது முதற்குடி மக்களின் உரிமைகள் வாக்குக் கொடுத்தபடி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் ஒரு வேண்டுகோளாகும். பிரிட்டிஷ் கொலம்பியாவில் முதற்குடி மக்கள் தங்கள் பாரம்பரிய பழக்க வழக்கங்களைத் தொடரும் இடங்களில் 'பீஸ்றிவர்வலி' என்ற இடமும் ஒன்றாகும். முதற்குடி மக்கள் தங்கள் பாரம்பரிய தொழில்களான வேட்டையாடவும், மீன்பிடிக்கவும், பெர்றி மற்றும் மருத்துவச் செடிகளை பயிரிடுவதற்கும் இப்பகுதியைக் காலாகாலமாய்ப் பாவிக்கிறார்கள். இதைவிட பரம்பரையாக வாழ்ந்த அவர்களது மயானமும், சிறு தோட்டங்களும் இப்பகுதியிலேயே அமைந்திருக்கின்றன.

அதனால்தான் அவர்கள் இந்த அணைக்கட்டு திட்டத்தை மேலும் தொடராமல் கைவிடும்படி வழக்குத் தொடர்ந்தது மட்டுமல்ல, தங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கும்படியும் பொதுமக்களைக் கேட்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் உரிமைக்குரல் கொடுப்பவர்கள், தங்களது அமைதிப் போராட்டத்தை நிறுத்துவதற்காகத் தாங்கள் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்று நம்புகின்றனர். மோபேளி ஆற்று முகத்துவாரத்தில் (Moberly River) பாலம் ஒன்றை பிரிட்டிஷ் கொலம்பியா ஹைட்றோ நிறுவனத்தினர் கட்டுவதற்கு ஆரம்பித்த போதுதான் இப்பிரச்சனை பெரிதாகியது. அணை கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அந்த இடத்தில் இருந்து அப்புறப் படுத்தப்படுவர் என்று பி.சி. ஹைட்றோ நிறுவனத்தினர் தெரிவித்திருக்கின்றனர். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் 80 கிலோ மீட்டர் தூரம்வரை முதற்குடி மக்களின் குடியிருப்புக்களும், பாரம்பரிய நிலங்களும் பாதிக்கப்படலாம். ஆனால் எஞ்சியிருக்கும் அவர்களின் நிலத்தில் முதற்குடிமக்கள் தங்கள் பாரம்பரிய நடவடிக்கைகளைத் தொடரலாம் எனவும் ஹைட்றோ நிறுவனத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

முதற்குடி மக்களுக்குக் கொடுத்த வாக்குகளை அதாவது அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எப்படி இந்த அணைக்கட்டு முயற்சியில் காப்பாற்றுவது என்பது அரசுக்கு உள்ள கடமையாகும். சட்டத்தில் அல்லது உடன்படிக்கையில் உள்ள குறைபாடுகளை இருபகுதியினரும்




தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளவே விரும்புகிறார்கள். நீதிமன்றம் வரை முறைப்பாடு வந்தபடியால், நீதிமன்றம்தான் இவற்றை விரிவாக ஆராய்ந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். முதற்குடி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அதே நேரத்தில் நாட்டின் எதிர்கால சுபீட்சத்திலும் கவனம் செலுத்துவது நல்லது என்று சில அரசியல் வாதிகள் எதிர்பார்க்கின்றனர்.

சஸ்கச்சுவான் முதற்குடி மக்களில் சிலர் தாங்கள் வாழ்ந்த மீன்பிடி குடியேற்றத்தில் இருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். அங்கத்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

REVERSE MORTGAGE*, no monthly mortgage payments
Your money for the things that you want to take care of.
MORTGAGE ALLIANCE
• Renovation
• Pay for Wedding
• Consolidate Debts
• Help children with down payment
*Outstanding balance will increase over time
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704
Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530



# மைத்திரியின் விளக்கங்களை மக்கள் ஏற்கவில்லை

**- விகிர்தன் -**

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியமை, புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை நியமித்தமை, நாடாளுமன்றத்தை கலைத்தமை அமைச்சரவையை கலைத்துவிட்டு புதிய அமைச்சரவையை நியமித்தமை போன்ற தன்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டவை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது நியாயப்படுத்தி வருகின்றார்.

அரசியலமைப்பிற்கு முரணாக எந்தவொரு காரியத்தையும் தான் மேற்கொள்ளவில்லை என்று அவர் கூறுகின்றார். குறிப்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகள், வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் அவர் தனது செயற்பாடுகள் சரியானவையே என்று விளக்கம் கூறி வருகின்றார். ஆனால், அவரது இந்த நியாயப்பாடுகளை எவரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவரது இந்த செயல்கள் யாவும் ஜனநாயகத்திற்கு விரோதமானவை, அரசியல் சாசனத்திற்கு முரணானவை என்கின்ற விமர்சனங்களும், குற்றச்சாட்டுகளும் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிமைக்கான காரணங்களை அவர் முன்வைக்கின்றார். 2015 ஜனவரி 08ஆம் திகதி இலங்கை மக்கள் தன்னை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தனர் என்றும், அதற்கு காரணம் தூய்மையான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகவே என்றும், ஆனால், ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவிக்கு நியமித்து மூன்று மாதங்களாகும் போதே மத்திய வங்கி நிதி மோசடி இடம்பெற்றதனால் தனது தூய்மையான பயணத்திற்கு களங்கம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார். அடுத்ததாக, தன்னைக் கொலை செய்வதற்கு முயற்சித்தவர்களுடன் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் அவர் கூறுகின்றார்.

முதலாவதாக அவர் குறிப்பிடும் ரணில் மீதான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் பார்ப்போமானால், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீதான ஊழல் குற்றச்சாட்டு பாரியதொரு விடயமே. அர்ஜுன் மகேந்திரன் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பர். இதனால் முதலில் அவர் குற்றவாளி இல்லை என்று முதலில் அவரைக் காப்பாற்ற ரணில் விக்கரமசிங்க முயன்றார். அர்ஜுன் மகேந்திரன் மீதான குற்றச்சாட்டுக்கள் இறுக்கமான கட்டத்திற்கு வந்தவுடன்- அவர் வெளிநாடொன்றில் தலைமறைவானதுடன்- அவரை நியாயப் படுத்தும் கருத்துகளை வெளியிடுவதை ரணில் தவிர்த்துக்கொண்டார். எனினும், தலைமறைவாகியிருக்கும் அர்ஜுன் மகேந்திரனை பாதுகாக்க ரணில் முற்படுகின்றார் என்கின்ற சந்தேகம் பலருக்கும் உள்ளது.



அத்துடன், தனது கட்சியைச் சார்ந்த அமைச்சர்களின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துகின்ற, அவர்களை முறையாக முகாமைப்படுத்துகின்ற விடயங்களிலும் ரணில் சரியாக செயற்படவில்லை என்கின்ற விமர்சனமும் உள்ளது. இதற்கெல்லாம் முறைப்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறி-சேன நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தன்னைக் கொலை செய்யும் சதித் திட்டத்தில் பிரதமராகவிருந்த ரணில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று கூறுவது பாரிய தொரு குற்றச்சாட்டாகும். இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு ஆதாரங்களை கண்டறியாமல் அதிரடியாக நடவடிக்கை எடுப்பதென்பது தவறானதாகும்.

கூட்டரசாங்கத்தில் பங்காளிகளாக இருக்கும் சிறுபான்மைக் கட்சிகளை அழைத்து இது தொடர்பில் முதலில் விளக்கியிருக்க வேண்டும். ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும். நடைபெற்ற ஆட்சிமாற்றத்திற்கு முக்கிய பங்களித்த வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழைத்து நிலைமைகளை விளக்கியிருக்க வேண்டும்.

இவை எதனையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொள்ளவில்லை. 'நாட்டின் தலைமை நிர்வாகி என்ற வகையில் எனக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தின் படி உங்களை பிரதமர் பதவியிலிருந்து உடனடியாக நீக்குகின்றேன்' என்று மட்டும் குறிப்பிடப்பட்ட கடிதத்தை ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவிட்டு, அடுத்த காரியமாக உடனடியாகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை பிரதமராக அவர் நியமித்தார்.

நாடாளுமன்றத்தில் மஹிந்தவிற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக தமிழ், முஸ்லிம் கட்சிகள் அறிவித்ததன் பின்னர் அக்கட்சிகளை அழைத்து மைத்திரி கலந்துரையாடினார். தங்களுக்கு ஆதரவாக வாக்களிக்கும் படியும், இல்லாவிட்டால் நடுநிலை வகிக்கும் படியும் அக்கட்சிகளிடம் கேட்டுக்கொண்டார். இதன்போதுதான் ரணில் விக்கரமசிங்க மீதான குற்றச்சாட்டுக்களை அவர் அக்கட்சிகளிடம் விளக்க முற்பட்டார். தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்தினார்.

எல்லாவற்றையும் தனது விருப்பத்தின்படி, ஒரு சர்வாதிகாரி போன்று செய்துவிட்டு பின்னர் நியாயப்பாடுகளை முன்வைக்கும் அவரது போக்கை நேரடியாகவே அவரிடம் சிறுபான்மைக் கட்சிகள் சுட்டிக்காட்டின. கூட்டரசாங்கத்தில் பங்காளியாகவுள்ள மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியினரை ஜனாதிபதி மைத்திரி சந்தித்தபோது, 'முன்னரே எங்களிடம் இது சம்பந்தமாக ஏன் கலந்துரையாடவில்லை?' என்று மனோ கணேசன் வினவியபோது அதற்கு ஜனாதிபதி மௌனமாக இருந்திருக்கின்றார்.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க, இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜே.வி.பி முதலான கட்சிகள் மைத்திரி - மஹிந்த தரப்பிற்கு எதிராக எடுத்திருக்கும் நிலைப்பாடானது ரணில் விக்கிரமசிங்கவிற்கோ, அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கோ ஆதரவான நிலைப் பாடு அல்ல. நடைபெற்ற காரியங்கள் ஜனநாயகத்திற்கு விரோதமானவை என்பதற்காகவே இக்கட்சிகள் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

குடும்ப ஆட்சியுடன், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பேணாத மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் ஆட்சிக்கு வருவதையும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் விரும்பவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஸவை தவிர்த்து வேறொருவரை பிரதமராக்கி இருந்தால் கூட ஜனாதிபதி மைத்திரி குறித்த மரியாதை இந்தளவிற்கு குறைவடைந்திருக்காது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் மஹிந்தவிற்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர் மைத்திரிபால சிறிசேன.

இலங்கையின் அனைத்து நிர்வாகக் கூறுகளும் மஹிந்த ராஜபக்ஸ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், மஹிந்தவின் ஆட்சி ஊழல் மோசடி நிறைந்தது எனவும் அவர் மக்கள் மத்தியில் பரப்புரை செய்தார். பகற்கொள்ளையர்கள் மஹிந்தவின் நண்பர்களாக இருக்கின்றனர் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்களை, அமைச்சர்களை பயமுறுத்தி செயலிழக்கச் செய்திருக்கிறார்கள் எனவும், முப்படையினர் அனைவருமே ராஜபக்ஸ குடும்பத்தின் பகடைக்காய்களாக மாறியுள்ளனர் என்றும் அவர் அப்போது கூறினார்.

மஹிந்த அரசாங்கத்தில் தான் சுகாதார அமைச்சராக இருந்தபோது, அமைச்சின் நடவடிக்கைகளை சீராக செய்ய முடியாமல் போனதையும், ஒரு கலந்துரையாடலின் போது அதிகாரிகள் முன்னிலையில் அமைச்சரான தன்னை மஹிந்த அவமானப் படுத்தியதையும் ஒரு முறை மைத்திரி சுட்டிக்காட்டியிருந்தார். இப்படியெல்லாம் மஹிந்தவைப் பற்றிக் கூறியவர் அவரையே மீண்டும் பிரதமராக்கி களத்திற்கு கொண்டு வந்திருப்பது பொதுமக்களுக்கு மிகுந்த அதிர்ச்சியளிப்பதாகவே அமைந்து விட்டது.


தாம் பதவிக்கு வந்தால் நூறு நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப் போவதாக ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். ஆனால் அது நடக்கவில்லை. மாறாக, ஆட்சிமாற்றம் ஏற்பட்டு நான்கு வருடங்களாகும் முன்னரே தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி அரசியல் சாசனத்தையும், ஜனநாயக நெறி-முறைகளையும் மீறி செயற்பட்டிருக்கின்றார். அதனையும் விட தன்னை ஜனாதிபதி யாக்கிய மக்களுக்கும் துரோகம் செய்தவராகியுள்ளார். இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது சொல்லும் கருத்துக்களை, விளக்கங்களை மக்கள் ஏற்கத் தயாராக இல்லை.

**தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாந்து போகிறான்.**

28 கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்நாதன்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்

## மைய சரணாலயம்

மேல் நிலைக்கு மேல் அடுக்கு, அடித் தளத்தின் மீது மைய சரணாலயம் அமைந் திருக்கிறது. ஐந்து கோபுரங்களிலே இதுவே மிகவும் உயரமானது. இக்கோபுரம் பாரிசில் உள்ள நோட்டார் டாம் கிறிஸ் துவக் கோயிலின் உயரத்துக்கு இணையா னது. முக்கியத்துவம் வாய்ந்த திசைகளை நோக்கி திறந்தவாறுத் தோன்றும் நான்கு மூன்றடுக்குத் தாழ் வாரங்களை ஆரம் பத்தில் கொண்டிருந்தது இக்கோபுரம். 15ஆம் நூற்றாண்டின் நடுவில் ஆங் கோரின் வீழ்ச்சிக்குப் பிறகு முக்கியமான மையப் பகுதி சில காலத்துக்குச் சுவரால் சூழப்பட்டிருந்தது. சுமார் 500 ஆண்டு களுக்குப் பிறகு பிரான்சு நாட்டுத் தொல் பொருள் ஆய்வாளர்கள் மேல் நிலை மையத்தின் பரப்பின் கீழே தங்கப் புதையல் மறைத்து வைக்கப்பட்டிருந்த 27 மீட்டர் (89 அடி) நீளமுள்ள சுரங்க வாயிலை கண்டுபிடித்தனர்.

உச்சியில் இருந்து பார்த்தால் அங்கோர் வாட்டின் தோற்றம் மிக எழிலாகக் காட்சியளிக்கிறது. இத்தோற்றம் இசைவான பொருத்தமுடன் மெரின் கட்டிடக் கலையின் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கற் பனைக்கு எட்டாத அளவுக்குத் தோன்றும் இதன் அழகு ஆராதனைக் குரியது. இதன் உயரம் நடுக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பிரமாண்டமானது எனப் பதிவு செய்துள்ளார்.

## பேஸ் - சித்திரங்களின் அரங்கு

“தனது அழகால் முதலில் இது அனைவரையும் கவருகிறது. பிறகு தனித்துவமான தன்மையினால் அனை வரின் கவனத்தையும் ஈர்க்கிறது” என்று சர்ச்சில் காண்டே எழுதியிருக்கிறார்.
பேஸ் - சித்திர அரங்கு முதல் நிலை அங்கோர்வாட்டால் சூழப்பட்டிருக்கிறது. இங்கே 1200 சதுர மீட்டர் (12917 சதுர அடி) தொலைவுக்கு மணற்பாறை சிற்பங்கள் இருக்கின்றன. “அரங்கின் நான்கு உட்புறச் சுவர் முழுக்க சித்திரங்கள் அலங்கரிக்கின்றன. இந்தச் சித்திரங்களின் தகவல்கள், தரம், கலவை மற்றும் அவைகளைச் செயல்படுத்திய திறமை யாவும் ஈடு இணையற்ற கலை அம்சங்கள். சித்திரங்கள் மீது வெளிச்சமும், நிழலும் கவர்ச்சியூட்டும் விதமாக தோன்றுகின்றத் தூண்கள் அரங்கின் வெளிப்புறச் சுவரில் அமைக்கப் பட்டிருக்கின்றன. சுவரில் பொருத்தப் பட்டிருக்கும் அலங்காரம் ஓவியக் காகிதம் போல் காட்சி அளிக்கும் இவை ஒரு சிற்பியின் படைப்பாகத் தோன்றாமல் ஓவியர்கள் தீட்டிய சித்திரம் போல் திகழ்கின்றன. பேஸ், சித்திரங்கள் கண்ணைப் பறிக்கும் எழில் கொண்டவை. எங்கே பார்த்தாலும் உன்னதமான மேன்மையை உணர முடிகிறது” என்று 50 ஆண்டுகளுக்கு முன் பார்வையாளர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

சதுர அரங்கின் ஒவ்வொரு சுவரிலும் இரண்டு பகுதிகளாக மொத்தம் எட்டுப் பகுதிகளாக பாஸ் - சித்திரங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு கருத்தைச் சொல்கின்றது. மேற்கு அரங்கின் மூலையில் சேர்ந்திருக்கும் இரண்டு கூடாரங்களில் விதவிதமான காட்சிகள் உள்ளன. சில மிகவும் மோசமாக சிதைந்துள்ளன. சிலவற்றை அடையாளம் காண முடிய



வில்லை. இங்கே உள்ள சித்திரக் கலவை இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று உள்ளடக்கத்தை தனக்குள்ளே கொண்டிருப்பது அல்லது உண்மை சுகத்தை, பிரித்துக்காட்டுவது. இரண்டாவது ஒன்றின் மீது ஒன்று பொருந்திய முகப்புப் பரப்பு உள்ள காட்சிகள். இந்த முகப்பரப்பு சுவரை தொடர்ந்து படுக்கையாக இரண்டு அல்லது மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது.

இந்தியப் புராணங்களிலிருந்தும், பக்தி நூல்களிலிருந்தும் அங்கோர் காலத்துப் போர்களிலிருந்தும் எடுக்கப்பட்ட காட்சி களே பேஸ் - சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சிற்பங்கள் சூரியன் உதிப்பதையும் அஸ்தமிப்பதையும் விளக்குகின்றன.

பேஸ் என்ற சொல்லுக்கு கீழே அல்லது ஆழமின்மை என்று பொருள். மேலும் சிற்பங்களின் அமைப்பையும் குறிக்கிறது.

சிற்பங்களில் பல மேற்பரப்பில் பளப்பளப் பாகக் காட்சியளிக்கின்றன. இவை பளப்பளப்பாகக் காட்சியளிப்பதற்கு பார்வையாளர்கள் இவற்றை தமது கைக-ளால் தேய்ப்பதே என்று ஒரு சாராரும், இவற்றின் மீது மெழுகு எண்ணெய் பூசப்பட்டதால் இவை பளப்பளப்பாகத் தோன்றுவதாகச் சில வரலாற்று அறிஞர்களும் கூறுகின்றனர்.

பொன் முலாமும் வண்ணமும் குறிப்பாக கறுப்பு, சிவப்பு நிறங்களில் சில சிற்பங்களில் படிந்திருக்கின்றன.

பண்டைய காலத்துக் கலை மரபுகள் பேஸ் சிற்பங்களில் காணக் கிடக்கின்றன. படுக்கை நிலையில் உள்ள இணைக்



கோடுகளின் இடையில் நீந்தும் மீன்கள் உள்ள சிற்பம் ஆற்றை குறிக்கிறது. எகிப்திய கலைகளில் உள்ளதுபோல் ஒரு மனிதனின் தகுதி சிலையின் அளவால் சுட்டிக்காட்டப்படுகிறது. உயர்ந்த தகுதியில் இருந்த மிகப்பெரிய அளவில் சிலை. போர்க்களக் காட்சியில் படை தளபதியின் பெருமைமிக்க குடையின் மீது ஒடிந்து வீழ்ந்து கிடக்கும் அம்புகள் தோல்வியை விளக்குகிறது. அகண்டு வளைந்த கால்களோடு பறக்கும் தோற்றம் கொண்ட சிலைகளும் காட்சியளிக்கின்றன.

பேஸ் சித்திரக் கூடத்தில் சுற்றி வருபவர்கள் பார்க்கும் இடமெல்லாம் புதிய புதிய படைப்புகளைக் கண்டு, அங்கோர் அனுமதிக்கும் மற்ற மகிழ்ச்சிக்கு மீண்டும் மீண்டும் திரும்புவார்கள்.

இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாகப் பார்க்கும் விதத்தில் அங்கோர் வாட்டின் பேஸ் சித்திரக்கூடம் வடிவமைக்கப் பட்டிருக்கிறது.
1 மேற்கு அரங்கு - குருசேத்திரப் போர்



3 தெற்கு அரங்கு - இரண்டாம் சூரியவர்மனின் படை
4 தெற்கு அரங்கு - எமனின் தீர்ப்பு. சொர்க்கம் - நரகம்
5 கிழக்கு அரங்கு - பாற்கடலை கடைதல்
11 மேற்கு அரங்கு - இலங்கைப் போர்.

தொடரும்...)



TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை
Call 416 291 5155 for Details
Knowledge is Power



ACCOUNTING & PAYROLL ADMIN.
55 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH ,2019
EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH ,2019
PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Accredited by the National Association of Career Colleges
STARTS JAN. 7TH ,2019
PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities
COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma

Second Career candidates & International Students Welcome

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016 , Access 2016
Quick Books 2017
Sage 50 Accounting 2017
Sage 300 2017 , Auto CAD
First Aid & CPR
Food Handler Certification

● 100% Instructor Led Training ● Small Class Sizes
● Placement Assistance ● Ample Free Parking

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# தொழில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மில்லியன் பெறுமதியான வருமானவரி விலக்கு அளிக்கப்படக்கூடிய திட்டங்களும் இந்த வரவு செலவுத்திட்ட மீளாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் அடுத்த ஆண்டு சமர்ப்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத்திட்டதிலேயே தெரிவிக்கப்படும். அடுத்த நிதியாண்டான 2019/2020இல் இந்த ஊடகத்துறைசார் நிறுவனங்களுக்கான வருமானவரி விலக்குத் தொகை $45 மில்லியனாக இருக்கும்.

இவ்வரிவிலக்கு கனேடிய ஊடகங்கள் செய்தித்தயாரிப்பில் செலவிடும் தொழிலாளர்களது சம்பளத்தின் ஒரு பகுதிக்கும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இலாபநோக்கற்ற ஊடகங்களுக்கு (Non -profit media) வரிவிலக்குப் பெறக்கூடிய தொண்டு நிறுவன (Charitable status) அந்தஸ்து வழங்க வசதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ஊடகங்கள் தமது சந்தாதாரர்களுக்கு அவர்கள் கட்டும் சந்தாப் பணத்திற்கு வரிவிலக்குப் பற்றுச்சீட்டை வழங்கமுடியும்.

ஊடகங்களுக்கு லிபரல் அரசு வருமானவரி விலக்கு அளிப்பது ஊடகங்களை லிபரல் கட்சிக்குச் சார்பாக எழுத ஊக்குவிக்கும் முயற்சி என பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Peter Kent தெரிவித்துள்ளார். Peter ஒரு முன்னாள் ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.



Lisa Raitt

பழமைவாதக் கட்சியின் துணைத் தலைவரான Lisa Raitt, CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில் கனேடிய மத்திய அரசின் பொதுத்தேர்தல் அடுத்த வருடம் வர உள்ள நிலையில் லிபரல் அரசு ஊடகங்களுக்கு வருமானவரி விலக்கு அளிப்பது ஊடகங்கள் லிபரல் கட்சியின் சார்பு நிலையை எடுக்க வழிவகுக்கும். அதனால் ஊடகங்களின் மீதான கனேடியர்களின் நம்பிக்கையை அது மேலும் குறைக்கும் என்றார்.

இவற்றைவிட இந்த வரவுசெலவுத் திட்டத்திற்கான இலையுதிர்கால மீளாய்வில் பின்வரும் விடயங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

• மீன் வளத்தைப் பேணுவதற்கு அடுத்த



ஐந்து ஆண்டுகளுக்கு $202 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• கனடாவின் வடபகுதியில் இருக்கும் மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்திற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $62.6 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• பனிச்சரிவுப் பாதுகாப்புத்திட்டங்களுக்கு $25 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• இலாப நோக்கற்ற மற்றும் தொண்டு நிறுவனங்களின் சமூகநலத்திட்டங்களுக்கு உதவ அடுத்த பத்து ஆண்டுகளுக்கு $755 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• பிரெஞ்சு மொழி பொதுசன ஊடகங்களுக்கு அவற்றை இலத்திரனியல் ஊடகங்களாக மாற்றுவதற்கு உதவ அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $14.6 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• புதுமையான கண்டுபிடிப்புக்களை தொழில் நுட்பங்களில் பிரயோகிப்பவர்களுக்கு உதவுவதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $800 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• கனேடிய ஏற்றுமதியை பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்தும் முயற்சிகளுக்கு உதவ அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு $1.1 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கனடாவின் ஏற்றுமதி 2025ஆம் ஆண்டில் தற்போது உள்ளதைவிட 50%ஆல் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருமளவு தொகை பெருந்தெரு, தொடருந்துப் பாதை மற்றும் துறைமுக அபிவிருத்தி போன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டில் முதலிடப்பட உள்ளது.


## தொல்காப்பிய மன்றம் - கனடா

# ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2018

கனடா தொல்காப்பிய மன்றத்தின் பொதுக் கூட்டத்திற்கும் செயலவை உறுப்பினர் தெரிவிற்குமான அறிவித்தல். நடப்பாண்டு உறுப்பினராகத் தம்மைப் பதிவு செய்து உறுப்புரிமை பெற்றுக்கொள்ளும் அனைவரும் இக்கூட்டத்திற் பங்கேற்க உரித்துடையவர்கள். பதிவிற்கான படிவங்களைத் தொல்காப்பிய மன்ற இணையத்தளத்திற் பெற்றுக்கொள்ளலாம். www.tolcappiyam.ca. அங்கத்தவருக்கான பதிவுகள் 15.12.2018 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆண்டுச் சந்தா: $15.00 தொடர்புகளுக்கு:

தலைவர்: 416-546-1394, செயலாளர்: 905-479-5375, பொருளாளர்: 647-224-8871

கூட்ட நாள்: 23.12.2018 ( Sunday, December 23rd 2018)

நேரம்: மாலை 3.30 மணி

இடம்: 150, ஸ்காபரோ சிவிக் சென்ரர். (Scarborough Civic Centre)

த. சிவபாலு சபா. அருள்சுப்பிரமணியம்

தலைவர் 647-403-4965 செயலாளர் 647-706-6124

# வருமானவரி செலுத்துவதில் மோசடிகள் செய்து கனடாவில் சிறைத் தண்டனையினை எதிர்கொண்டவர்களின் கதைகள்!

## கனடிய தகவல் தொடர் 296




"விளம்பரம்" பத்திரிகையின் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எச்சரிக்கையாக பின்வரும் விடயங்களை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன்.

கடந்த இதழில் கனடாவில் சிறைத் தண்டனையை எதிர்கொண்ட வருமானவரி தொழில் சார்ந்தவர்கள், ஆலோசகர்களின் கதைகளைப் பார்த்தோம்.

இவ் இதழில் வருமானவரி செலுத்துவதில் மோசடிகள் செய்து சிறை சென்றவர்களின் கதைகளை பார்பபோம்.

செலுத்தத் தவறிய வரி, அதற்கு ஒரு வட்டி, தவறியதற்கு ஒரு தண்டனை, இவற்றினை காலதாமதம் செய்து உதாசீனம் செய்தால் மேலதிக தண்டனை என மோசடிகளின் தொடர்ச்சி என்பது பாரிய நிலைமைக்கு வந்தால் அடுத்த நகர்வு சிறை தண்டனை. இப்படி கனடாவின் பல ஆங்கில ஊடகங்களில் வெளியான 6 கதைகளை இங்கே நான் தருகிறேன். தொடர்ந்து படியுங்கள்.

1. வருமான வரி ஏமாற்றுகையில் தண்டனைப் பணம் செலுத்தாமையால் ஐந்து வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பல் வைத்தியர். (Dentist charged with tax evasion given extra 5 year sentence for evading fine) என்னும் தலைப்பில் செய்திக் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. ஆதாரம்- Global News, Oct. 19, 2016.

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் தொழில் செய்யும் டாக்டர் ரானியா ஹொவாலுக் (Dr. Tania Kovaluk) என்ற பல் வைத்தியர் இப்படியானதொரு தண்டனையினை எதிர்கொண்டிருந்தார். அதி உச்ச வருமானம், ஆடம்பர வாழ்க்கை எனப் பல இருந்தாலும், கனடிய அரசுக்கு வருமான வரி செலுத்தக் கூடாது என்ற ஒரு முரட்டுத் தனமான கோட்பாட்டினை பின்பற்றும் இந்தப் பல் டாக்டருக்குக் கிடைத்த தண்டனை இது என செய்தியில் வெளியிடப் பட்டிருந்தது.

2. திரு. வொல்ஹொங் ஜோன் வில்ம் (Mr. Wolfgang John Wilm) என்பவருக்கு கடந்த ஜனவரி 20, 2017இல் 'நியூமார்க்கட்' நகரில் உள்ள மாகாண நீதிமன்றம் (Ontario Court in Newmarket) தமது சுயதொழில் மூலம் 2007-2010ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பெற்றுக்கொண்ட சுமார் $2.08 மில்லியனை மறைத்த குற்றத்திற்காக இருபது மாதங்கள் சிறைத் தண்டனையுடன் மற்றும் செலுத்த வேண்டிய வரி, தண்டனைப் பணம் என மொத்தமாக $552,000 கட்டவேண்டுமென தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆதாரதம் - Durham Region.com, Jan. 29th, 2017.




3. மனிற்றோபா மாகாணத் தலைநகர் வினிபெக் நகரில் 'வர்ம முறை மருத்துவர்' (Chiropractor) தொழிலினை செய்து வரும் 53 வயதான 'றொஸாலி ஹொபோற்றர்" (Ms. Rosalie Chobotar) என்பவர் 2001-2008 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் $162,500ஐ தொகை வருமான வரியாகச் செலுத்தாமல் மோசடி அறிக்கைகள் சமர்ப்பிப்பதன் மூலம் ஏமாற்றிய குற்றத்திற்காக ஆறுமாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆதாரம் - Winnipeg free press, Feb. 28th, 2012.

4. வருமான வரி மோசடியில் சிறை செல்லும் இரு வினிபெக் வர்த்தகர்கள். (Two Winnipeg Businessmen Going to Prison for tax evasion) என்று சி.பி.சி செய்திப் பிரிவில் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. திரு. ஜெவ் டிஷ்க் (Mr. Jeff Dysk), திரு. நீய்ல் பிரிஜ்ஷின் (Mr. Neil Friesen) ஆகிய இருவரும் வினிப்பெக்கில் 'One World United Inc." என்னும் நிறுவனப் பெயரில் முதலீட்டு கம்பனி நடத்தும் பங்குதாரர்கள்.

அவர்களின் வருமானங்களை அரசுக்குக் காட்டுவதில் மோசடிகள்செய்து பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்கள். இவர்களுக்கு ஒரு மில்லியன் தண்டனைப் பணமும், மூன்று வருட சிறைத்தண்டனையும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்பீல்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)

## வாசகர் கடிதம்

2018 நொவம்பர் 15இல் வெளிவந்த "விளம்பரம்" பத்திரிகையில் சிவ பஞ்சலிங்கம் அவர்கள் வெளிக்கொணர்ந்த "சிறை தண்டனையை எதிர்கொண்ட கனடாவின் வருமானவரி தொழில் ஆலோசகர்" என்னும் தலைப்பில் தண்டனையினை எதிர்கொண்ட ஐந்துபேரை ஆதாரங்களுடன் பகிரங்கத்திற்குக் கொண்டுவந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளார். இந்தத்தகவல் கட்டுரை இதே தொழிலை கனடாவில் செய்யும் எங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்காபரோவில் கணக்கியல், கணக்காய்வுகள், வருமானவரி மனுசெய்தல், வருமான வரி நிறுவனத்தின் புலனாய்வுகள், பரிசோதனைகள், கணக்காய்வுகளுக்கு வாடிக்கையாளர்கள் சார்பில் வருமானவரி நிறுவனத்துடன் சமூகமளிப்பது என்பன எங்கள் நிறுவனத்தின் தொழில் ஆகும்.

இத்தொழில் துறையில் எப்படியான பிரச்சினைகள், எந்தெந்த ரூபத்தில் தொழில் செய்வோரைத் தேடிவரும், வருமானவரி செலுத்துவோரையும் பாதிக்கும் என்பது எங்கள் தொழில் துறையில் நாம் பெற்ற அனுபவங்கள். இதனை பொதுமக்களும் சரியாக, சந்தேகத்திற்கு இடமில்லாது புரிந்து கொள்ளவேண்டும் என்பதே எங்கள் நிறுவனத்தின் வேண்டுகோளாகும்.

முன்னைய வருடங்களில் விண்ணப்பப் படிவங்களில் வருமானவரி பத்திரங்களை பூர்த்தி செய்து அவர்களின் கைகளில் நாம் கொடுத்தோம். அவர்களாகத் தபாலில் அனுப்பிக் கொள்வார்கள். இந்த முறையில் தொழில் செய்யும்போது வருமானவரி ஆலோசர்களாகத் தொழில் செய்பவர்களுக்கு எதுவிதமான ஆபத்துகளும் உருவாகமாட்டாது. ஆனால் இன்றைய காலங்களில் எமது நிறுவனத்தின் பெயரில் மின் அஞ்சல் மூலமாக வருமானவரிப் பத்திரங்களை அனுப்பி வைக்கிறோம். ஏதாவது தவறுகள், மோசடிகள் என செய்தால் ஆபத்துகள் எங்களையும் சேரும்.

வருமான வரிக்கு செலுத்திய பணம் முழுவதனையும் எப்படி மீளப் பெறுவது? அல்லது சுயதொழில் செய்வோர் வருமான வரி சட்டங்களுக்கு அப்பால் சில செலவுகளைக் காட்டி வரி செலுத்துவதனை எப்படி தவிர்ப்பது? அல்லது போலியான செலவுகளை காட்டி வரி செலுத்தாமல் தப்புவது எப்படி? போன்ற நோக்கங்களுக்காக வருமானவரிப் பத்திரங்களை தவறாகப் பூர்த்தி செய்தால் சட்டங்கள் எங்களை குற்றம் சாட்டும். இங்கு திரு. சிவ. பஞ்சலிங்கம் வெளிக்கொணர்ந்தது சிறை சென்றவர்கள் ஐந்து பேரின் கதைகள் மட்டுமே. ஆனால் தேடிப் பார்த்தால் கனடாவின் வரலாற்றில் வருமானவரி நிறுவனத்தின் குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்ட சுமார் ஐயாயிரம் பேரின் கதைகளைக் காணலாம்.

கனடாவின் வருமானவரி சட்ட ஒழுங்கு விதிகள், மரபுகளை மீறி வாடிக்கையாளர்களுக்கு உதவி செய்யப்போய் ஆபத்துக்களை எதிர்கொள்வது போன்ற அறியாமை முதலில் தவிர்க்கப்படல் வேண்டும். மக்களுக்குத் தெளிவுரைகளை வழங்கும் விழிப்புணர்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்படுவது இன்றைய புலம்பெயர்வாழ்வில் முக்கியமான விடயமாகும். அதில் "விளம்பரம்" பத்திரிகையின் பணி மகத்தானது.

***Yogan Sangarapillai***
***InterSol Professional Corporation***

**RESTAURANT FOR SALE**

**Established Money Making Business.**

**SPORTS BAR & GRILL**

in the heart of

**NEWMARKET.**

(Davis Dr. & Main St.)

Gross rent $9400.

Lease until 2021+5 years Option.

Currently doing

$700,000 in sales per year.

Seats 189.

BIG DADDY Asking Price: $198,877

**Contact : 416.399.6640**

# இன்னல் நீக்கும் இயற்கை – 38



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!.

தமிழகத்தில் புகழ்பெற்ற சித்த மருத்துவர் சிவராமன் அவர்கள் தெரிவிக்கும் சில கருத்துக்களோடு இன்றைய உரையாடலை ஆரம்பிப்போம். "பிரபஞ்சத்தில் உள்ள கூறுகளே எங்கள் உடம்பிலும் உள்ளது. பிரபஞ்சத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் எல்லாம் எங்கள் உடம்பிலும் எதிரொலிக்கும். அதே போன்று எங்கள் உடம்பில் மாற்றங்களும் பிரபஞ்சத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்." என்ற கருத்தை உள்ளடக்கியதே சித்த மருத்துவம் என்று ஒரு உரையாடலில் சித்த மருத்துவர் சிவராமன் கூறியதைக் கேட்டிருக்கின்றேன். நல்ல உணவுகள் உற்பத்தியில் பின்தங்கச் செய்வதில் அரசியல், மற்றும் வர்த்தகக் காரணங்களும் முக்கிய காரணிகளாக உள்ளன என்று சித்த மருத்துவர் சிவராமன் கூறியுள்ளார். சிறு தானியங்கள் ஆசியாவில் உள்ள மக்களுக்கு மரபுவழியாக அதிகளவு சர்க்கரை நோயிற்கான சாத்தியம் உண்டு என்று அவர் குறிப்பிடுகிறார். வெள்ளை அரிசியும், வெள்ளைச் சீனியும் சர்க்கரை நோய்க்கான முக்கிய காரணியாக உள்ளன என்பதும் அவர் கருத்து. எப்பொழுதும் தவிட்டுடன் கூடிய சிவப்பு அரிசி சாப்பிடுவதும், வெள்ளைச் சீனியைத் தவிர்த்து பிறவுண் சீனியைப் பயன்படுத்துவதும் ஆரோக்கியமானது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். ஆனாலும் இதை முற்றாக அமல்படுத்துவது மிகவும் குறைந்தளவு எண்ணிக்கையானவர்கள் மட்டுமே. உணவுக்கு அடுத்தபடியாக நமது ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவது எங்கள் மனம்.

நமது சூழலில் ஏற்படும் வன்முறைகளும் உடல் நலத்திற்கு பாதிப்பாக உள்ளன. கிருமிநாசினிகளின் பயன்பாடு விவசாயத்தில் அதிகமாகக் காணப்படுவது நமது உடல்நலத்தில் பெரும் பாதிப்பாக உள்ளது. நமது உடலுக்கு ஆரோக்கியமான பல உணவுப்பொருட்கள் நச்சுப்பொருட்களைக் கொண்டதாக மாறிவிடுகிறது. பால் உணவை அதிகமாகப் பயன்படுத்தும் பொழுதும் பாதிப்பு ஏற்படுகிறது. இதற்கு பாலில் காணப்படும் நச்சுப்பொருட்களும் காரணமாக அமைந்து விடுகிறது. கருஞ்சீரகம் மிகவும் மருத்துவப் பயன்பாடுள்ள உணவு என்று சித்த மருத்துவர் சிவராமன் அவர்கள் குறிப்பிடுகின்றார். நபிகள் கருஞ்சீரகத்தைப் பற்றி கூறியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. உணவு உண்பதற்கு முன்பு பழங்கள் சாப்பிட வேண்டும். நிறைய பழங்களைச் சாப்பிட வேண்டும். அதிக இனிப்பான பழங்கள் வேண்டாம். துல்லிய கறுப்பு விதைகளைக் கொண்ட நாட்டு வாழைப்பழங்களை உண்ணுவது நல்லது. ஒவ்வொரு விதமான வாழைப்பழத்திலும் வெவ்வேறு விதமான சத்துக்கள் உள்ளன.

தக்காளிப்பழம் மிகவும் முக்கியமான பழம். சிவப்பு நிறமான உணவுகள் எல்லாமே நல்லது. பழங்களின் நிறங்களை வைத்துக் கொண்டே அவற்றின் பயன்பாடுகளை ஊகித்துக் கொள்ளலாம் என்கின்றார் சித்த மருத்துவர் சிவராமன் அவர்கள். இவர் மூலமாக ஊடகங்களில் வெளிவரும் இயற்கை உணவுபற்றிய தகவல் மிகவும் பெறுமதியானதாக உள்ளது. இவற்றை அறிந்து பயனடையுங்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



இப்பொழுது கருஞ்சீரகத்தின் மருத்துவப் பயன்பாட்டைப் பற்றி அறிந்து கொள்ளுவோம். கருஞ்சீரக எண்ணெய் பக்கவாத நோயைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது. கருஞ்சீரகத்தை அரைத்து நெற்றியில் பூசிப் பற்று போட்டால் தலைவலி குணமாகும். கருஞ்சீரகத்தை அவியவைத்து வாய்கொப்பளித்தால் பல்வலி குணமாகும். வயிற்றோட்டத்தைக் குணப்படுத்தும். கன்னம், காது போன்ற பகுதிகளில் வீக்கம் ஏற்படும்பொழுது அரைத்த கருஞ்சிரகத்தை வெற்றிலைச் சாற்றில் கலந்து வீக்கம் உள்ள இடத்தில் பற்று போட்டால் குணமாகும். கருஞ்சீரகத்தூளை தயிரில் கலந்து சாப்பிட்டால் சமிபாடு சீராகும். வாயுக்கோளாறுகள் நீங்கும். வறுத்து அரைத்த கருஞ்சீரகத் தூளை எண்ணெய்யில் கலந்து மூக்கில் துளிகளாக இட்டு வர சளி. தலையிடி ஆகியவை குணமாகும் காய்ச்சல், மூக்கடைப்பு, குறட்டை ஆகியவற்றுக்கும் கருஞ்சீரகம் நல்லது. தூளாக்கிய கருஞ்சீரகத்தை தேனில் கலந்து வெந்நீருடன் சாப்பிட்டால் சிறுநீரில் ஏற்படும் கற்களைக் கரைக்கும். கருஞ்சீரகத்தை நீருடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் சுவாசக் கோளாறு சீரடையும். தோல் நோய்களைக் குறைக்கும். பசியைத் தூண்டும் தன்மை கொண்டது. தொண்டையில் ஏற்படும் தொற்று நோய்களுக்கும், தொண்டை அரிப்பு ஆகியவற்றிற்கு கற்சீரகம் நல்ல மருந்தாகும். பெண்களுக்கு கருப்பை வலுவடைய கருஞ்சீரகம் உதவும். கருஞ்சீரகத்தை வறுத்து பனைவெல்லத்துடன் கலந்து காலையும், மாலையும் சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் கோளாறுகளைக் குணப்படுத்தும்.

தலையில் பொடுகு, தொற்று நோய்கள் ஆகியவை ஏற்பட்டால் குணப்படுத்தும் தன்மை கருஞ்சீரக எண்ணெய்க்கு உண்டு. கருஞ்சீரக எண்ணெய், ஒலீவ் எண்ணெய் ஆகியவற்றை சமவளவில் எடுத்து தலைக்கு பூசி மசாஜ் செய்து அரைமணி நேரம் கழித்து தலையைக் கழுவிக் கொண்டு வர முடி உதிர்தலைக் தடுக்கலாம். கருஞ்சீரகம் பித்தக் கோளாறுகளுக்கு நல்லது. கண்வலிகளையும் குறைக்கும். தென்னிந்தியாவைச் சேர்ந்த மருத்துவர் கருஞ்சீரகம் எல்லா நோய்களுக்கும் நிவாரணியாக உள்ளது என்று கூறியிருக்கின்றார். புற்றுநோயைத் தடுப்பதில் கருஞ்சீரகம் பெரும்பங்கை வழங்கக் கூடியது. கருஞ்சீரக தேனீர் செய்து குடித்து வந்தால் உடலில் உள்ள கலன்கள் வலுவடையும். ஓமம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம் மூன்றும் சமவளவில் கலந்து 10 நிமிடங்கள் வரையில் கொதிக்க வைத்து கருஞ்சீரகத் தேநீரை குடித்து வந்தால் நிறைந்தளவு பலன் கிடைக்கும். மரணத்தை தவிர எல்லா நோய்களுக்கும் நல்லது கருஞ்சீரகம் என்று சொல்லப்படுகின்றது. மார்பு வலி உள்ளவர்களுக்கும் நல்ல மருந்து. பூச்சிக்கடிக்கும் கருஞ்சீரகம் நல்லது. மார்படைப்பு நோய்களுக்கு மிக நல்லது. தேனில் கலந்து வயிற்றில் பூச வயிற்று வலி குணமடையும். கருஞ்சீரகம் எப்போதும் வீட்டில் இருக்க வேண்டும். திடீரென ஏற்படும் இனந்தெரியாத வியாதிகளுக்கு இதனை உட்கொண்டால் நிவாரணம் பெறவலாம். கருஞ்சீரகம் மிகவும் வலிமை கொண்ட கிருமிவாசனை ஆகும். கொலஸ்ரோலுக்கு கருஞ்சீரகம் மிகவும் நல்ல மருந்து. நரம்புத்தளர்ச்சிக்கு மிகவும் நல்லது.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடை பெறுகின்றேன். (தொடரும்)

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

## வருமானவரி...

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

நீதிமன்றத்திற்கு மறு விசாரணைக்கு சென்றார்கள். அங்கு தண்டனைப் பணம் இரு மில்லியானாகவும் சிறைத் தண்டனை நான்கு வருடமாகவும் அதிகரித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆதாரம் - C.B.C. news, Jan. 27th 2017.

5. ஒரு மில்லியனை மோசடியாக வருமான-வரியில் மீளப்பெற்ற ரொறன்ரோ நபருக்கு ஐந்து வருடச் சிறை. (Toronto Man Sentenced to Five Years in Prison for claiming almost $ 1 million in fraudulent tax refunds) என்று ஒரு செய்தி 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அலெக்ஸ்சான்டர் வியாவி (Alexander Wiafe) என்பவர் 'Wiafe Industries Ltd' என்னும் பெயரில் உபயோகித்த துணிகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் தொழிலை ரொறன்ரோவில் செய்து வந்த ஒரு தொழில்அதிபர். 2013-2014 ஆண்டுகளில் மோசடியாக GST/HSTஐ மீளப் பெற்றார் என்ற குற்றச்சாட்டுக்காக 2017ஆம் ஆண்டு ஐந்து வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆதாரம் - Toronto Star, நொவம்பர் 17, 2017.

6. ராஜீன்டர் சிங் மான் (Rajinder Singh Mann) என்பவர் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் 'Millennium Century Investments Ltd.' என்னும் பெயரில் றியல் எஸ்ரேற் தொழில் செய்து வந்தார். வருமானம் சரியாக வெளிப்படுத்தாத குற்றம், வரி செலுத்தத் தவறிய குற்றம் என்பனவற்றிற்காக $462,000 தண்டனைப் பணம், 150 மணித்தியாலம் சமூக சேவை, 9 மாதம் வீட்டுக் காவல் என இவ்வருடம் 2018 ஏப்ரல் மாதம் நீதிமன்றம் இவருக்குத்தீர்ப்பு வழங்கியது. ஆதாரம் - CBC News, Apr.16th, 2018.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# நான் படைத்த இலக்கிய முயற்சிகள் வீண்போகவில்லை

## எழுத்தாளர் பிரபஞ்சன் நேர்காணல்

– சந்திப்பு கண்ணன் –

பீனிக்ஸ் பறவையாகத் திரும்பி வந்திருக்கிறார் பிரபஞ்சன். 75 வயதாகும் எழுத்தாளர் பிரபஞ்சன் கடந்த 6 மாதமாகப் புற்றுநோய் பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இனி பிரபஞ்சன் பழைய நிலைக்கு திரும்ப மாட்டார் என்று நெருங்கிய நண்பர்களே நினைத்து வருந்திய நிலையில், அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்கி, தனது பழைய சுறுசுறுப்போடு, அதே நேர்த்தியான ஆடை மிடுக்கோடு, எழுத்து வேலைகளைத் தொடங்கிவிட்டார்!

மருத்துவமனையில் இருந்து திரும்பிய பிரபஞ்சனை புதுச்சேரி லாசுபேட்டை அரசு குடியிருப்பிலுள்ள அவரது வீட்டில் சந்தித்தோம். புதிய பொலிவுடன் நம்மை மகிழ்ச்சி பொங்க வரவேற்றுப் பேசினார்.

**வாழ்த்துக்கள் சார் எப்படியிருந்தது கடந்த ஆறு மாத வாழ்க்கை?**

ஒருநாள் எதேச்சையாக ஒரு காணொளி கண்டேன். அதில் ஒரு ஐரோப்பிய மருத்துவர் பாதிக்கப்பட்ட ஒருவரை பரிசோதனை செய்கிறார். புற்றுநோயின் அறிகுறிகள், விளைவுகள் ஆகியவையெல்லாம் அதில் கூறப்பட்டிருந்தன. அதைக் கேட்டவுடன் அதுமாதிரியான அறிகுறிகள் என்னிடம் இருப்பதை உணர்ந்தேன். தூக்கமின்மை, உடல் இளைத்தல், தொடர் இருமல், சளி ஆகியவையெல்லாம் அதில் கூறப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் கைதட்டிக் கூப்பிடுவது போல் நானும் சில காரியங்களை செய்திருக்கிறேன். அதனால், எனக்கும் இந்த பாதிப்பு வரக்கூடும் என்று தோன்றியது.

இதை எனது தோழமை எழுத்தாளரும் பத்திரிகையாளருமான பி.என்.எஸ். பாண்டியனிடம் சொன்னேன். நாங்கள் இருவருமாக ஈரோட்டைச் சேர்ந்த இலக்கியவாதியும் மருத்துவருமான ஜீவானந்தத்தை சந்தித்தோம். அவருடைய ஆலோசனையின் பேரில், புதுச்சேரியில் டாக்டர் எம்.ஏ.எஸ். சுப்ரமணியன் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்), அவரது நண்பர்களுடன் இணைந்து தொடக்கியுள்ள புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனைக்குச் சென்றோம்.

அங்கு மருத்துவக் குழுவோடு ஆலோசித்து சில பரிசோதனைகளை செய்து வரச்சொன்னார்கள். செய்துகொண்டு மீண்டும் சென்றோம். டாக்டர் எம்.ஏ.எஸ். சுப்ரமணியன் மற்றும் மருத்துவர்கள் எனக்கு பாதிப்பு உள்ளதை கண்டறிந்தனர். என் உடல்நலப் பிரச்சினையை தீர்க்க சரியான இடம் புதுச்சேரி மதகடிப்பட்டில் உள்ள ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைதான் என்று பரிந்துரை செய்தனர்.

நான் எந்த நிலையில் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால், என்னை மறுநாள் பார்க்க வந்த டாக்டர் எம்.ஏ.எஸ்.சுப்ரமணியனை பார்த்து, “நீங்கள் யார்?” என்று கேட்கும் அளவிற்கு இருந்தது. என் பிள்ளைகளையே நான் வெறுக்கும் மனோபாவம் ஏற்பட்டது. எல்லாம் உள்ளே வளர்ந்த புற்றுதான் காரணம். இது உடலுக்கான பிரச்சினை மட்டுமல்ல, மனதிற்கானதும்கூட. அதற்குத்தான் நான் இரையானேன். ஆனால், கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருவேன் என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டேன். இன்று மீண்டு வந்துவிட்டேன். இனி நான் என் எழுத்துப்பணியை எந்த இடத்தில் விட்டேனோ அந்த இடத்தில் இருந்து தொடங்கப் போகிறேன்.



அந்த மருத்துவமனையில் என்னை நன்றாக பார்த்துக்கொண்டார்கள். மிகவும் அற்புதமான மருத்துவர்கள் அங்கே இருக்கின்றனர். மருத்துவர்கள் தாமோதரன், யுவராஜ் ஆகியோர் கொண்ட மருத்துவக் குழு எனக்கு சிறப்பாக சிகிச்சை அளித்தனர். அர்ப்பணிப்பு மனோபாவத்துடன் பணியாற்றும் மருத்துவக் குழு. அவர்கள் எனக்கு முற்றிலும் இலவச மருத்துவம் அளித்தார்கள். குறிப்பாக, செவிலியர்களை பற்றிக் கூற வேண்டும். ‘சிஸ்டர்’ என்று கூறுவது எத்தனை அர்த்தபூர்வமான வார்த்தை. அப்படித்தான் என்னை பாசத்துடன் கவனித்துக் கொண்டனர். மிகவும் அன்பாக பார்த்துக் கொண்டனர்.

இவர்கள் எல்லாம் இல்லையென்றால் நான் இல்லை. ஒரு நல்ல இயக்கம் எத்தனையோ மனிதர்களை காப்பாற்ற முடியும் என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்த நிர்வாகத்தின் தலைவர் தனசேகரன் என்னிடம், “சிறுவயதில் நீங்கள், சுஜாதா, பாலகுமாரன் ஆகியோர்தான் என்னுடைய வழிகாட்டி” என்று கூறியபோது, மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இதன்மூலம், என்னுடைய கதைகள் வீண் போகவில்லை. அப்போது நான் போட்ட விதை இப்போது முளைத்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன். ஏதேனும் ஒரு வகையில் தமிழும் தோழமையும் எனக்கு உதவிக் கொண்டே இருக்கிறது.

**மருத்துவமனையிலேயே உங்களது சுயசரிதையை எழுதத் தொடங்கி விட்டதாக தகவல்கள் வெளியானதே?**

உண்மைதான். பாண்டியன் என் சுயசரிதையை எழுதும்படிச் சொன்னார். நானும் எழுதத் தொடங்கினேன். சுயசரிதை எப்போதும் ‘நான்’ என்றுதான் இருக்கும். சிலர் ‘அவன்’ என்று எழுதுவார்கள். ஒரு நாற்பது பக்கங்கள் எழுதியிருக்கிறேன். பிறகு திடீரென்று ஓர் இடத்தில் தடுமாறி நிற்கிறேன். ஏனென்றால், ‘நான்’ என்று எழுதும் போது சில விஷயங்களை வெளிப்படையாக எழுத முடியவில்லை. ஆகையால், ‘அவன்’ என்று எழுதினால் சுலபமாக இருக்கும் என்று நினைத்தேன். படிப்பவர்களுக்கு ஒரு மூன்றாவது மனிதனைப் பற்றி பேசுவது போல் இருக்கும். நிச்சயமாக, இதை நான் நிறைவேற்றுவேன். இப்போது ‘புதுச்சேரி வரலாறு’ என்னை ஆக்கிரமித்துள்ளது. அந்த பணி முடிந்த பிறகு, என்னுடைய அடுத்த பிறந்த நாளில் (ஏப்ரல் 27) சுயசரிதையை வெளியிடுவேன்.

**புதுச்சேரி வரலாறு சார்ந்து ஏற்கெனவே நீங்கள் நிறைய எழுதியுள்ளீர்கள் மீண்டும் ஏன் இன்னொரு புத்தகம்?**

படுக்கையில் இருந்த அந்த ஆறு மாத காலத்தில் என்ன செய்யலாம் என்று யோசித்தேன். படைப்பாக ஏதாவது நாவல் எழுதலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, நான் சார்ந்த இந்த மண்ணின் சிறப்புக்களை உள்ளடக்கிய வரலாறு ஒன்றை ‘புதுச்சேரி வரலாறு’ என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக எழுதலாம் என்று தோன்றியது. இரண்டாயிரம், மூன்றாயிரம் ஆண்டுகள் பழமையான மண் இது. மதுரை, காஞ்சிபுரம் பேசப்பட்ட அளவிற்கு புதுச்சேரி பேசப்படவில்லை. மகத்தான அறிஞர்கள், மேதைகள் உள்ள ஊர் இது. அவர்களைப் பற்றியெல்லாம் இந்தத் தலைமுறையினருக்குத் தெரிய வேண்டும். அந்தத் தெருவில் வாழும் ஒருவனுக்கு அத்தெருவில் தான் ஆனந்தரங்கப்பிள்ளை வாழ்ந்தார் என்பதே தெரியவில்லை. இம் மண்ணைப் பற்றி அதன் பாரம்பரியத்தைப்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)



## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# மூட்டுத் தேய்மானங்களுக்கான ஆசனங்கள்




தினமும் வாழ்க்கையில் எந்தவித நோயும் இல்லாமல் வாழ்வில் இன்பம் என்றும் இருக்க யோகாவும் ஒரு வழியாகும். தினமும் ஒரு மணி நேரமாவது யோகாசனம் பழகி வர வேண்டும். இப்பொழுது எல்லாம் நோய் எவ்வாறு வருகின்றது என்பது நமக்குத் தெரியாது. மனித வாழ்க்கையில் நாம் உண்ணும் உணவுகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மூட்டு தேய்மானம் என்பது வயதானவர்களுக்குத்தான் வரும். ஆனால் இளைஞர்கள் மத்தியிலும் வருகின்றது. அதிகப்படியான, கடினமான வேலை செய்வதினாலும், தினமும் அளவுக்கு அதிமாக மாடிப்படி ஏறுவதினாலும் இப்படிப்பட்ட நோய் வருகின்றது. எலும்பு இணைப்புக்களில் இருக்கக்கூடிய மஜ்ஜை சற்று இறுகி இருந்தால் நடக்கும் போது அசைவுகளின் மூலம் வலி ஏற்படும்.


மூட்டுகளின் அசைவுகளின்போது அதிகப்படியான வலிகள் ஏற்படும் இந்நோய்க்கு ஒரு சில வயதில் இருந்தே யோகாசனம் பழகி வந்தால் இந்நோய்க்கு தீர்வு காணலாம்.

மூட்டுவலிகளும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.


காலையில் நடத்தல், ஜொகிங் (jogging), ஓடுதல் போன்ற பயிற்சிகளினால் இந்த நோய் வருகின்றது. மூட்டுகளில் அதிகப்படியான அசைவுகளினால் மட்டும்தான் ஏற்படுகின்றது. எலும்புகளின் இணைப்புகளின் இடையே மஜ்ஜை இறுகாமல் இருக்க வேண்டும்.

மூட்டுத் தேய்மானம் உடலில் பல இடங்களிலும் வரும். கை மூட்டுகள், கால் மூட்டுகள் எனப் பல இடங்களில் வலி ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இந்நோய்க்கு சில ஆசனங்கள் செய்தால் போதும். உட்கட்டாசனம், பத்மசானம், வஜ்ஜிராசனம், ஜானுசீராசனம், பஸ்சிமொத்தாசனம், உசாட்டாசனம் போன்ற ஆசனங்கள் செய்து வருவது நல்லது.


**உட்கட்டாசனம் -** கால்களை அகலமாக வைத்து நிற்க வேண்டும். இரண்டு கைகளையும் தோள்பட்டை அளவு நீட்டிக்கொண்டு நாற்காலியில் உட்காருவது போல் அமர வேண்டும். இந்நிலையில் 20 முதல் 30 எண்ணிக்கை வரை இருக்க வேண்டும். இது போன்று 3 முறைகள் செய்ய வேண்டும்.



**பத்மாசனம் -** விரிப்பின் மீது உட்கார்ந்து கொண்டு கால்களை நேராக நீட்டிக்கொள்ள வேண்டும். வலது காலை மடக்கி இடது கால் தொடை மீதும், இடது காலை மடக்கி வலது கால் தொடையின் மீதும் வைத்து நேராக நிமிர்ந்து கொள்ள வேண்டும். கைகளை சின் முத்திரையில் நேராக வைத்துக் கொள்ள வேண்டும். இந்நிலையில் நன்றாக மூச்சை இழுத்து மெதுவாக வெளியே விட வேண்டும். இது போன்று 10 முதல் 20 வரை மூச்சை இழுத்து விட லாம்.




**வஜ்ஜிராசனம் -** இரண்டு கால்களையும் நீட்டிக்கொண்டு மெது வாக வலது காலை மடக்கி வைக்க வேண்டும். அதேபோல் இடது காலை மடக்க வேண்டும். இரண்டு கைகளையும் முட்டியின் மீது வைத்துக் கொண்டு நேராக நிமிர்ந்து உட்கார வேண்டும். இந்த ஆசனத்திலும் 10 முறை மூச்சை இழுத்து விடவேண்டும்.




**ஜானுசிரசாசனம் -** விரிப்பில் இரண்டு கால்களையும் நீட்டி வைத்துக்கொண்டு ஒரு காலை மட்டும் மடக்கி வைத்துக் கொண்டு நீட் டிய காலை இரண்டு கைகளையும் கொண்டு பிடித்து தலையைக் குனிய வேண்டும். இதுபோன்று மற்றப் பக் கமும் செய்ய வேண்டும்.



**பஸ்சிமோத்தாசனம் -** இரண்டு காலையும் நேராக நீட்டி உட்கார் ந்து கொள்ள வேண்டும். இரண்டு கைக ளையும் நீட்டி மேல் உயர்த்தி மூச்சை வெளி யே விட்டவாறு முன்புறம் குனிய வேண்டும். இந் நிலையில் 2 முதல் 30 எண்ணிக்கை வரை இருக்க வேண்டும். 3 முதல் 5 முறை வரை செய்யலாம்.



**உசாட்டாசனம் -** வஜ்ஜிராசனத்தில் உட்கார்ந்து கொண்டு நேராக நிற்க வேண்டும். இரண்டு கையைக் கொ ண்டு பின்புறம் காலைப் பிடிக்க வேண்டும். இந் நிலையில் 5 முதல் 10 முறை மூச்சை இழுத்து மெதுவாக விட வேண்டும். நேராக வந்து இரண்டு கையையும் பின்புறம் வைத்து முன்புறம் குனி வேண்டும்.



இந்த ஆசனங்கள் செய்தால் மூட்டுத் தேய்மானத்தில் இருந்து விடுபடலாம். தினமும் காலையில், மாலையிலும் அரை மணி நேர யோகாசனம் செய்தால் போதும், இன்னும் இது போன்ற நோய்களில் இருந்து விடுபடலாம்.

யோகம் பயின்று வாழ்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்.






# மகாகவி பாரதியார்



வந்து ஆண்ட வெள்ளைனின்
 கால் வருடி வாழ எண்ணாது
இந்தியாவின் விடுதலைக்காய்
 முந்தி நின்று எதிர்த்தவர் பாரதி

இந்திய வாழ் மக்களின் சிந்தையைத்
 தூண்டிவிட செந்தமிழில் சொல்எடுத்து
சிந்து கவி பாடியவர் பாரதி

வெட்டரி வாழ் மீசை வைத்து
 எட்டயபுர எரிமலையாய்
கட்டுப்படா கவிஞன் எனக்
 கடைசிவரை வாழ்ந்தவர் பாரதி


மண்ணகத்தில் மனித நேய
 எண்ணத்தினை வளர்க்க
பொன்னிகர் கருத்துக்களை
 எடுத்து உரைத்தவர் பாரதி

பெண் இனத்தை தன் இரு
 கண்கள் எனப் போற்றி வாழ்ந்து
தண்டமிழுக்குத் தொண்டு செய்த
 பாவலன் பாரதி

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற
 போதினிலும் அச்சமில்லை
அச்சமில்லை
என்று பாடி மெச்ச உணர்வை
 ஊட்டியவர் பாரதி

பாரதத்தின் சுதந்திரத் தேர்
 பவனிவரும் முன்னர் இவர்
இன்பப் பரவசத்தில் விடுதலை
 கொண்டாடியவர் பாரதி

சூடினார் மகாகவி பாரதி என்றபெயர்
 சுருங்கிய காலம் வாழ்ந்து தேடினார்
தமிழ் இன்பத்தை தேய்பிறையாக்கி
 போய் மறைந்தார் 1921இல்
மகாகவி பாரதி



கவிநாதம் பரந்தாமன்

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

'தமிழரின் பரிமாணங்களை பல்கோணங்களிலும் அலசப் போகும் இப்பகுதியைத் தவற விட்டு விடாதீர்கள்!'

கீழடி பற்றிய அலசலில், தேவை கருதி, தென்னிந்தியப் பகுதிகளில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஆதிமனிதர்கள் வாழ்ந்ததற் கான தடயங்கள் பற்றிக் கூறுவதாக் கூறியிருந்தேன். இது, அவர்களின் பண்பட்ட வழியினர்தான் நாங்கள் என்பதைக் கூறுகிறது எனலாம். நமது முன்னவர்கள் இந்தியப் பகுதிகளில் பண்டைக் காலத்தில் வாழ்ந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு, முதலில் மனிதத் தோற்றம் பற்றியும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். இவ்விபரங்கள் எங்களின் அறிவியல் அறிவினைச் வளப்படுத்தும்.

கிட்டத்தட்ட 4.6 ஆயிரம்மெய்யிரம் (பில்லியன்) ஆண்டு முன்னர் தோன்றிய புவியில், 3.3 ஆயிரம்மெய்யிரம் ஆண்டு முன்னராக ஒரு கல உயிரினங்கள் புவியின் நீர்ப்பரப்புகளில் தோன்றின. இவ்வுயிரினங்களில் இருந்து கால ஓட்டத்தில், கூர்ப்பின் வழியில் மெதுமெதுவாக பல உயிரினங்கள் கடலிற் தோன்றி, அவற்றிற் சில தரைப்பகுதிகளுக்கும் வந்திட, புவியின் எல்லாப் பகுதிகளிலும் குட்டிக்குட்டி உயிரினங்கள் முதல் டைனோசர் போன்ற பிரமாண்டமான உயிரியங்கள் வரையிற் பல வாழ்ந்தன. இப்படியிருக்கையில், 63 மெய்யிரம் (மில்லியன்) ஆண்டு முன்னர் விண்கல்லொன்று புவியில் வீழ்ந்து புவியின் டைனோசர்கள் போன்ற, பாரிய உயிரினங்கள் முதல் 90 வீதமான உயிரினங்கள் அழிந்து போயின. உயிர்தப்பிய சின்னஞ் சிறிய உயிரினங்களில் இருந்து மீண்டும் புவி உயிரினங்களின் இருப்பிடமாக மாறியது. மீண்டும் கால ஓட்டம், சூழல் மாற்றங்கள் என்பன அச்சிறிய உயிரினங்களிற் பரிணாம மாற்றங்களை (கூர்ப்பு) ஏற்படுத்த, பெரிய உயிரினங்கள் மெல்ல மெல்லத் தோன்றின. இதன் வழியில் பல்வகை உயிரினங்களும் புவியிலே மீண்டும் நடமாடத் தொடங்க, உயிர்களிற் கூர்ப்பும் தொடர்ந்து தனது வேலையைச் செய்ய, கிட்டத்தட்ட 30 மெய்யிரம் (மில்லியன்) ஆண்டின் முன்னரான காலப்பகுதியில் வாழ்ந்த ஒரு உயிரினத்தில் இருந்து, மனிதக்குரங்குகள், சிம்பன்சிகள் என்பவற்றுடன் இன்னொரு உயிரினமும் தோன்றுகின்றது. இந்த மூன்று சகோதர உயிரினங்களையும் தோற்றுவித்த உயிரினத்திற்கு 'பழைய உலகக் குரங்குகள்' என்று பெயரை இட்டுள்ளனர் ஆய்வாளர்கள்.



கோமினின்களின் மாதிரியைக் காட்டுகிறது

இந்தப் பழைய உலகக் குரங்குகள் என்ற உயிரினத்தில் இருந்து தோன்றிய மூன்றாவது உயிரினத்தில் இருந்து பரிணாம வழியிற் தோன்றியவர்கள்தான் மனிதர்களாகிய நாங்கள். இன்றுள்ள குரங்குகள், கொரிலாக்கள், சிம்பன்சிகள், மனிதர்கள் என்பவற்றின் உயிரியற் சாயல்கள் இவற்றின் ஆரம்ப உயிரினத்தில் இருந்ததினால் அதற்குப் 'பழைய உலகக் குரங்கு' எனப் பெயரிட்டார்கள், ஆய்வாளர்கள். குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன் என்ற பெயர் இதில் இருந்துதான் வந்ததே தவிர, மனிதர்கள் குரங்கில் இருந்து பிறந்தார்கள் என்பது முற்றிலும் பொருத்தமானதல்ல. உண்மையில் மனிதக் குரங்குகள், சிம்பன்சிகள், மனிதர்கள் எல்லாமே ஒரு சகோதர உயிரினங்கள். அதனால்தான் அவற்றிடையே சிற்சில ஒற்றுமையான இயல்புகள் உள்ளன. இந்த மனிதக்குரங்குகள், சிம்பன்சிகள், கொம்பேறித் தாவும் குரங்குகள் என்பவற்றில் அதிக அளவில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கூர்ப்பு நடைபெறாதபடியினால் அவை இன்னமும் தமது சாயல்கள், இயல்புகள் என்பவற்றிற் பெரிதாக மாற்றங்கள் இல்லாது, இன்னமும் அவையாகவே இருக்கின்றன. ஆனால் மனிதர் தோன்றிய வழியில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட, இன்று மனிதராகத் தோற்றமளிக்கிறோம்.

எமது உயிரியற் பாதையில் கோமினிட்டுகள் (Hominids) என்றொரு இடைப்பகுதி வருகிறது. 15 மெய்யிரம் ஆண்டு முன்னராக தோன்றிய கோமினிட்டுகள் 6 மில்லியன் ஆண்டு முன்னர் வரையில் வாழ்ந்திருக்கிறார்கள். இந்த கோமினிட்டுகள் குடும்பத்திலும் மனிதக் குரங்குகளும் சிம்பன்சிகளும் மனிதர்களின் முன்னவர்களும் அடங்கியிருந்தனர். இக்குடும்பத்தில் இருந்து 6 மெய்யிரம் ஆண்டு முன்னர் கோமினின் (Hominin) என்ற இனக் குடும்பம் கூர்ப்படைகிறது.

இவர்களின் அறிவியல் வளர்ச்சி இவர்களைத் தீயினைப் பற்றி அறிந்து அதனை உபயோகப்படுத்தக் கூடியதாகவும் செய்திருந்தது. சற்றுக் குனிந்ததான உடல்வாகினைக் கொண்டிருந்த கோமினின்கள் தடிகளுடன் முதன்முதலில் கற்களையும் எலும்புகளையும் ஆயுதங்களாகப் பாவிக்கப் பழகியிருந்தார்கள். அதிகமாக இவர்களது உணவாக மாமிசமும் எலும்பு மச்சைகளும் இருந்தனவென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கோமினின்களில் இருந்து 2 மெய்யிரம் (மில்லியன்) ஆண்டு முன்னராக, ஆதிமனிதர் என்று கூறப்படுகின்ற, நிமிர்ந்த முள்ளந்தண்டு அமைப்பினைக் கொண்ட கோமோ இரெக்ரசுக்கள் (Homo Erectus) தோன்றுகிறனர். கோமோ என்ற அடைமொழி எதனைக் குறிக்கின்றது எனில் 'முள்ளந்தண்டு நிமிர்ந்த இனம்' என்பதாகும். இந்த கோமோ இரெக்ரசுவில் இருந்து 200 ஆயிரம் ஆண்டு முன்னராக கோமோ நியாண்டரல்கள், கோமே டினேவியன்கள், கோமோ சேபியன்கள் (Homo Sepiens) என்ற மூன்று உயிரினங்கள், கிட்டத்தட்ட 150,000 முதல் 200,000 வருடத்திற்கு முன்னராகத் தோன்றுகின்றன. அவற்றில் இன்று கோமோ சேபியன்கள் மாத்திரம் தக்கன தங்கும் என்ற கூர்ப்பியல் நியதிக்கமைய, தப்பி நிற்கின்றனர். இந்த கோமோ சேபியன்கள்தான் மனிதராகிய நாங்கள்.


கோமினின்கள் குடும்பத்தின் வளர்ச்சியடைந்த சிறப்பான இனமாகவே கோமோ இரெக்ரசுகளைக் கூறுவர். இந்தக் கோமோ இரெக்ரசுகள்தான், 1.8 - 1.2 மெய்யிரம் வருடங்களின் முன்னராக, ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பா, ஆசியா போன்ற பகுதிகளுக்குப் பரவத் தொடங்கிய கோமினின்கள் எனக் கூறுகின்றனர், ஆய்வாளர்கள். இந்தக் கோமோ இரெக்ரசுக்கள், கோமினின்களில் இருந்து இயல்பான கூர்ப்பு வழியில் இல்லாது, கொஞ்சம் அவசரப்பட்டுத் தம்மை, தமது முள்ளந் தண்டை நிமிர்த்திக் கொண்ட இனம் எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அதனால் அவர்களின் முள்ளந்தண்டுகள் வலிமையற்றவைகளாக இருந்தனவென்றும்,



கோமோ இரெக்ரசின் மாதிரியைக் காட்டுகின்றது

அந்தக் குறைபாடு, மனிதர்களாகிய எங்களிடமும் கடத்தப்பட்டுள்ளது என்றும் அதனாலேயே இலகுவில் மனிதர்களின் முள்ளந்தண்டுப் பகுதி சேதமடையக் கூடியதாகவும் உள்ளதென அவர்கள் கூறுகிறனர்.

கோமினின்களில் இருந்து, கோமோ சேபியன்கள் தோன்றும் வரையில் சமுதாய அமைப்பு முறை மெதுமெதுவாக வளர்ச்சியடைகிறது. குறிப்பாக, இன்னமும் பெருமளவிற் கற்களையே ஆயுதங்களாகப் பாவிக்கும் அவர்களது குழுக்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை 50இல் இருந்து 200, 300 இன்னமும் 500 வரையில் அதிகரித்திருந்தது. பெரும்பாலும் குகைகளைத் தங்களது பாதுகாப்பான தங்குமிடங்களாகப் பாவிக்கவும் கற்றுக் கொண்டனர். கோமோ சேபியன்களின் உயர் அறிவியல் வளர்ச்சியடைந்த தற்கால



கோமிட்டுகள், கோமினின்கள், கோமோ இரெக்ரசுக்கள், கோமோ சேபியன்கள் ( நாங்கள்) ஆகியவற்றின் கூர்ப்புப் பாதையைக் காட்டுகிறது

மனிதரின் சேர்ந்து வாழ்பவர்களின், வாழக் கூடியவர்களின் எண்ணிக்கையையும் வதிவிட முன்னேற்றங்களைப் பற்றியும் இப்போது நான் உங்களுக்குக் கூறத் தேவையில்லைத்தானே.

சரி இத்துடன் மனிதரின் தோன்றப் பாதையைப் பற்றிய விபரங்களை முடித்துக் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள எங்களின் தடங்களைப் பற்றிய பார்வையை பற்றி அடுத்த தடவையில் இருந்து பார்ப்போம்.

**DOCTORS WANTED**

**Ajax, GTA, ON** - Full Time or Part Time Medical doctors required for Integrative turn key medical clinic with fully equipped medical office in great & High Flow Location. Multiple exam rooms, Pharmacy, lab, EMR, dictation service. New graduates welcome.

**Contact: 416-988-0945 / wynpluspharmacy@gmail.com**

**வாழும் திறன்**

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: 416.816.2563 **மகேன்:** 416.893.1222 ஆறுமுகம் (AGR): 416.832.9467

# இலங்கையின்...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

மாவீரர் நாள் நிகழ்விற்கு முன்னதாக மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. மாவீரர்களின் பெற்றோர் குடும்பத்தினருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வுகள் இந்நாட்களில் நடைபெற்றன. மாவீரர் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இவை புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உதவியினூடாகவே வழங்கப்பட்டன.

மற்றுமொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். நாச்சிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த தனது இரண்டு கால்களையும் இழந்த முன்னாள் போராளி ஒருவருக்கு வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதற்கான படகு மற்றும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.



இறுதி யுத்தத்தில் தனது இரண்டு கால்களையும் இழந்த நிலையிலும் கடந்த ஐந்து வருடங்களாக வேறு ஒருவருடன் கூலித் தொழிலாளியாக கடற்தொழிலில் ஈடுபட்டு வந்த இந்த முன்னாள் போராளிக்கு கனடாவில் உள்ள புலம்பெயர் அமைப்பு ஒன்றின் உதவியால் படகு மற்றும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன. உதவியினை பெற்றுக்கொண்ட முன்னாள் போராளியின் மனைவியும் இறுதி யுத்தத்தின் போது காயமடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு, வறுமையுடன் வாழும் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது போரின் பின்னாளில் உள்ள மிக முக்கியமான கடமையாகும்.



போர் முடிவுற்று ஒன்பது வருடங்களாகியுள்ள நிலையில் முன்னாள் போராளிகள், மற்றும் மாவீரர் குடும்பங்கள் பல வாழ்வாதார உதவிகளின்றி வறுமையில் வாடும் நிலை தொடர்கின்றது. உடலுறுப்புக்களை இழந்த முன்னாள் போராளிகளின் வாழ்வாதார நிலை மிக மோசமானதாக இருக்கின்றது. இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களை மேற்கொள்வதென்பது மிக முக்கிமான கடமையாகும். அதுவும், மாவீரர் நாள்களில் இவ்வாறான உதவிகளை மேற்கொள்வதென்பது அந்த நாளை மேலும் அர்த்தம் மிக்கதாக உணர்த்தும்.




# கனடாவின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

தவர்கள் அல்லாதோரை வெளியேறுமாறு அவர்களின் வீடுகளில் அதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. முதற்குடி மக்களின் தலைவரின் கருத்துப்படி பல அங்கத்தவர்கள் குடியிருக்க வசதியற்ற நிலையில் இருக்கும்போது, அங்கத்தவர் அல்லாதோரை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் தெரிவித்திருந்தார். பிஷ்சிங் லேக் பெஸ்ட் நேஷன் இலக்கம் 89இல் உள்ள குடியிருப்புக்களில் அங்கத்தவர் அல்லாதோரை குடியெழும்பும்படி கேட்டிருக்கிறார்கள். இன்டியன் சட்டப்படி பிரிவு 10இன்படி, நிர்வாகத்தினர் தங்கள் றிசேவ் பகுதியில் உள்ளவர்களை விரும்பினால் அவர்களை வெளியேற்றவோ அல்லது அவர்களை அனுமதிக்கவோ முடியும் என்று கூறப்பட்டுள்ளது. இங்குள்ள முதற்குடி மக்களுக்குப் புதிய வீட்டுக் குடியிருப்பு வசதிகள் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. ஏற்கனவே இருக்கும் குடியிருப்புக்களையும் றிசேவ் பகுதியில் இருக்கும் அங்கத்தவர்களுக்கு மட்டுமே பாவிக்கலாம் என்ற விதி முறைகளும் இருப்பதால், இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி வந்தது என்றும், சுமார் 150 அங்கத்தவர்கள் வீடில்லாமல் இன்னும் இருப்பதாகவும் குழுத் தலைவரான டெரிக் சண்சைன் (Derek Sunshine) தெரிவித்தார்.

# எழுத்தாளர்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி


பற்றிக் கூறும் ஒரு வரலாறாக இந்நூல் இருக்கும்.

புதுச்சேரியில் உள்ள 50 தெருக்களுக்கு மேலே, அந்தத் தெருவில் பிரமுகர்கள் யார் யார் வாழ்ந்தார்கள்? யார் உருவாக்கினார்கள் ஆகிய விவரங்களை நான் எழுதி வைத்திருக்கிறேன். இவை அனைத்தும் உள்ளடக்கி இந்த வரலாறு உருவாகும். பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு படித்த தமிழன் புரிந்துகொள்ளும் அளவிற்கு எளிமையாக ஆதாரபூர்வமாக இந்த புத்தகத்தை எழுதலாம் என்று முடிவு செய்துள்ளேன். இதற்கான ஆதாரங்களை திரட்டி விட்டேன். இந்த நூல் இந்த மண்ணுக்கு நான் செய்கிற அர்ப்பணமாக இருக்க முடியும். இப்போது மனம் தெளிவாக இருக்கிறது. நிறைய விஷயங்களை மறந்திருந்தேன். அவை எல்லாம் நினை வுக்கு வருகிறது. மகிழ்ச்சியாக உள்ளேன். இன்னும் நிறைய பணிகள் காத்திருக்கின்றன.

**எழுத்து அல்லாமல் வேறு என்னென்ன பணிகள் திட்டத்தில் இருக்கிறது?**

'புதுச்சேரி வரலாற்று ஆய்வு அறக்கட்டளை' என்ற அமைப்பு ஒன்றினை நானும், பி.என்.எஸ். பாண்டியன் உள்ளிட்ட நண்பர்களும் இணைந்து உருவாக்க இருக்கிறோம். அதற்கான முதற்கட்ட பணிகளை தொடங்கிவிட்டோம். என் வாழ்வில் மிகவும் மகிழ்ச்சி அளித்த பணியாக இது இருக்கும். இதன் மூலமாக புதுச்சேரி மக்களுக்கு என் நன்றியையும் விசுவாசத்தையும் நான் தெரியப்படுத்துகிறேன்.

நாம் செய்கிற செயல் எதுவும் வீணாகாது. எதுவும் காற்றில் கரைந்து போகாது. எதற்கும் ஒரு வரலாறு இருக்கிறது. என் இளமைப் பருவம் முதல் இன்று வரை என்னுடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும், நான் படைத்த இலக்கிய முயற்சிகளும் வீண் போகவில்லை. நான் அப்போது விதைத்த விதைகளின் பழத்தை இப்போது உண்ணத் தொடங்குகிறேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது. இதன்மூலம் நான் தமிழ் சமூகத்திற்கும், உலக மக்களுக்கும் கூறுவது என்னவெ-



னில், நாம் செய்கிற எதுவும் முகவரி இல்லாமல் போகாது. ஆக, செய்வதை ஒழுங்காகவும் நியாயமாகவும் அற உணர்வோடும் செய்ய வேண்டும்.

இக்காலத்தில், அற உணர்வு குறைந்து கொண்டே வருகிறது. அறமற்ற கல்வி, வேலையை மட்டுமே முன்னிறுத்திய கல்வி இதுபோன்ற அறமற்ற செயல்களில் இச்சமூகம் ஈடுபட்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு வாழ்க்கை, கல்வி, சமூக முயற்சி, பத்திரிகை ஆகியவையெல்லாம் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நான் ஒருபோதும் நம்பிக்கையை இழப்பதே இல்லை."






# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# குழம்பு பதார்த்தம்

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



### இலவங்கம் (கிராம்பு)

இலவங்கம் நல்ல மழை பெய்யும் கடல் மட்டத்திலிருந்து 3000 அடி உயரமான இடங்களில் 8 தொடக்கம் 12 மீற்றர் உயரம் வரை வளரும் மரமாகும். இது இந்தோனேசியாவில் தோன்றிய தாவரமாகும். இது இந்தோனேசியாவில் பெரும்பான்மையாகப் பயிரிடப்பட்டாலும் இந்தியா, இலங்கை, மடகஸ்கார், கயானா, மேற்கிந்தியதீவுகள், ஆகிய இடங்களிலும் பயிரிடுகின்றனர். இதன் பூக்களை கிளை நுனிகளில் கொத்துக் கொத்தாகக் காணப்படும். விரியாத பூ மொட்டுக்களைப் பறித்து காய வைத்து எடுக்கும் பொருளை கிராம்பு அல்லது இலவங்கம் என அழைப்பர். இதனை நாம் கராம்பு எனவும் அழைக்கின்றோம். இக்கிராம்பு நல்ல மணமும் காரமும் நிறைந்தது. ஆசிய மக்கள் இதன் சுவையை நன்கு விரும்புவர். தாம்பூலத்தில் வாசனைப்பொருளாகவும் பயன்படுத்துவர். நாம் சமையல் செய்யும்போது இதனைப் பாவிப்பதுண்டு. சிலர் மதுபானம் தயாரிக்கும் போது இதனைச் சேர்த்துக்கொள்வர் எனவும் அறியமுடிகின்றது. சிலர் மருந்துச் சரக்கு எனவும் கருதுவதுண்டு. இதனைப் பாவிக்கும்போது உணவுப்பொருட்களைச் செரிக்கச் செய்யும் ஆற்றல் இதற்குண்டு. இதில் தயாரிக்கும் எண்ணெய் (கிராம்பு தைலம்) வாதம், தலைவலி, பல்வலி என்பவற்குப் பாவிக்கும்போது நற்பயன் கிடைக்கும்.



இந்த கிராம்பை நீரில் இட்டு பல தடவை காய்ச்சி வடித்து இலேசான மஞ்சள் நிறமுள்ள இலவங்கத்தைலம் (கிராம்பு தைலம்) எடுப்பர். இத்தைலம் நாட்கள் செல்லச்செல்ல பழுப்பு நிறமாக மாற்றம் அடையும். கிராம்பிலுள்ள் உள்ள முக்கியமான சத்து யூஜீனால் (Eugenol ) உணவில் ஏற்படும் அஃபலாக்சின் (Aflatoxin ) என்ற நஞ்சை அழிக்கும். பல் வலிக்கு இதனை தடவி வர வலி மாறும். இதற்கு அஞ்சுகம், உற்கடம், கருவாய்க் கிராம்பு, சோசம், திரளி, வராங்கம் என்ற பல பெயர்களும் உண்டு. கிராம்பானது நல்ல மணம்காரம் விறுவிறுப்பாக இருக்கும். இதனைக் கிள்ளும்போது தைலப்பசை உள்ளதாக இருக்கும். சுவை காரமானது, விறுவிறுப்புள்ளது. அத்துடன் அகட்டு வாயுவை அகற்றும் செயல் உடையது. பசியைத்தூண்டும் ஜடராக்கினி வர்த்தனி (stomachic) என்றும் கூறப்படுகின்றது.

பித்த மயக்கம், பேதி, வாந்தி, இரத்தக் கடுப்பு, கிராணி, சுக்கிலநட்டம், செவிவோ, சிவப்பு கறுப்பு மச்சம் அகற்றும் தன்மை உடையது. கண்ணில் உள்ள 'பூ' படை என்பவற்றையும் அகற்றும் தன்மையுடையது. மலத்தைக் கட்டுப்படுத்தும் தன்மையும் உண்டு.

"பித்த மயக்கறும் பேதியொடுவாந்தியும் போகும்" என்பர். கிராம்பை நீர் இட்டு மை போல் அரைத்து நெற்றியிலும் மூக்கின் மீதும் பற்று இட்டால் தலைப்பாரம், நீரேற்றம் படிவாகும். மேலும் கிராம்பை எடுத்து அனலில் வதக்கி வாயில் இட்டுச் சுவைத்தால் தொண்டைப்புண் மாறும். பற்களின் ஈறு கெட்டியாகும். இலவங்க பத்திரி என்பது இலவங்கத்தின் இலையாகும்.

கறுவாப்பட்டையின் குணம், வாசனை இதற்குண்டு. இதன் பட்டை விலை மதிப்பு உள்ளது. இப்பத்திரி (இலவங்கத்தின் இலை) வெப்பத்தைத் தரக்கூடியது. வாயு அகற்றிப் பசியைத்தூண்டும். வியர்வை பெருக்கியாகவும் செயற்படுகின்றது. மேலும் மேகசுரம், சீதசுரம், வெட்டை, சுவாசகாசம், தாகம், பித்த வாந்தி, வாய்ப்புண், மேகக்கட்டி, தாதுநட்டம், கைப்பு, அருசிநிலை இவற்றைப் போக்கும் தன்மை உடையது.

"மேகசுரம், சீதசுரம், வெட்டை, சுவாசங்காசம், தாக பித்தம் வாந்தி சர்வாசிய நோய் மேகத்தின் கட்டியொடு தாதுநட்டம் கைப்பரிசி போக்கிவிடும் இட்ட இலவங்கத்தினால்" என வர்ணிக்கப்படுகிறது.

### இலவங்கப்பட்டை (கறுவாப்பட்டை - Cinnamon)

இது மரத்தின் உட்பட்டையாகும். இந்த மரம் பருவகாலங்களில் பயிரிடப்படுவதாகும். இந்தியாவில் அதிகம் காணப்படுகின்றது. இதன் இலைகள் பெரிதாகவும்,



நீண்ட அகலம் கொண்டதாக இருக்கும். இதன் பூக்கள் கலவை மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும். மிகப் பசுமை நிறைந்ததாகவும் காட்சியளிக்கும். இது வளரும் மரமாக இருப்பதினால் பட்டை எடுப்பதற்காக கிளைகளை வளர விடாது நறுக்கி விடுவதும் உண்டு. பட்டை மிக மெல்லியதாகவும், வழுவழுப்பாகவும்,

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)


# சுப்பிரமணிய பாரதியார்



விதுசிகா அருள்தாசன்
அகவை -13

சுப்பிரமணிய பாரதியார் சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் டிசம்பர் மாதம் 11ஆம் திகதி 1882ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்கு பெற்றோர் வைத்த பெயர் சுப்பிரமணியன். அவருடைய 5 வயதில் தாயார் காலமானார். பாரதியாரின் தந்தை தனது மகன் ஆங்கில மொழியில் படித்து ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்று விரும்பினார். ஆனால் சிறு வயதிலிருந்தே பாரதியாருக்கு தமிழ் மொழி மீது சிறந்த பற்றும், புலமையும் இருந்தது. ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்போதே கவிதைகள் எழுதத் தொடங்கினார். தனது 11 வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார். இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர் இவருக்கு 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் 'சுப்பிரமணிய பாரதியார்' என அழைக்கப்பட்டார்.

பாரதியார் பள்ளியில் படித்துகொண்டிருக்கும் போதே தனது 15ஆவது வயதில் செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். அவரது 16ஆவது வயதில் தந்தை காலமானார். தந்தையின் இறப்புக்குப் பிறகு பாரதியார் வறுமை நிலையை அடைந்தார். சிறிது காலம் காசிக்கு சென்று தங்கியிருந்தார். பின்னர் எட்டையபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராகப் பணியாற்றினார். 'மீசை கவிஞன்' என்றும் 'முண்டாசு கவிஞன்' என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார்,



தாய் மொழியாம் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனி புலமைப்பெற்று விளங்கினார். 'கண்ணன் பாட்டு', 'குயில்பாட்டு', 'பாஞ்சாலி சபதம்', 'புதிய ஆத்திச்சூடி' போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியாரால் எழுதப்பட்டுள்ளன.

பாரதியார் பத்திரிகையின் மூலம் இந்திய மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால், பாரதி 'தேசிய கவியாக' அனைவராலும் போற்றப்பட்டார். "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தை தன் பாட்டின் மூலம் வெளிபடுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இவர், 1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றபோது, அக்கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார். பின்னர் 1921 செப்ரெம்பர் 11ஆம் திகதி, தனது 39ஆவது வயதில் மரணமடைந்தார்.

## பாரதியாரின் பெண் உரிமைக்கான குரல்

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண் அடிமைத்தனம் நிலவியது. பெண்கள் இழிபிறவிகள், கல்வி கற்கக் கூடாது, கணவனுக்குப் பணிவிடை செய்வதும், பிள்ளை பெற்று வளர்ப்பதே அவர்கள் வேலை எனக் கருதப்பட்டது. பெண்களின் உலகில் இருள் நிலவிய இந்தக் காலகட்டத்தில் பாரதியார் பெண்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கும் குறிக்கோளுடன் பல பாடல்களைப் பாடினார்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்" என்று பாரதியாரின் குரல் பெண்ணுரிமைக்கான குலராக சீறியெழுந்தது. அதன் பேறாக பெண்கள் நாட்டின் கண்கள், இழிந்தவர்கள் அல்லர் என்ற கருத்து உருவாகியது.

பெண்ணுரிமைக்கான குரலாக அவர் எழுதிய சில பாடல் வரிகளும் அதன் கருத்தும்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்"

பெண்ணுக்குள் பேரறிவை வைத்துப் படைத்தான், இந்த உலகத்தை பேணி வளர்க்கின்ற ஈசன். இந்த மண்ணிலே வாழுகின்ற சில மூடர் அந்தப் பெண்களுடைய அறிவை அழித்தனர்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ
மென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்."

பெண்கள் நூல்களைத் தொட்டால் தீமை விழையுமென்று எண்ணியிருந்த மூடர்கள் அழிந்து போயினர். அவளை வீட்டுக்குள் பூட்டி வைப்போம் என்ற வியப்பிற்குரிய மாந்தர் தலைகுனிந்து நின்றனர்.

"மாட்டை அடித்து, வசக்கித், தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார், அதை
வெட்டிவிட்டோம் என்று கும்மியடி!"

மாட்டை அடித்து அடக்கி மாட்டுக்கொட்டிலில் கட்டும் பழக்கத்தை கொண்டுவந்து, வீட்டிலே எம்மையும் கட்டி வைக்க முற்பட்ட மாந்தரது செயல்களை வெட்டி விட்டோம் என்று கும்மியடி. பெண்களுக்கு துணிவை ஊட்டும் கருத்துக்களுடன் பாடல்களை பாடினார்.

பாாரதியின் புதுமைப் பெண் பற்றிய அவரது பாடல் வரிகளும் கருத்தம்

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்
வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!"



தலைகுனியாது நிமிர்ந்த நடையும் ஆணுடன் பேசும் போது குனியாமல் நேரே பார்ப்பதும் உலகில் மூடர்களுக்கோ பெண்ணடிமை பேசுபவர்களுக்கோ அஞ்சாது வாழ்கின்ற மிடுக்குடைய அறிவுச் செருக்கும் இருப்பதால், சிறப்புடைய பெண்கள் தமக்குரிய பண்புகளிலிருந்து மாறுபடுவதில்லை. அறியாமை என்னும் பெரும் இருளில் மூழ்கி ஆண்களிடம் அடிமைப்பட்டு இன்னலுற்று, கல்வி அறிவின்றி வாழும் வாழ்க்கையை சீ! என்று காறித் துப்பிவிட்டு வாழுதல் பெண்மைக்குரிய அறந்தான் என்று புத்துலகப் பண்பாடெனும் கன்னி சொல்வதைக் கேட்டீர்களா! என்கிறார் பாரதி.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

metromath
LEARNING CENTRES

MATH & READING & WRITING.

CALL TO REGISTER TODAY!

**Metromath Learning Centres** provide affordable, comprehensive math, reading and writing programs to students from grades 1-8. Using a proven Accelerated Learning Program, Metromath applies effective teaching strategies geared towards each student's individualized learning approach.

AN INDIVIDUALIZED APPROACH TO ACADEMIC GROWTH!

647 977 9749 | WWW.METROMATH.CA | 3195 SHEPPARD AVE. E

# மலச்சிக்கல் (CONSTIPAITON)



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

சாதாரண வாழ்வில் எத்தனையோ சிக்கல்களை சந்திக்கிறோம். பொருளாதார சிக்கல் முதல் குடும்பச்சிக்கல்வரை எவ்வளவோ பிரச்சினைகளை கடந்து செல்லும் ஒவ்வொரு வரது வாழ்விலும் அடிக்கடி வந்து மனதையும் உடலையும் பாதிக்கும் சிக்கல்தான் மலச்சிக்கலாகும். அதிலும் இது முதுமையில் பெரியளவில் பாதிப்பது மிக கொடுமையானது. காலையில் எழுந்ததும் மலம் போகாதுவிட்டால், பலருக்கு அந்த நாள் முழுவதும் எந்தவேலையும் ஓடாது. வெறும் வயிற்றில் லீட்டர் கணக்கில் தண்ணீர் குடிப்பார்கள், சூடாக கோப்பி, தேநீர் அருந்துவார்கள். பீடி, சிகரெட் பிடிப்பார்கள். இன்னும் சிலர் எப்படியும் மலத்தை வெளியேற்றிய தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு மூச்சை இழுத்துப் பிடித்து முக்குவார்கள். அப்படி செய்தும் மலம் போகவில்லையென்றால் மனவே வெந்து விடுகின்றது.

வழக்கத்துக்கு மாறாக மலம் வெளியேறாது இருப்பது, மலம் இறுகிப்போவது, மலம் கழிப்பதில் சிக்கல் மலம் முழுவதுமாக போகவில்லை என்ற உணர்வு, மலம் கொஞ்சம் கூடப் போகாமல் ஆசனவாயை அடைத்துக் கொள்வதுபோன்ற நிலைமைகளை 'மலச்சிக்கல்' என்று அழைக்கலாம். வாரத்துக்கு மூன்று முறைக்குக் குறைவாக மலம் போவதே மலச்சிக்கலின் அறிகுறியாகும். காலையில்தான் மலம் கழிக்க வேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை. மலம் காலையில் வரலாம், மாலை யில் வரலாம், இரவிலும் வரலாம். ஒரு நாளைக்கு ஒருமுறை வரலாம். இருமுறை வரலாம். தப்பேதும் இல்லை. மலமே வெளியேறாமல் இருக்கும்போதுதான் இம் மலச்சிக்கல் ஏற்படுகிறது.

சாப்பிட்ட உணவு இரைப்பை முன்சிறுகுடல், சிறுகுடல் என்று பயணம் செய்து தன்னிடமுள்ள சத்துக்களையெல்லாம் இரத்தத்திற்குக் கொடுத்துவிட்டு, சக்கை உணவாகப் பெருங்குடலுக்கு வரும். எல்லா சீரண உறுப்புகளிலும் 12-72 மணிநேரம் இவ்வாறான செயற்பாடுகள் தொடரும். ஒவ்வொருவருக்கும் இந்த நேரம் வேறுபடலாம். சிலருக்கு ஒழுங்கான முறையில் செமிபாடு இருக்கும். சிலருக்கு இது ஒழுங்கீனமானதாகும். பெருங்குடல் மலத்தில் உள்ள நீரை உறிஞ்சி விடும். இவ்வாறான நேரம் கூடுதலாக இருந்தால் உணவு மெதுவாகச் செல்கிறது. கூடிய நீரும் உறிஞ்சப்படுகிறது. இதனால் மலமும் இறுகிப்போகிறது. எனவே பெருங்குடலில் நிகழும் பல்வேறு மாற்றங்கள் இம்மலச்சிக்கல் ஏற்படுவதற்கு காரணங்களாகின்றன.

முதியோருக்கு அடிக்கடி மிகுந்த சிரமத்தைக் கொடுப்பது இம் மலச்சிக்கலாகும். இது ஒரு நோய் என்பதனை விட ஒரு குணம்குறி என்பதே பொருத்தமாகும். சாதாரண வாழ்வில் பொருத்தப்பாடற்ற உணவுவகைகள், தேகப்பயிற்சியின்மை, மருந்துகளின் பாவனை போன்றனவே முக்கியமான காரணிகளாகும். பாற்பொருட்கள், கொழுப்புள்ள உணவுகள், அதிகசீனி பாவனை, நார்ச்சத்து குறைந்த உணவுகள், நீர் குடிப்பதில் குறைபாடு, மதுசாரம், கோப்பி பாவனை என்பனவே முக்கிய காரணிகளாகும். மேலும் ஆய்ந்தால் நன்றாகப் பழுக்காத வாழைப்பழங்கள் கண்டகண்ட திடீர் உணவுகள், சிவப்பு



இறைச்சி, தீட்டிய கோதுமைமாவு, பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், மது வகைகள் கோப்பிவகைகள், கொழுப்பு சத்துள்ள உணவுகள், வெள்ளை அரிசி, பாற்பொருட்கள், சொக்கிளேற்றுகள் என்பன இதில் அடங்கும்.

பலருக்கு உடலில் உள்ள நோய்கள், அதற்காகப் பாவிக்கப்படும் மருந்துகள் என்பவற்றால் மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. மருந்துகள் என்னும்போது நோவுக்காகப் பாவிக்கப்படும் OPIOD (ஓப்பியம்), ரைலநோல் (Tylenol), Oxycodone, Dilaudid போன்ற குளிசைகளும், உளச்சோர்வினை எதிர்க்கும் மருந்துகள் (Antidepressants), இரும்பு சத்துக்கான மாத்திரைகள், கல்சிய மாத்திரைகள், அசிட்குறைப்பு மருந்துகளும் இதில் அடங்குவனவாகும்.

பல்வேறு நோய்களும் மலச்சிக்கலுக்குக் காரணிகளாகலாம். IBS எனப்படும் வயிற்றுக் கோளாறு (irritable bowel syndrome) உயர் தைரொயிட் (Hypothyroidism), நீரிழிவு, பார்க்கின்சன்ஸ் நோய், குடற்புற்றுநோய், இரத்தச்சோகை (Anemia) போன்ற நோய்களாலும் மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்படி நோய்களுக்காகப் பாவிக்கப்படும் பல்வேறு எதிர்ப்பு மருந்துகளும் பெருங்குடலைப் பாதிப்பனவே. சிலருக்கி வளர்சிதை மாற்றங்கள் ஏற்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் எழலாம். அதாவது ஹோர்மோன் எனப்படும் உட்சுரப்புக்களால் பல விளைவுகள் ஏற்படலாம். நரம்புரீதியாகவும் இத்தகைய மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. பெண்களுக்கு கருப்பைவாய் மூலம் ஏற்படும் பிரச்சினைகள் மலச்சிக்கலை ஏற்படுத்துவன.

வாழ்க்கை முறையும், உளவியலும் கூட மலச்சிக்கலுக்குக் காரணமாகலாம். தினமும் ஒழுங்கான முறையில், குறிப்பிட்ட நேரத்தில் மலக்கழிவு நடைபெறாவிட்டாலும் இதில் சிக்கல் ஏற்படலாம். சிலர் மலம் வந்தாலும் அதனை அடக்கிக் கொண்டு இருப்பார்கள். பயணங்கள், நல்ல கழிப்பறைகள் இல்லாமையும் காரணமாகலாம். இதனால் காலக்கிரமத்தில் பெருங்குடல் மலங்கழிக்கும் உணர்வினை இழக்கலாம். உண்மையில் இதுவும் உணர்வு சம்மந்தமான பிரச்சினையேயாகும். மூட்டுவலி, இடுப்புவலி, உள்ள முதியோர் இவ்வாறான மலங்கழித்தலை தவிர்ப்பதால் இப்பிரச்சினை ஏற்படலாம். பெண்களுக்குக் கர்ப்பகாலத்தில் தண்ணீர் அதிகமாகக் குடிக்காமல் இருப்பது, கருவில் உள்ள குழந்தை தாயின் கருப்பையை அழுத்துவது, ஹோர்மோன் மாற்றம், ஆசனவாய் சுருங்குவது போன்றவற்றால் கர்ப்பிணிப் பெண்களுக்கு மலச்சிக்கல் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி காரணங்களுடன் காய்ச்சல், வாந்தி, பசிக்குறைவு போன்ற பொதுவான பிரச்சினைகள் ஏற்படும்போதும் உடலில் நீர்ச் சத்து குறைந்துவிடுகின்றது. மூலநோய், ஆசனவாய் வெடிப்பு, ஆசனவாய் சுருக்கம், குடல் அடைப்பு, குடலில் கட்டி, பெருங்குடல் புற்றுநோய், குடல்தடிப்பு நோய், குடலிறக்கம், பித்தப்பை கற்கள், மூளை தண்டுவட நோய்கள், மனஅழுத்தம், தூக்கமின்மை என்பனவும் மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு.

சிலருக்கு பிறவியிலேயே குடல்இயக்கம் குறைவாக இருக்கலாம். இதனை Hirschsprung's நோய் என கூறுவர். சரியான பரிசோதனை மூலமே இதனை கண்டறியலாம்.

ஒருவருக்கு மலச்சிக்கல் இருந்தால் பின்வரும் குணங்குறிகள் இருக்கும்.

1. ஒழுங்கற்ற குடல்இயக்கம் இருக்கும். ஒருவரது உடல் இரசாயனம், வாழ்வுமுறை, உண்ணும் பழக்கங்கள் இதில் முக்கியம் வகிக்கும். எனவே ஒழுங்கற்ற முறையில் மலம் கழிக்க நேர்ந்தால் மலச்சிக்கல் வருகிறது என்பதே அர்த்தமாகும்.

2. அடுத்துள்ள முக்கிய பிரச்சினை கடுமையான அல்லது இறுக்கமாக மலம் வெளியேறலாகும். உணவில் நார்ச்சத்து இன்மையாலும் இவ்வாறு நிகழலாம்.

3. மலம் வெளியேறுவதில் மிகுந்த கஷ்டம் ஏற்படலாம். சிலர் மிகவும் கடுமையாக முக்கியே மலத்தை வெளியேற்றுவர்.

4. மலவாசல் அல்லது ஆசனவாசலில் தடை ஏற்படுவதாகும். பல கழிவுகள் ஒன்று சேர்ந்து மலவாசலை அடைத்துக் கொள்வதும் மலச்சிக்கலின் குணங்குறியாகும்.

5. கிழமையில் சில தடவை மட்டுமே மலம் வெளியேறுவதும் ஒரு குணம்குறியாகும். நீண்ட இடைவெளியின் பின்னரே ஒரு தடவை மலம் வெளியேறும்.

6. பெருங்குடலில் ஏதோ தடை உள்ளதான உணர்வு ஏற்படுவதும் முக்கிய குணம் குறியாகும். வயிற்றில் ஏதோ ஒரு அசெளகரியம் ஏற்படலாம்.

7. முற்றுமுழுதாக மலம் வெளியேறாத உணர்வு ஏற்படுதல் ஒன்றாகும்.

மேற்கூறிய விளைவுகளுக்குப் பெருங்குடல் பிரச்சினைகளே முக்கியமானவை. குறிப்பாக வயிற்றில் தடை ஏற்படல், ஏனைய புற்று நோய்த்தாக்கம் குடலுக்கு வரல், குத புற்று

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

TUTORING
Math / Science / English
Over 8 years of Experience (M.Sc., Mathematics)
Discounted rates for
Grades 1 to 6: $55/month.
Grade 9:MPM-1D　Grade 10:MPM-2D
Grade 11:MCR-3u(Functions)
Grade 12:MHF-4U(Advanced Functions)
Grade 12:MCV-4U(Calculus and Vectors)
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
University Courses for:
York,Rayerson,UOFT,UOIT
Waterloo and McMaster
University Calculus and
Linear Algebra
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics.　Δ Calculus.　Δ Vectors.
Δ Functions.　Δ Advanced Functions.
Δ University: Calculus-1, Calculus-2, Calculus -3
PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329

# எம்மை...

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

லேசான வெளிர்மஞ்சள் கலந்த பழுப்புநிறம் கொண்டதாகவும் இருக்கும். நல்ல மணம் உடையது, சுவையும் உண்டு.

இதன் பட்டையை எடுத்து நன்கு இடித்து கடல் நீரில் ஊறவைத்து மெதுமையாக்கி பின்பு முழுவதையும் விரைவாக வடித்து எண்ணெய் தயாரித்து எடுப்பர் என அறிய முடிகிறது. இவ்வெண்ணெய் வெண்நிறமாக இருக்கும். இதன் பட்டையை கறுவாப் பட்டை என்றும் கூறுவர். இது சமையலுக் குப் பாவிப்பார். சொக்குலெட்டு, மது வகைகள் தயாரிப்பதில் வாசனைப் பொருளாகவும் பயன்படுத்துவதாக அறியமுடிகிறது.

சோப்பு (சவர்க்காரம்) செய்வதிலும் வாசனைக்காக உபயோகிக்கின்றர் எனவும் கூறப்படுகின்றது. இப்பட்டை காரத்துடன் இனிப்புடையதாக இருக்கும். இது வெப்பம் உண்டாக்கியாகவும் செயல் புரிகின்றது. அகட்டு வாயு அகற்றி என்பதால் உதரவாத ஸ்ரீரகாவி (பசியைத்தூண்ட வல்லது -Carminative) எனவும் கூறப் படுகின்றது. வியர்வை அகற்றியாகவும் செயல்படுகின்றது. மேலும் மேகசுரம், சீதசுரம், வெட்டை, சுவாசகாசம், தாகம், பித்தம், வாந்தி, வாய்ப்புண், மேகக்கட்டி, தாதுநட்டம் இவற்றைப் போக்கும் திறன் பொருந்தியது.

### உப்பின் தன்மை

சாதாரண உப்பு என்பது சோடியம் குளோரைட் என்ற இரசாயனப் பொருளைக் குறிக்கும் எனக் கூறப்படுகின்றது. உணவிற்கு முக்கியமான தொன்றாகும். இருந்தும் சிலர் இதனைப் பாவிப்பது இல்லை. விவசாயம் தோன்றிய காலத்தில் உணவில் உப்பைச் சேர்த்துக்கொள்ளும் நிலை தோன்றியதாகும். தானிய உணவிற்கு இன்றியமையாத உப்பு பழங்கால மத கோட்பாடுகளிலும், சடங்கு களிலும் முதன்மை பெற்றது. உப்பு என்பது தூய்மையையும், நட்பையும், நன்றியையும் குறிக்கும் பொருளாகப் பல நாடுகளில் வழங்குதில் இருந்தே இதற்குப் பழங்கால மக்கள் கொடுத்த முதன்மை விளங்கும். பழங்கால வாணிபத்திலும் உப்பு மிக முக்கியமாக விளங்கியது. பெரும்பாலும் வணிக பாதைகள் பல உப்பு வணிகத் திற்காகவே ஏற்பட்டவை எனவும் அறிய



முடிகின்றது.

மேலும் உப்பின் குணம் பற்றிப் பார்த்தால் உணவிற்கு அளவான உப்பு இன்றியமையாதது. இதனைக் கருத்தில் கொண்டு ‘உப்பிலாப் பண்டம் குப்பையிலே’ என்றனர். சுவைக்கு இன்றியமையாதது. நோய் நிலையில் பார்க்கும்போது கன்னத்தின் உட்புறத்திலும், வாயிலும், தொண்டையிலும் வெப்ப உணர்ச்சியை உண்டாக்கும். கட்டுக்கடங்காமல் வாயில் உமிழ் நீரைப் பெருக்கும் இயல்பாகும்.

“கொடியுவாம் தொண்டை கொதித்தலும் வாய்நீர் வடிதலும் உப்பால் வரும்” என மருத்துவப் பாடல் அணிகளில் கூறப் படுகின்றது. உப்பைக் குறைவாக உபயோகிப்பது நன்று. உணவுப்பொருட்களில் உப்பு சேர்த்து நாம் எடுக்கும்போது உறுப்புக்களின் சுருக்கம் குறையும். வியர்வையை ஏற்படுத்தி உடலில் நெய்ப்புத்தன்மையை (Oily Skin) அளிக்கும். மேலும் அழுகக்கூடிய பண்டங்களில் உப்பைச் சேர்த்தால் அவை கெடாமல் பாதுகாக்கும். உணவை உண்பதற்குக் கூடிய விருப்பத்தைக் கொடுக்கும். மலமிளக்கியாகவும் செயல்படும். மாமிச வர்க்கம் பழுதடையாமல் பாதுகாக்கும். ஆனால் உப்பு அளவுக்கு மிஞ்சினால் ஆபத்தாகும். தலைமயிர் உதிர்தல், மயிர் நரை ஏற்படல், தோல் சுருக்கம், குருதி யமுக்கம், உடலில் கெட்ட நீர் பரவி புண்கள் உண்டாகும். தாக வறட்சி கடுமையாகி நா வரட்சியடையும், வாதரத்தம், குட்டம் போன்ற நோய்களும் ஏற்படலாம். உடல் வலிமையும் நாளுக்குநாள் குறையும்.

‘சொட்டை நரைதிரை துட்டநீர் பம்புண் மட்டற்ற நாவரட்சி வாதரத்தம் குட்ட முண்டாம், தேகவன்மை தேயும் திருவேதின மதிகமாகவுப்பை யுண்டாக்கறி’ என




# மலச்சிக்கல்...

19 ஆம் பக்கத்தொடர்ச்சி

நோய் ஏற்படல், மலவாசலில் சிதைவு ஏற்படல் என்பனவும் காரணிகளாகலாம். கூடவே பக்கவாதம் (Stroke), முள்ளந்தண்டுகாய முறல், பலபக்கநோய் multiple sclerosis என்பனவும் இவ்வாறான மலச்சிக்கலில் பங்கு கொள்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரின் அதிக வயது, நீர்வற்றி இருத்தல், நார்ச்சத்து குறைவுபடல் உளச்சோர்வு ஏற்படல், உணவு உண்ணும் குறைபாடுகளும் சேர்ந்து கொள்ளலாம்.

மிகவும் கடுமையான மலச்சிக்கல் (chronic constipation) சிலருக்குப் பல சிக்கலை உண்டு பண்ணலாம். இந்தச்சம்பவம் மிகவும் கொடூரமானதாகும். சிலருக்கு ஆசன வாசலில் உள்ள நரம்புகள் வீக்கமடைந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். சிலருக்கு மலவாசலில் சில சிறு பிளவுகள் ஏற்படலாம். சிலருக்கு பெருங்குடலில் மலம் உறைந்து போகலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் இதனை தவிர்க்க சில வழிகள் உள்ளன.

1. முக்கியமாக நார்ச்சத்துள்ள பழம், காய்கறி என்பனவற்றை உண்ணவேண்டும்.
2. நிறையவே நீர் அருந்துதல் வேண்டும்.
3. உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
4. மன அழுத்தத்தை அகற்ற முயல வேண்டும்.
5. மலம் கழிப்பதில் ஓர் ஒழுங்கினை கடைப் பிடிக்க வேண்டும்.

**பொதுவாக அவசர சிகிச்சைக்குச் செல்லும்போது பல நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.**

1. இரத்தப் பரிசோதனை
2. மலவாசல் சோதனை
3. பெருங்குடல் முழுமையாக கமரா மூலம் பரிசோதனை
4. உணவு எவ்வாறு நகர்கிறது என்பதனை பரிசோதனை செய்தல், MRI எனப்படும் விசேட காந்தவியல் பரிசோதனை செய்யப் படல் நடைபெறலாம்.

இதற்குரிய சிகிச்சை எமது தினசரி வாழ்வியலுடனேயே ஆரம்பிக்கிறது.

1) நார்ச்சத்துள்ள உணவுகளை உண்ணுதல் முதல் தேவையாகும். ஒவ்வொரு 1000 கலோரிக்கும் 14 கிராம் நார்ச்சத்து தேவை.
2) கூடிய அளவு உடற்பயிற்சி தேவை.
3) போதியளவு நேரம் மலம் கழிக்க செலவு செய்யவேண்டும்.

இவை தவிர தற்போது பல மலமிழக்கி மருந்துகள் உள்ளன. இதனை Laxatives என்பர். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமானவை. Metamucil, Prodiem போன்ற மருந்துகள் பிரசித்தி பெற்றவை. இவற்றில் நார்ச் சத்துக்கள் உள. இதனை பேதி மருந்துகள் எனவும் கூறுவர். இதுதவிர சில தூண்டி மருந்துகளும் உள. இதனை Stimulants என்பர். Correctol, Bisacodyl போன்றவை. சில வகையான Osmotics மருந்துகள் உள. பெருங்குடலில் திரவத்தை உண்டு பண்ணுவதாகும். Oral Magnesium Hydroxide Lactulose போன்றவை. சில மருந்துகள் Lubricant எனப்படும். இதில் சில




சிலவேளைகளில் மலச்சிக்கல் அவசர சிகிச்சைக்கு கொண்டு சென்றுவிடலாம். அதாவது முற்றாக மலம் வெளியேறாது தடைப்படல், கடுமையான வயிற்றுவலி, சத்தி ஏற்படல், வயிற்றுக்குள் பெரிய குழப்பம் ஏற்படல், மலத்தில் இரத்தம் தெரிதல், 2 கிழமைமட்டில் மலம் வெளியேறாதிருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் அவசரி சிகிச்சையே தேவையாகும். சிலருக்கு வாயு (Gas) வெளியேறவே சிரமம் ஏற்படலாம். சிலர் களைப்புற்று விடுவார்கள். இது மிகவும் ஆபத்தாகும். இதனை Malaise நிலை எனக் கூறலாம். வெளியே எதுவும் தெரியாது. உள்ளே களைப்பு ஏற்படலாம்.

எண்ணெய் வகைகள் உள்ளன. சில மருந்துகள் மலத்தை மென்மையாக்குவன. அதனை Stool Softeners என்பர். இதில் Docusate calcium போன்றவை உள. சில மருந்துகளை Enemas and Suppositories என்பர். இதில் சோடியம் சல்பேற் அடங்கும். கிளிசரின் கூட பாவனையில் உள.

எல்லாவற்றையும்விட, எல்லாவற்றிற்கும் பின்பு சிலருக்கு சத்திரசிகிச்சையும் தேவைப்படலாம். எல்லா முயற்சிகளுக்கும் பின்பே இவ்வாறு செய்ய நேரிடுகிறது.

# மல்லிகை புரட்சி *Jasmine Revolution*



சுந்தரம் இந்திரராஜா

அழகான துனீசியாவில் 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட இளைஞர் எழுச்சி, மல்லிகை புரட்சி என வர்ணிக்கப்படுகிறது. காரணம் அறிவதற்கு முன்னர் துனீசியாவைப்பற்றி நாமும் கொஞ்சம் அறிந்து வைத்திருப் போம். வட ஆபிரிக்கக் கண்டத்தில் மத்திய தரைக் கடலை ஒட்டி அமைந்துள்ள ஒரு சிறிய நாடு ஆகும். ஆபிரிக்கக் கண்டத் தின் வடகோடியில் அமைந்துள்ள அல்ஜீரியா, லிபியா ஆகிய நாடுகள் துனீசி யாவின் அயல்நாடுகள். மேலும் அட்லஸ் மலைத்தொடரை ஒட்டியுள்ள நாடுகளில் சிறியதும் இதுவே ஆகும். நாட்டின் தென் பகுதி (40 சதவீதபரப்பு) சகாராப் பாலை வனம் ஆகும். எஞ்சியுள்ள பகுதிகள் வளம் நிறைந்தவை ஆகும். இதன் வட எல்லை மத்திய தரைக் கடற்கரையின் நீளம் 1300 கிலோமீட்டர் ஆகும்.

இதுவரை துனிசியாவை பார்க்காதவர்கள், அது துபாய், குவைத் போலிருக்கும் என்று நினைத்தால், அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். பிரான்சில் வாழும் ஒரு வரை துனீசியாவின் தலைநகர் டியூனிஸ் (Tunis)இல், அல்லது வட துனீசியா பகுதி யொன்றில் கொண்டுவந்து விட்டால், வித்தி யாசம் கண்டுபிடிக்க மாட்டார். இயற்கை, நில அமைப்பு மட்டுமல்ல, கட்டிடங்கள் தெருக்கள் எல்லாமே பிரான்சின் தெற்குப் பகுதி போன்றிருக்கும். ஒரு சராசரி "முஸ்லிம் நாட்டில்" நீங்கள் எதிர்பார்க்கும் எதுவும் அங்கே கிடையாது. தெருவோர பெட்டிக் கடையில் சாதாரணமாக பியர், வைன் வாங்கலாம். பெண்கள் சுதந்திர மாகத் திரிகின்றனர். நகரங்களில் நட்சத்திர



ஹோட்டல் டிஸ்கோ நடனமாடும் மண்ட பத்தில் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த நங்கைகளைக் காணலாம். துனீசிய பெண் கள் மிகவும் அழகானவர்கள். ஐரோப்பிய மகளிரைப் போல கவர்ச்சியான உடை அணிவதும் சர்வசாதாரணம். தலையில் முக்காடு போட்ட பெண்ணை துனீசியாவில் மிக மிக அரிதாகவே காண முடியும். அதுமட்டுமல்ல, ஒரு சராசரி ஐரோப்பிய நாட்டில் உள்ளதைப் போல, பெண்கள் சம உரிமையுடன் அனைத்துத் துறைகளிலும் பிரகாசிக்கின்றனர். மேலும், முஸ்லிம் இளைஞர் எந்த மதத்தை சேர்ந்த பெண்ணையும் காதலித்து, திருமணம் செய்துகொள்ள முடியும்.


2009ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மத்திய தரைக் கடலை ஒட்டி அமைந்துள்ள துனீசியாவையும் பாதித்தது. பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டித் கொடுத்த உல்லாசப் பயணத்துறை, நஷ்டத்தை நோக்கிச் சென்றது. ஏற்றுமதி, அந்நிய முதலீடு அரைவாசியாக குறைந் தது. இதனால் வேலையற்றோர் தொகை அதிகரித்தது. பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்த காலத்தில், துனீசியா அரசு அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கியது. இதனால் படித்த வாலிபர்கள் பெருகினர். அரபு நாடுகளில் அதிகளவு படித்த மத்தியதர வர்க்கத்தைக் கொண்ட நாடுகளில் துனீசியா முன்னணியில் திகழ் கின்றது. ஆனால் அத்தகைய அபிவிருத் திக்குப் பின்னால், சர்வாதிகார அரசு மக்களை அடக்கி வைத்திருந்தது. அரசி யல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட்டிருந்தன.

மேற்கத்திய நாடுகளால் ஆதரவளிக்கப் படும் சர்வாதிகாரிகள், ஜனநாயக சுதந் திரத்தை மறுக்கும் அரசு அடக்குமுறை, வேலைவாய்ப்பின்மை, வறுமை, இவை சாதாரண மக்களை பாதிக்கும் பிரச்சினை கள். விரக்தியுற்ற இளைஞர்கள் பட்டப் படிப்பு படித்தாலும் வேலையின்றி, வெளி நாடுகளுக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடு போக வசதியற்றவர்கள், தீவிர வாதிகளாக மாறுகிறார்கள். மேற்கத்திய நாடுகளும், உள்நாட்டு சர்வாதிகாரிகளும் அவர்களை அல்கைதா என்று முத்திரை குத்தி அடக்கினார்கள்.

உல்லாசப் பயணிகளால் அதிக வருமானம் கிடைக்கும் கரையோர நகரங்கள் என்றும் போல அமைதியாகத்தான் இருந்தன. ஆனால் பொருளாதார ரீதியாக பின்தங்கிய உள்நாட்டு நகரங்களில் தான் மக்கள் வீதிக்கு வந்து போராடத் தொடங்கினர். உணவுப் பொருட்களின் விலையேற்றம், ஏற்கனவே தொழில் வாய்ப்பற்ற பகுதிகளை மோசமாகத் தாக்கியது. டியூனிஸ் (Tunis), சௌஸ் (Sousse), ஸ்பக்ஷ (Sfax) போன்ற நகரங்கள் சுற்றுலாத் துறை, சர்வதேச

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)






* Concept*

REGISTER TODAY TO RECEIVE BROCHURE, FLOOR PLANS & PRICE LIST

BECOME A VIP CLIENT
"Working with a VIP Agent allows you to access in the Initial Stage of the Project as a VIP Client and get the Advance VIP pricing for a particular project prior to any public opening."

- DEVELOPMENT NAME: Appleview Towns
- BUILDING TYPE: Freehold Townhome
- UNIT SIZES: Upto 2,263 Square Feet
- PRICE RANGE: Starts from $549,900
- ESTIMATED COMPLETION : Spring 2020

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

For More info. Call 416.321.6969

HomeLife / GTA Realty Inc. *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated

# MORTGAGES

**எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்!**

*Merry Christmas &*
*A Happy New Year*



# NESAN

**416-908-5656**

SUBRA
MORTGAGE FINANCIAL

## WE DEAL WITH ALL BANKS

TD Canada Trust
Scotiabank
RMG mortgages
FIRST NATIONAL FINANCIAL LP
EQUITABLE BANK
radius financial
MCAP
HOME TRUST
STREET CAPITAL

Mortgage Alliance - Brokerage # 10530

SUBRA
ACCOUNTING TAX

Bus: +1416-660-5656
Toll: 1-844-878-2721

Our Off: 1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1

**INCOME TAX SERVICES:**

Personal Tax Returns (T1)
Corporate Tax Return (T2)

**ACCOUNTING SERVICES:**

Bookkeeping, Business Registration
Payroll & Many More...

www.subra.com
tax@subra.com

# மாவீரர் நாள் நிகழ்வுகள் - 2018


யாழ்.பல்கலைக்கழக மாவீரர் திடல்


யாழ்.கோப்பாய் துயிலுமில்லம் முன்பாக


மட்டக்களப்பு - தாண்டியடி துயிலுமில்லத்தில்


பிரித்தானியாவில் நடைபெற்ற மாவீரர் நாள்


பிரான்ஸ்சில் நடைபெற்ற மாவீரர் நாள்


யாழ்.சாட்டி துயிலுமில்லம்


முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்


கனடாவில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு


டென்மார்க்கில் நடைபெற்ற மாவீரர் நாள்


யாழ்.வல்வெட்டித்துறை மாவீரர் நினைவுத் திடலில்


கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்


நியூசிலாந்தில் நடைபெற்ற மாவீரர் நாள்


மெல்பேர்ண் நடைபெற்ற மாவீரர் நாள்

HOUSE, CONDO & COTTAGES FOR SALE

Toronto $299,000

Sale Of Business without Property Coin Laundromat

Portperry $539,800
2500Sqft, 15 Mini to Oshawa

Bedrooms:6 | Washrooms:3

Peterborough $549,900

Bedrooms:5 | Washrooms:3

Kawartha Lakes $649,900

2 Separate Lots Backing on to Water
Bedrooms:3+2 | Washrooms:2

Stouffville $$659,900

5.5 Acres 213ft Front
Bedrooms:3 | Washrooms:2

Oshawa $799,800

Bedrooms:4+4 | Washrooms:6

We Have Year Round Cottages For Rent Up To 20 People
1st ,2nd Mortgages Available up to 1 Million


A. ANTON JEEVA FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com

RE/MAX ROYAL PROPERTIES REALTY BROKERAGE
Independently Owned & Operated

Office: 416.321.0110
Fax: 416.321.0150
7595 Markham Rd, Unit #19, Markham, ON L3S 0B6

# தனிமை

- மங்களேஸ்வரி சிவா -

அதிகாலையில் கண்விழிக்கும்போதே மனதில் வெறுப்பும் விழித்துக்கொண்டது. கிடைத்த சிலமணி நேரத் தூக்கம் போதாது என்று உடல் கதறியது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை இன்பம் கொடுக்கும் நிகழ்வுகள் எதிர்காலத்தில் இல்லை. எதற்காக இந்த வாழ்க்கை? ஒரு ஓரமாக இருந்த மேசை மேல் என் குடும்பப்படம் என் வாழ்க்கைக் கான காரணத்தை நினைவு படுத்தியது.

மூன்று அடுக்கு உடைகளை அணிந்து குளிருக்குத் தயாராக வீதியில் இறங்கி னேன். நான் வேலை பார்க்கும் உணவகம் அருகில் இல்லை. அதன் அருகில் வாழ எனக்கு வசதியில்லை. பேருந்து நிலைய த்தை அடைந்து காத்திருந்தேன். வானம் இருட்டியிருந்தபோதும் கூரைகளின் மேல் பனிப்படலங்களில் வெண்மை தோன்றின. எத்தனை அடுக்கு உடைகள் அணிந்தா லும் குளிர் வழி கண்டுபிடித்து ஊடுருவி விட உடல் நடுங்கியது. என்னை வேதனை யில் இருந்து காப்பாற்ற அங்கு வந்த பேருந்தில் ஏறி அமர்ந்துகொண்டேன். வெளிநாடு என்றால் வசதிகளும் ஆடம்பர மும் நிறைந்தவை என நினைக்கும் எம் நாட்டவருக்கு நாங்கள் படும்பாட்டைப் புரிய வைக்க முடியவில்லை. யன்னல் வழியாகத் தாண்டிச் செல்லும் காட்சிகளை ஆர்வம் இன்றிக் கண்கள் ஆராய்ந்தன. மனமோ விட்டுவந்த உறவுகளை நினைவு கூர்ந்தன. அப்பா இறந்தபோது எனக்குப் பதினேழு வயது. எனக்குப் பின்னால் இரண்டு தங்கை கள் இரண்டு தம்பிகள் எனப் பெரிய குடும்பம். நான்தான் குடும்பத்தின் தலை வன் என அம்மா சொன்னபோது மறுபேச் சின்றி ஏற்றுக்கொண்டேன். அங்கேயே எடு பிடி வேலை பார்த்துக் கிடைத்த கொஞ்சப் பணத்தைக்கொண்டு குடும்பம் நடத்த அம்மா சிரமப்படுவதைப் பார்த்து வெளிநாடு வர முடிவு செய்தேன்.



அதிகம் படிப்பில்லாத எனக்கு ஓர் உணவகத்தில் வேலை கிடைத்தது. தம்பி தங்கையை நன்றாகப் படிக்க வைத்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைப் பதுதான் என் குறிக்கோளாக இருந்தது. பேருந்து எனது நிறுத்தத்தை வந்தடைந் தது. சில நிமிடங்களில் என் வேலையும் ஆரம்பமானது. காலை ஐந்து மணிக்கு ஆரம்பமானது மாலை எட்டு மணிவரை தொடர்ந்தது. உணவகத்தில் வேலை பார்த் தபோதும் எனக்கு உணவு வேண்டுமானால் பணம் கொடுத்துத்தான் வாங்கவேண்டும். எனக்குக் கிடைக்கும் பணத்தில் முடிந்த வற்றை என் குடும்பத்திற்கு அனுப்பிவிட்டு உணவு வாங்கப் பணமின்றி நாள் முழுவது பட்டினியுடன் வேலை செய்தபின் கடையை மூடும்போது முதலாளி கொடுத்த எஞ்சிய பொருட்களை நன்றியுடன் பெற்றுக் கொண்டு மறுபடியும் பேருந்து நிலையத்தை அடைந்தேன்.

களைப்பும் பசியுமாக நான் தங்கியிருக்கும் அறையை அடைந்து உணவுப் பொட்டலத் தைப் பிரித்தபோது தொலைபேசி அழைத் தது. நான் அங்கிருக்கும்போது கையைக் கட்டி வாயைக்கட்டி வாழ்ந்த அம்மா நான் இங்கு வந்தபின் தினமும் பணம் கொடு என்று நச்சரிக்க ஆரம்பித்தார். பணத்தை சேமித்து தம்பி தங்கையைப் படிக்கவைக்க வேண்டும், தங்கைகளைத் திருமணம் செய்து கொடுக்கவேண்டும். அதன்பின் நான் ஊர் திரும்பலாம் என்ற என் ஆசை கலைந்துபோனது.

தம்பிக்கு பைக் வேண்டப் பணம் வேண்டும். ஏனென்றால் அவன் நண்பர்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். தங்கைக்கு புதிய கைத்தொலைபேசி வேண்டும். ஏனென்றால் அது இல்லாமல் அவளால் வாழமுடியாது. ஒன்று மாற்றி ஒன்றாக தேவைகள் அதி- கரித்தன. தொலைபேசி மணியோசை ஓய வில்லை. களைப்புடன் உணவுப் பொட்டல த்தை வைத்துவிட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டு தொலைபேசியை எடுத்தேன்.

“வருகிற மாதம் என் அக்கா மகளுக்குத் திருமணம். அதற்கு எனக்கும் உன் தங்கை களுக்கும் பட்டுப்புடவைகள் வாங்க வேண் டும். கொஞ்சம் பணம் அனுப்பு” என்றார். எப்படி இருக்கிறாய் என்று ஒரு கேள்வி இல்லை. அவர் குரலில் தாய்ப்பாசம் இல்லை. என்னை அவர் தன் மகனாகப் பார்க்கவில்லை. பணம் காய்க்கும் மரமாக என்னை நடத்தும் குடும்பத்தை நினைத்து தினமும் இன்னல்களை எதிர்கொள்ளும் என் மனதில் கொஞ்சக்காலமாக ஒரு நெருடல்.

முடியாது என்று சொல்லிப் பழக்கமில்லை. பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதும் தேவைகளை நிறைவேற்றுவதும் பழகிப் போன விஷயம். முதலில் நீ உன்னை நேசிக்கக் கற்றுக்கொள் அப்போதுதான் மற்றவர்கள் உன்னை நேசிப்பார்கள் என்று சொல்வார்கள். நான் இதுவரை என்னை நேசிக்கவில்லை. குளிரிலும் பசியிலும் என்னை வாட்டினேன். இன்பங்களை எனக்கு மறுத்தேன். இப்போது யாருடைய அன்பும் இன்றி தனிமையில் நின்றேன்.

“என்னிடம் பணம் இல்லை” என்றேன் சுருக்கமாக. அம்மா அதிர்ச்சியுடன் திணறு வது புரிந்தது. “நான் கஷ்டப்பட்டு சம்பாதி க்கும் பணம். உங்களுக்கு அவசிய தேவை களுக்கு மட்டுமே இனிமேல் பணம் அனுப் புவேன். அவற்றுடன் வாழப் பழகிக்கொள் ளுங்கள்.” என்றுவிட்டு தொலைபேசியைத் துண்டித்துவிட்டு உணவை ரசித்து உண்ண ஆரம்பித்தேன்.


JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator




Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4

# மல்லிகை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

வணிகம் காரணமாக அதிக வளர்ச்சியடைந்திருந்தன. அப்படி எந்த அதிர்ஷ்டமும் வாய்க்கப் பெறாத பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு, குறைந்த ஊதியத்துடன் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ வேண்டிய நிர்ப்பந்தம். மொத்த தேசிய வருமானத்தில் கூடிய செல்வத்தை, 10வீத பணக்காரக் கும்பல் அனுபவிக்கின்றது. கீழ்த்தர, மத்தியதர வர்க்கத்தை சேர்ந்த மக்கள் பொருளாதார பிரச்சினைகளால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர்.

பொருளாதார சீர்திருத்தங்கள் எதுவும் அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை தோற்றுவிக்கவில்லை. சாதாரண பணியாளர்களும், பாவனையாளர்களும் வரி செலுத்திக் கொண்டிருக்கையில், பணக்காரர்களும், வணிக நிறுவனங்களும் வரிச் சலுகை பெற்று வந்தனர். நாட்டின் பெரிய வர்த்தக நிறுவனங்கள் யாவும் ஜனாதிபதி பென் அலியின் (Zine El Abidine Ben Ali) குடும்ப சொத்தாக இருந்தன. பென் அலி குடும்பத்தின் பேராசையும், அகங்காரமும் ஊழலுக்குக் காரணம் என்று துனீசியா பொது மக்கள் குறைபட்டுக் கொண்டிருந்தனர்.

பட்டப் படிப்பு முடித்தும் வேலை வாய்ப்பு இல்லை. சீவியத்திற்காக நடைபாதையோரமாக காய்கறி விற்றுக் கொண்டிருந்தான் 26 வயதேயான வேலையற்ற பட்டதாரி இளைஞன் முஹமது. போலிஸ், விற்பனை அனுமதிப் பத்திரத்தை கேட்டு தொந்தரவு செய்ததன் காரணமாக மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டான். ஊர், பேர் தெரியாத இளைஞனின் மரணச் சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஒரு மக்கள் புரட்சியாக மாறும் என்று எவரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

விரைவிலேயே அவர்களது சீற்றம் அதிகார வர்க்கம் மீது திரும்பியது. அரசு நிறுவனங்கள் தாக்கப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன. 23 வருடங்களாக துனீசியாவின் சர்வாதிகார ஆட்சி நடத்த உறுதுணையாக இருந்த பிரெஞ்சு தூதரகம் கூட சுற்றி வளைக்கப்பட்டது. வேலையற்ற இளைஞர்களின் கலகமாக ஆரம்பித்தாலும், வழக்கறிஞர்களும், தொழிற்சங்கமும் தமது ஆதரவை தெரிவிக்கும் வகையில் போராட்டத்தில் குதித்தனர். உழைக்கும் வர்க்கமும், இழப்பதற்கு எதுவுமற்ற மக்களும் ஒன்று சேர்ந்து போராடினால் புரட்சி நிச்சயம் என்பதை துனீசியா மக்கள் சாதித்துக் காட்டியுள்ளனர்.

கலகத்தை அடக்க அனுப்பப்பட்ட போலிஸ் படை, வழமையான துப்பாக்கிச் சூடு, கைதுகள் என்று மக்கள் எழுச்சியை அடக்கப் பார்த்தது. 338பேர் கொல்லப்பட்டனர், 2147பேர் காயமுற்றனர். இறுதியில் துனிசியா சர்வாதிகாரி பென் அலியே முன் வந்து கைது செய்தவர்களை விடுதலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. திடீரென்று உறக்கத்தில் இருந்து விழித்துக் கொண்ட பென் அலி, வேலையற்ற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தப் போவதாக விடுத்த அறிவிப்பை யாரும் பொருட்படுத்தவில்லை. கொடுங்கோல் அரசின் இணையத் தடையை மீறி டிவிட்டர் (Twitter), முகநூல் (Facebook) போன்ற சமூக வலையமைப்புகள் எதிர்ப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிவித்துக் கொண்டிருந்தன. போலிஸ் அடக்குமுறைகளை காட்டும் வீடியோக்களை (Youtube), உடனுக்குடன் மறைத்தும் அழித்தும் கொண்டிருந்தது அரசு. ஆயினும் எல்லா வித தடைகளையும் மீறி, புரட்சி வென்றது. இறுதியில் நாட்டை விட்டு வெளியேறி, சவுதி அரேபியாவில் அகதித் தஞ்சம் கோர வேண்டிய அவல நிலை ஏற்பட்டது சர்வாதிகாரி பென் அலிக்கு (Ben Ali). அரபுலகில் முதன் முதலாக இணையம் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட புரட்சியும் இதுவாகும். துனீசியா முன்னாள் பிரெஞ்சுக் கொலனி என்பதும், பிரான்ஸ் முக்கியமான வர்த்தக கூட்டாளி என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறிய நாடான துனீயாவில் மக்கள் புரட்சி வென்று விட்டது.

துனீசியாவைத் தொடர்ந்து எகிப்தில் கிளர்ந்த மக்கள் எழுச்சியைக் கண்டு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் அதிர்ந்தன. எகிப்தின் போராட்டம் தங்களுக்கு எதிராக மக்கள் கைகளில் தொடர்ந்து இருப்பது ஆபத்து என உணர்ந்த ஏகாதிபத்தியங்கள் களத்தில் இறங்கின. எகிப்தின் சர்வாதிகாரி முபாரக்கை பதவி விலகுமாறு அமெரிக்கா கோரியது. இந்தப் போராட்டங்களிலிருந்து விலகியிருந்த எகிப்தின் முஸ்லீம் சகோதரத்துவக் கட்சி மக்கள் ஆதரவை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் எண்ணத்துடன் மக்களுடன் இணைந்தது. பதவி விலக முடியாது என்றும் அடுத்த தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்றும் கூறிவந்த முபாரக் போராட்டம் தொடரவே, முடிவில் பதவி விலகினார், செய்த குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டார். இங்கும் மக்கள் புரட்சி வென்று விட்டது.

துனிசியாவில், சர்வாதிகாரி பென் அலியின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக, 2010ல் மக்கள் போராட்டம் வெடித்தது. இதையடுத்து, ஜனவரி 2011ல், பென் அலி விரட்டப்பட்டு, துனிசியாவில் மக்களாட்சி மலர்ந்தது. இந்த மக்கள் புரட்சியின் தாக்கம், எகிப்து, லிபியா, சிரியா, ஏமன், பஹ்ரைன், சவுதி அரேபியா, ஜோர்டான் ஆகிய அரபு நாடுகளுக்கும் அடுத்தடுத்து பரவியது. அரபு நாடுகள், ஜனநாயக பாதைக்குத் திரும்ப, தூண்டுகோலாக விளங்கிய, மக்களின் இந்த எழுச்சிப் போராட்டம், "மல்லிகை புரட்சி" (Jasmine revolution) என அழைக்கப்படுகிறது. இந்த வகையில், துனிசியாவில், ஜனநாயக முறைப்படி மக்களாட்சி மலர, அங்குள்ள, நான்கு முக்கிய அமைப்புகளைக் கொண்ட, தேசிய மத்தியஸ்த குழு, முக்கிய பங்காற்றியுள்ளது. இதனைப் பாராட்டி இக்குழுவிற்கு, 2015ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு "ராயல் சுவீடீஷ் அகாடமி" குழுவினரால் வழங்கப்பட்டது.



மழைக்காலத் தவளைக்கும் வெளிக்காட்டக் குரலுண்டு ஈரானில் சர்வாதிகாரி ஷா, பிலிபைன்சில் சர்வாதிகாரி மார்கோஸ், உகாண்டா சர்வாதிகாரி இடிஅமின், மக்கள் புரட்சியால் விரட்டப்பட்டு நாடு நாடாக அலைந்தார்கள், வேறு நாடொன்றில் இறந்தார்கள். ரஷ்யப்புரட்சியின் விளைவாக

304 ஆண்டுகள் ஆண்ட சக்கரவர்த்தி குடும்பம் மற்றும் ருமேனியாவின் சர்வாதிகாரி நிக்கோலா-சௌசெஸ்கு குடும்பம் சிறை பிடிக்கப்பட்டு கொலை செய்யப் பட்டனர். ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் சிறை பிடிக்கப்பட முன்னர் தற்கொலை செய்து கொண்டார். 2011ஆம் ஆண்டு எகிப்தின் மக்கள் புரட்சியை அடுத்து பெப்ரவரியில் லிபியாவிலும் முஆம்மர் கடாபியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அண்மையில் 37 ஆண்டுகள் ஜிம்பாப்வேயை ஆண்ட சர்வாதிகாரி ராபர்ட் முகாபி வலுக்கட்டாயமாக பதவி நீக்கப்பட்டார். பனாமாவில் சர்வாதிகாரி நொரிகா, ஈராக்கில் சர்வாதிகாரி சதாம் இவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் அமெரிக்காவின் நண்பர்களாக இருந்து பிற்காலத்தில் எதிரியாகி மடிந்தனர் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

வரலாற்றுச் சுருக்கம்: 7ஆம் நூற்றாண்டில் அரபு படையெடுப்புக்கு முன்னர், துனீசியா கர்தேஜ் பேரரசுக்கு (Carthage Empire) ஒரு பகுதியாக இருந்தது, அதன்பின் ரோமானிய பேரரசின் பகுதியாக இருந்தது. 1880களில் இருந்து துனீசியாவை பிரெஞ்சுப் படைகள் குடியேறி பிரெஞ்சுக் கொலனியானது. துனீயா ஒரு சூடான, வறண்ட காலநிலை மற்றும் பல அழகான கடற்கரைகளைக் கொண்டுள்ளது. 1956இல் பிரான்சிலிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து துனிசியாவை 30 ஆண்டுகளாக ஆட்சி நடத்திய அதிபர் ஹபீப் போர்குயிபா (Habib Bourguiba). அப்போது வயது 84, பலவீனமாகவும், பதவியில் தொடரத் தகுதியற்றவராகவும் மக்கள் கருதினர், மேலும் 1987 நவம்பர் 7ஆம் திகதி அப்போது பிரதமராக இருந்த பென் அலி அவரை ஒரு அமைதியான புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். அதன்பின்னர், நாடு பல ஆண்டுகளாக ஜனநாயகம் நோக்கிப் பணியாற்றி பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் முன்னேற்றமடைந்து வந்தும், வேலையற்ற மக்களால் 23 ஆண்டுகளாக ஆட்சி நடத்திய அதன் அதிபர் பென் அலி அந்நாட்டு மக்களின் எழுச்சியால் நாட்டை விட்டு வெளியேறினார். 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கும், ஒரு மாதத்திற்கு பின்னர் அதன் ஜனாதிபதிக்கும் வாக்களிக்கும் உரிமையை துனிசியர்கள் பெற்றனர். 2017ஆம் ஆண்டு துனிசியாவின் மக்கள் தொகை ஏறக்குறைய பதினொரு மில்லியனாகும். மற்றய சிறுபான்மையினர் பிரான்ஸ் மற்றும் இத்தாலியை சேர்ந்த ஐரோப்பியர்கள் உள்ளனர். துனீசியாவில் பேசப்படும் இரண்டு மொழிகள்: அரபு மற்றும் பிரஞ்சு.

அழகான நீல-வெள்ளை கிராமம்: சிடி அவூ சயீத் (Sidi Abou Said) என்பது தலைநகர் டியூனிஸ் இன் வடக்கே ஒரு அழகான நீல-வெள்ளை இடைக்கால (Medieval) கிராமம். மத்திய தரைக்கடலை கண்டும் காணாதது போல் ஒரு செங்குத்தான குன்றின் மேல் அமைந்துள்ளது. 13ஆம் நூற்றாண்டில் அவூ சைட் (Abou Said) என்பவர் இக்கிராமத்தில் வந்து ஒரு சரணாலயத்தை நிறுவினார். நீண்ட காலமாகப் பாதுகாக்கப்படும் பொஹமியன் சரணாலயம், அதன் அழகு இப்போது செல்வந்த துனீசிய மக்களையும், சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் ஈர்க்கிறது.

18ஆம் நூற்றாண்டில் துனீசியாவுக்கான துருக்கிய ஆளுநர்கள் மற்றும் பிற்பகுதியில் செல்வந்தக் குடும்பங்கள் சிடி அவூ சயீத்தில் வந்து வீடுகளைக் கட்டி வசித்தனர். இக்கிராமத்தில் உள்ள சகல கட்டிடங்கள், வீடுகள், கடைகள் யாவும் வெள்ளை நிறச் சுவர்கள், நீல நிறக் கதவுகளும் யன்னல்களும் கொண்ட திகைப்பூட்டும் காட்சி. பெரிய, சிறிய மாளிகைகளின் நுழைவாயில் முற்றங்கள் மொசைக்-ஓடுகள் பதித்தவை, நீரூற்றுகள் மற்றும் ஆரஞ்சு மரங்கள் மொராக்கோ

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)

**Food Handler Certification**
Are you serving in a restaurant? or PSW or ECA
உங்களுக்கு Food handler certificate தேவைப்படலாம்.
Call experienced Instructor.
கலா: **647.624.2314/kalasarvaa@gmail.com**
( Group classes conducted at MARKAM & STEELS and at your location.)

# நினைவில் நிற்பவை -6

## விசேட விழாக்கள், சம்பவங்கள், மனிதர்கள்



- துறையூரான் -

சென்ற கட்டுரையில் சிவயோக சுவாமிகள் பற்றிப் பார்த்தோம். அவரைப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. எனவே மேலதிகமாக அறிய விரும்பும் அன்பர்கள் அவற்றை வாசிக்கலாம். எனக்கு அவரோடும். அவர்தம் சீடர்களோடும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது பெரும் வேறு என நினைக்கிறேன். அவை பற்றிப் பின்னால் வரும் அத்தியாங்களில் எழுதுவேன்.

நான் சிறுவனாக இருந்தபோது நடைபெற்ற சில விழாக்கள் சம்பங்கள் பற்றிப் பார்ப்போம். இலங்கையின் சுதந்திர விழா முதன் முதலில் யாழ். முற்ற வெளி மைதானத்தில் 1948 பெப்ரவரி மாதம் மிகவும் கோலாகல மாகக் கொண்டாடப்பட்டது. எனக்கு அப்போது 9 வயது. நானும் சில நண்பர்களும் அன்றைய விழாவைக் கண்டுகளிக்க நடந்து சென்றோம். அன்று பல கலை களிக்க நடந்து சென்றோம். அன்று பல கலை விழாக்கள் மேடையேற்றப்பட்டன. ஒரே சனக் கூட்டம். யாவருக்கும் கடதாசிப் பைகளில் சிற்றுண்டியும் குளிர்பானமும் வழங்கப் பட்டது. பல அரசியல் பிரமுகர்களும் மாந கரசபை முதல்வர் உறுப்பினர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர். பல பேசினர். அவர்களின் பெயர்கள் ஞாபகத்தில் இல்லை. மேயராக நடராசா அல்லது விசுவநாதன் இருந்திருக்க வேண்டுமென நினைக்கிறேன்.

அங்கிருந்த சனக் கூட்டத்தில் என்னோடு வந்த நண்பர்களைத் தவறவிட்டுத் தவித்துக் கொண்டிருந்தேன். இருட்டும் நேரம் வந்தது. அன்று முற்றவெளி மைதானம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதற்காக விசேட மின்பிறப்பாக்கி (Generator) வேலை செய்து கொண்டிருந்தது. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது பாண்டியன் தாழ்விலிருக்கும் எனது பாடசாலை நண்பர்கள் சிலரைச் சந்தித்தேன். அவர்கள் தாங்கள் கரையூர் முற்ற வெளிக்கு வாணவேடிக்கை பார்க்கப் போவதாகவும் விரும்பினால் வரலாமெனவும் கூறினர். எனவே வேறு வழியில்லாமல் அவர்களோடு சேர்ந்து அங்கு சென்றேன். வாண வேடிக்கை 7 மணிக்கு ஆரம்பமாகி 8 மணிக்கு முடிவடைந்தது. எனவே 9 மணியளவில் வீட்டுக்குச் சென்றேன். வீட்டுத் தெருவிலே எனது குடும்பத்தவர் பலரும் அயல்வீட்டுக்காரரும் கையில் சிம்னி விளக்குகளுடன் காவல் நின்றனர். எனக்கு இது புதுமையாக இருந்தது. எல்லோரும் என்னைக் கண்டவுடன் ஆரவாரம் செய்து "உன்னைக் காணாமல் நாங்கள் 7 மணி தொடக்கம் தேடிக் கொண்டிருக்கிறோம். நீ எங்கே போய்விட்டு வருகிறாய் என ஒரே மங்களம் பாடினர்.

என்னோடு வந்த நண்பர்கள் 7 மணியளவில் வீட்டுக்குப் போய் என்னைக் காணவில்லை என்றும் தாங்கள் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள். உடனே எனது தகப்பானரும் அயல் வீட்டுக்காரரும் முற்றவெளிக்குச் சென்று அங்கிருந்த ஒலி பெருக்கியில் பலமுறை என்னை ஒலி பெருக்கிக் காரியாலயத்துக்கு வரும்படி அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நான் அதற்கு முன்னரே கரையூர் முற்ற வெளிக்குச் சென்று விட்டேன். இதனால் எமது குடும்பத்தவர் 'குய்யோ முறையோ' என்று அலறிப் பதைத்துப் போயினர். இதற்கிடையில் அயலில் இருந்த பலரும் விடயம் அறிந்து வீட்டுக்குப படையெடுக்கத் தொடங்கினர். பொலிசுக்கும் அறிவிக்கப் பட்டது. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அவன் வேறு ஆட்களோடு வாணவேடிக்கை பார்க்கப் போயிருக்கலாம். நீங்கள் பதட்டப் படத் தேவையில்லை. இரவும் வீட்டுக்கு வரவில்லை என்றால் எங்களுக்கு வந்து அறிவியுங்கள் என. எனவே என்னைக் கண்டதும் அவர்களுக்கு ஒரே சந்தோசமும் நிம்மதியும். இதற்கிடையில் தகப்பனார் எனக்கு அடிபோட வந்தார். ஆனால் அங்கிருந்தவர்கள் அவரைத் தடுத்து பிள்ளை புத்தியாய் தான் நடந்திருக்கிறான். அவனை நண்பர்களோடு போகவிட்டது உங்கள் பிழை எனக்கூறிச் சமாதானப்படுத்தினர். நான் தொலைந்துபோன கதை சில நாட்களாக ஊர் முழுவதும் ஒரே புதினமாகப் பேசப் பட்டது. நண்பர்கள் என்னைக் கேலியும் செய்தனர்.

அந்நாட்களில் நல்லூர்த் தெருவிழா ஒரு முக்கியவிழாவாக யாழ். குடா முழுவதும் கொண்டாடப்பட்டது. அவ்வழக்கம் இன்றும் அவ்வாறே பேணப்பட்டு வருகிறது. நல்லூர்க் கோவில் வரலாறு பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டுள்ளன. நான் சிறுவனாக இருந்தபோது பெற்றோருடன் திருவிழாக்களுக்குச் செல்வது வழக்கம் பின்னாட்களில் 9, 10 வயதுக்குப் பின் நண்பர்களோடு கூட்டமாகச் செல்வது வழக்கம். சுவாமி தரிசனத்தோடு அங்குள்ள பொம்மைக் கடைகள், கடலை கச்சான் விற்பனைக் கடைகள் போன்றவையே எம்மை பெரிதும் கவர்ந்தன. சன நெருக்கடி அப்போதும் பெருமளவில் காணப்பட்டது. யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பஸ், மாட்டுவண்டி, நடை எனப் பல வழிகளில் மக்கள் வந்து குவிவது வழக்கம். இறுதித் திருவிழாக்களின் போது கொழும்பு, கண்டி போன்ற தொலைவிலுள்ள நகரங்களிலும் வெளி நாடுகளிலுமிருந்து அடியார்கள் வந்தனர். வெளிநாட்டு அடியார்களின் தொகை அண்மைக் காலமாகக் கூடியளவில் உளது. அந்நாட்களில் இலண்டனுக்கு மேற்படிப்புக் காகவே பெரும்பாலானோர் சென்றனர். தற்போது உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் தமிழர் வாழ்கின்றனர்.

அந்நாட்களில் 8 மணிக்குச் சரியாக சுவாமி வெளி வீதி உலாவுக்கு வந்து 9 மணிக்கு உள்ளே சென்று 10 மணிக்குக் கோவில் கதவுகள் பூட்டப்பட்டுவிடும். பின்னர் போர்க் காலங்களில் பகல் பூசைகளும் திருவிழாக் களும் பகலில் மட்டும் நடைபெற்றன. பின்னால் பிற்பகல் 4 மணிக்கு வீதி வலம் வந்து 6 மணிக்கு யாவும் நிறைவடைந்த காலங்களும் இருந்தன. தற்போது 6 மணிக்கு ஆரம்பித்து 9 மணிக்கு யாவும் முடிவடைந்தது விடும்.


நான் சிறுவனாக இருந்த காலத்தில் பாத் திரக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் ஓரளவே இருந்தன. கடலை கச்சான் விற்பவர்கள் வரிசையாகக் கோவில் பின் வீதியிலும் முன்னால் பருத்தித்துறை வீதியிலும் இருமருங்கிலும் அமர்ந்திருந்து வியாபாரம் செய்தனர். அந்நாட்களில் 5 சதம் கொடுத்தால் கச்சான், கடலை, சோளப் பொரி ஆகியன தருவார்கள். பெரும்பாலும் நாங்கள் சால்வையின் ஒரு அந்தலையில் அவற்றை வாங்கிக் கட்டிக் கொண்டு வழி நெடுகக் கொறித்துக் கொண்டே போவோம். நடந்த அலுப்பும் தெரியாது. அந்நாட்களில் ஓரிரு பந்தல்கள் தான் இருந்தன. அவற்றில் முக்கிய திருவிழாக்களின் போது சக்கரை, மோர், ஊறுகாய்த் தண்ணீர் கொடுத்தனர். இரவு நேரங்களிலும் இவை வழங்கப்பட்டன. இவற்றை யாவரும் வாங்கிக் குடிப்பது வழக்கம். முக்கிய விழாக்காலங்களில் கோவிலைச் சுற்றியிருந்த மடங்களிலும் தெரிந்தவர்களின் வீடுகளிலும் அயலூர்களிலிருந்து பலர் வந்து தங்கியிருந்தனர். இவ்வாறு நல்லூர் திருவிழாக்காலங்களில ஒரே சனக் கூட்டமாகவே காட்சியளிக்கும். பெரும்பாலான சைவர்கள் சைவ உணவை ரூபாவுக்கும் சுருள் மருந்து 50சதத்துக்கும் விற்கப்பட்டது. சில வருடங்களின் பின் ஒரு நாள் ஒரு ஐஸ்கிறீம் முதன்முதலில் யாழ்ப் பாணத்தில் இத்திருவிழாவில் விற்கப்பட்டது. அப்போது விடயம் தெரியாத பலர் அதை வாங்கிக் கடித்துச் சாப்பிட முனைந்தனர். சிலர் அப்படியே வாய்க்குள் போட்டு குளிர் தாங்க முடியாமல் வெளியே துப்பிவிட்டு கீழிருந்த 'கோனை' (Cone)யும் எறிந்து விட்டுச் சென்றனர். நக்கிக் குடிக்க வேண்டுமென விற்பனை செய்தவர் சொன்ன பின்னே பலரும் வாங்கிச் சாப்பிட்டனர்.

அந்நாட்களில் கோன் ஐஸ்கிறீம் 15 சதத்துக்கு விற்கப்பட்டது. இதற்கு முன்பு 'ஐஸ்பழம்' என்று பல்வேறு நிறங்களில் ஈர்க்கிலும் மரக்குச்சிகளிலும் ஒட்டிக் கொண்டிருந்தவை விற்கப்பட்டன. இத்துடன் 'தும்பு முட்டாஸ்', றப்பர் இனிப்பு, பொரி கடலை, தேங்காய்ப்பூ இனிப்பு, தொதல், மஸ்கற், தோடம்பழ இனிப்பு, பல்லி முட்டாஸ் எனப்பலவகையான இனிப்புகள் விற்கப்பட்டன. பின்னாட்களில் குளுக்கோரச என்ற கொழும்பிலிருந்த நிறுவனம் ஜுயூப்பு ((Jujube)) என்ற ஒருவகை இனிப்பை சிறு பொலித்தீன் பைகளில் விற்க ஆரம்பித்தது. கடலை வியாபாரிகள் அடுப்பிலே கடலை



யே சாப்பிடுவது வழக்கம். இக்காலத்தில் மீன், இறைச்சி முதலியவற்றின் விற்பனை பெருமளவில் வீழ்ச்சியடைந்தே இருக்கும். இப்போதும் இந்நிலை நிலவுகிறது என நினைக்கிறேன்.

உற்பத்தி: துனிசியாவில் வறண்ட நிலப் பகுதியில் சில கள்ளிப்பூக்களின் வாசனை 300 மீற்றர் தூரத்துக்கு வருகிறது. இவற்றிலிருந்து வாசனைத்திரவியங்கள் (Perfumes) இங்கு தயாரித்து ஏற்றுமதி யாகிறது. இங்கே, நீங்கள் அலங்காரங் களுடனான நெய்த விரிப்புகள் (Woven rugs), கைவேலைப்பாடுகளுடன் செப்பு பானைகள் மற்றும் தட்டங்கள், நகைகள், உடைகள், மீன் மற்றும் காய்கறிவகைகள் வரை வாங்க முடியும். 1980களில் உலக எண்ணெய் விலை வீழ்ச்சியுறும் வரை, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு முக்கிய ஏற்றுமதிகளாக இருந்தன. இன்று சிட்ரஸ் பழங்கள், திராட்சை, அத்திப்பழம்




(figs), பேரீச்சம்பழங்கள் மற்றும் ஒலிவ் களை உற்பத்தி செய்யும் பல பண்ணைகள் உள்ளன. துனீசியா உலகின் நான்காவது பெரிய ஒலிவ் எண்ணெய் உற்பத்தியாளராக உள்ளது. பெட்ரோலிய, சுரங்க (குறிப்பாக பொஸ்பேட் - Phosphates மற்றும் இரும்பு தாது), ஜவுளிகள், காலணிகள், பானங்கள் ஏற்றுமதிப் பொருட்களாக இருக்கின்றன.

2015ஆம் ஆண்டுத் தாக்குதல்கள்: துனீ சியாவின் தலைநகர் துனீஸினில் நாடாளு மன்றத்துக்கு அருகே பழங்கால அருங் காட்சியம் ஒன்று உள்ளது. இங்கு இத்தாலி, ஜெர்மன் மற்றும் துனீசியாவின் பழங்கால ஓவியங்கள் உள்ளிட்ட பல்வேறு அரிய பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன. அருங்காட்சியகத்தில் போலந்து, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பானிஸ் உள்ளிட்ட பல்வேறு நாட்டு சுற்றுலா பயணிகள் சுற்றிப் பார்த்து ரசித்து கொண்டிருந்தனர். இந்நிலையில், துனீசிய நாடாளுமன்றதுக்குள் 18 மார்ச் 2015 காலை இஸ்லாமிய தீவிரவாத கும்பல் ஒன்று துனீஷிய ராணுவ உடையில் உள்ளே புகுந்து துப்பாக்கி தாக்குதல் நடத்தியது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் போலீசாரும் ராணுவத்தினரும் விரைந்து வந்து எதிர் தாக்குதல் நடத்தினர். பின்னர் அந்தத் தீவிரவாதக் கும்பல் அங்கிருந்து தப்பி ஓடி, அருகில் இருந்த அருங் காட்சியகத்துக்குள் நுழைந்தது. தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 24 பேர் பலியாகினர்.

26 ஜூன் 2015 நண்பகல் துனிசியாவின் தலைநகரான துனிஸ் நகரில் இருந்து சுமார் 150 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சவ்ஸி கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள இம்பீரியல் மர்ஹபா ஹெட்டல் பகுதியில் திடீரென புகுந்த ஒரு தீவிரவாதி அங்கு கூடியிருந்த மக்களின் மீது இயந்திர துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டான். இதில் பல்வேறு நாடுகளை சேர்ந்த 38 பேர் பலியாகினர். குறிப்பாக பலியானவர் களில் 30 பேர் இங்கிலாந்தை சேர்ந்தவர் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று துனீசியா பாதுகாப்பானதா என்று கேள்விக்குப் பதில் ஓரளவு பாதுகாப்பானது. பாதுகாப்பாக வைத்திருக்காவிடில் துனீசியா வின் சுற்றுலாத்துறை மேலும் வீழ்ச்சி யடையலாம்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

## EDUCATION

### Review Questions18- 23

➢ **PHYSICS 12**


(i) A bullet mass 0.010 kg is fired with a velocity of 330m/s into a pendulum bob of mass 0.990 kg, initially at rest. How high does the bob swing above its initial position?

(ii) A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction (horizontally) with the speed of 52m/s.

(iii) What is the impulse acts on the ball while it is contact with the bat?

If the impact time for the base ball-bat collision is 1.3m.s, calculate the average force acts on the base ball.

(iv) A plane flying horizontally at 800 km/h banks to make a turn as shown below. Determine the radius of the turn?




➢ **BIOLOGY 11**

Explain lethal dominant alleles and lethal recessive alleles ? Which is common, Explain.

➢ **ADVANCED FUNCTIONS 12**


(i) Find the solution,

(a) $|x^2 - x - 3| = -x + 3$

(b) $|3x + 8| = |2x - 3|$

➢ **CHEMISTRY 12**

Give IUPAC names of the following compounds




A. B.

Balance the equation in acidic solution
$FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

➢ **CHEMICTRY 11**

A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?


$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow 7H_2O_{(l)} + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

➢ **MATH 10**

Sum of a two digit number and one less than the number gives the reverse of the first number. If sum of the two digits of the first number is 10.
Find the number.

### Answer Key : 18- 22

(ii)




(a) T= mg = 900 ×9,8N

(b)(i)pulling back,

(h=15-15cos20)= 0.905m

$\Delta$ Eg =$\Delta$ mgh=mg ×0.905 J

$\Delta$ Eg = $\Delta E_k$ = $\frac{1}{2} mv^2$; V= 4.2m/s

(ii) $T = mg + mv^2/r = 9.9\times10^3 N$

(c) $V_2$= 0, $V_1$ = 4.2m/s; a = 4.2/0.2 = 21m/s²;

F = ma = 900 × 21N = $1.9\times10^3$N

Answer key
18- 23 next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

# பயங்கள்

- ஞானா உருத்திரன் -
gnana_uruthirenren@hotmail.com
www.gnanauruthiren.com/tamil
facebook-uruthirengnana

பயம் என்னும் உணர்வு என்பது ஏன் எங்களுக்கு வருகிறது. நாம் பயம் என்ற உணர்வால் பாதிக்கப்படுகிறோமா? பயம் என்ற உணர்வு ஆபத்தை உணர்ந்து எம்மை பாதுகாக்க ஒரு வழிகாட்டியாக அமைகிறது. அதாவது பயம் எமது உடலை ஆபத்தில் இருந்து பாதுகாக்க வைக்கிறது. பயம் என்ற உணர்வு எமது மூளையின் பின்பகுதியை பாதிப்பதன் மூலம் சண்டை-பிடிக்க ஆயத்தப்படுத்தல், ஓடுதல் என்ற தாக்கத்தை உருவாக்கி நாம் ஆபத்தில் இருந்து தப்புவதற்கு உதவும். எமது இதயத் துடிப்பு அதிகரிக்கும். நாம் அந்த ஆபத்திலிருந்து விலகுவதற்கு உதவும். உண்மையான ஆபத்துக்கு உட்படுவது நவீன உலகத்தில் குறைவு. நாம் போலியான எதிர்பார்ப்பு, ஏமாற்றல்களை தவிர்க்க நினைக்கும் பயங்களை உணருவோம். உதாரணத்திற்கு உங்களது பயம் "நான் பரீட்சையில் தேர்வு எடுக்க முடியாமல் போய்விடுமோ?" "எமது பணவருமானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுவிடுமோ?", "எனது கணவர் என்னை விட்டுவிடுவாரோ?" இப்படியான பயங்கள் போலியான எதிர்பார்ப்புகள். எமது உடல் பயங்களாக உணர்கிறது. இது எமக்கு தோல்வி அடைந்துவிடுமோ எனது வாழ்க்கை இப்பொழுது இருப்பதை விட இன்னும் கீழ்நிலைக்குப் போய்விடுமோ என்ற மனப்பயங்கள் உடலில் பல தாக்கங்களை உருவாக்கும். மூளை எமது உண்மையான பயங்களையும் எதிர்பார்ப்பு சார்ந்த பயங்களையும் ஒன்றாக உணரும். அவை அதே சண்டை, ஓடுதல் என்ற தாக்கத்தை உருவாக்கும். பயம் கோர்டிசோல் போன்ற எதிர்மறை சுரப்பிகளாக உருவாக்கப்பட்டு இதயத்தின் துடிப்பு அதிகரிக்கும். உடலில் ஆபத்து சார்ந்த பயங்கள் திடீரென உருவாகி அவை உடம்பில் நிரந்தரமாக இருப்பதில்லை. ஆனால் போலியான பயங்கள் தொடர்ந்து இருக்கும்போது உடல் அதனை நிரந்தரமாக சுரப்பிகளையும் சுரப்பதால் மிகவும் பாதிக்கப்படும். எமது உடல் உறுப்புகளின் தரங்கள் மாற்றப்படுகின்றன. அவை உடல், உள நோய்களாக உருவாகின்றன.

எல்லாவிதமான பயங்களும் உண்மையானவை அல்ல. ஆனால் அவற்றை உண்மையாக உணர்கிறோம். போலியான பயங்கள் எப்படிப்பட்டவை. என்ன நடக்கும் என்று தெரியாத பயம். காரணமற்ற பயங்கள். இந்தப் பயம்தான் உலகத்திலேயே பெரியது. எமது மனதிற்கு எப்பொழுதும் எல்லாம் தெரிந்து இருக்கவேண்டும். அதாவது 80 வயதில் என்ன நடக்கும். எனது பிள்ளை வயதுபோக என்னைப் பார்ப்பனா? இப்படியான பயங்கள். எமது எதிர்காலத்தில் ஏதாவது நடந்து விடுமா? நான் எதிர்பார்த்த மாதிரி எனது எதிர்காலம் இருக்குமா? என்ற பயம். இதற்காகத் தான் நாம் சோதிடர்கள், குறிசொல்பவர்கள் என்று எல்லா இடமும் அலைகிறோம். இப்பொழுது எல்லாம் நன்றாக இருந்தாலும் எமக்கு என்ன நடக்கும் என்ற பயம் இந்த நிமிடத்தின் அமைதியான நிலையை கெடுத்துவிடும்.

## மாற்றங்களுக்கு பயம் (fear of changing)

இது உண்மையிலேயே வெற்றிக்கான பயம். உதாரணமாக நான் கோடீஸ்வரனாக வர விருப்பம். ஆனால் நான் கோடீஸ்வரனாக வந்தால் எனது நண்பர்களை இழந்துவிடுவேனோ? நான் ஆத்மீக ஆளாக இல்லாமல் போய்விடுவேனோ? என்று பயம். இது என்ன நடக்கும் என்று தெரியாத பயமாக இருந்தாலும் மாற்றங்களை நோக்கி இது இருக்கும். அதுவும் நல்ல மாற்றங்களாக இருந்தாலும் மாற்றங்கள் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதது. ஆனால் எமது மனம் அதனை விடுவதில்லை. அது தனக்குத் தெரிந்த விடயங்களுக்குள் இருக்க முயற்சி செய்யும். நாம் உணரவில்லை என்றால் அதுவே எமது மாற்றங்களுக்கு எதிராக இயங்கும்.

## பாதுகாப்புப் பயங்கள் (fear of security)

இந்தப் பயங்கள் எதிர்காலத்தில் எனது பாதுகாப்பு போய்விடுமோ என்ற பயம். இதில் பணபயம் மிகவும் அதிகம். அதாவது தேவையான பணவசதி எனக்கு இல்லாமல் போய்விடுமோ என்பது. இப்பொழுது பணவசதி இருக்கிறது என்று சந்தோஷப்படுவதை விட எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது போன்ற பயம். பணத்தை இழந்துவிடுவோமோ, களவு கொடுத்துவிடுவோமோ என்ற பயம். இப்படியான பலவிதமான பயங்கள் பணத்தைச் சுற்றி இருக்கலாம். அதேமாதிரி உறவுகளை சுற்றியும் இருக்கலாம். எனது கணவர் அல்லது மனைவி என்னை விட்டுவிடுவாரோ. எனது பாதுகாப்பு போய்விடுமோ என்ற பயம் இதில் பெரும்பாலும் இருக்கும். பொதுவாக கணவர் அல்லது மனைவி எமது பண-வருமானத்திற்கு காரணமாக இருப்பதால் அந்தப் பயம் இருக்கலாம்.

நான் தனித்துவிடுவேனோ என்ற பயம் இது பொதுவாக இருப்பது சிறு வயதில் அவர்களுடைய பெற்றவர்கள் அல்லது திடீரென ஒரு நெருங்கிய உறவு இல்லாமல் போய் இருக்கலாம்.



அது எப்பொழுதும் எனக்கு நடக்கலாம் என்ற பயம் இருக்கும். பொதுவாக இழப்புகள் எமது மனத்தில் ஆழமாக பதிந்துவிடுகின்றன. அவை எப்பவும் எமக்கு மிகவும் மனவருத்தத்தைலும் வலியையும் தந்திருக்கும். அதனை திருப்பி அனுபவிக்க விருப்பமில்லாமல் நாம் தடுப்பதற்கு பலவகையில் முயற்சி செய்வோம். இதனால் பொதுவாக நாம் மற்றவர்களை சந்தோஷப்படுத்தப் பார்ப்போம் (people pleasing). பொருட்கள் வாங்கிக்கொடுப்பது, விருப்பம் இல்லை என்றாலும் மற்றவர்களுக்கான வேலை-களை செய்வது என்பது பொதுவாக காணப்படும் குணஇயல்புகள் ஆகும். அவர்கள் நினைக்கிறார்கள் எப்படியும் இந்த உறவை நான் வைத்திருக்க வேண்டும் என்று. ஆனால் எமது வாழ்க்கையில் பல வகையான உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்று. பிரிவினால் ஏற்படும் வலியை, வருத்தத்தை தவிர்க்க நாம் முயற்சி செய்யும்போது அது ஒரு-வகையான போலியாக மற்றவரால் உணரப்படும். உறவுகள் இதயத்தில் உணரப்படும் ஒன்று. எந்த உறவை இழக்க கூடாது என்ற பயம் இருக்குமோ அந்த உறவை அவர் இழக்கவும் ஒரு காரணமாக பயம் இருக்கும். பயம் எப்பொழுதும் அடுத்தவரை கையாளும் தன்மையை கொண்டுவரும். அது மற்றவரால் உணரவுப்படும். அங்கு உறவுகள் வளராது.

## வயது முதிர்வதற்கு (fear of getting old)

உலகத்தில் இப்பயம் நிறைய இருக்கிறது. நான் வயது போனால் என்ன நடக்கும்? நான் அழகு இல்லாமல் போய்விடுவேனோ? என்னை நான் பார்க்க முடியாமல் போய்விடுவேனோ? எப்படி நான் இளமையாகவே இருப்பது? எனது உறவில் என்ன நடக்கும். இது பொதுவாகப் பெண்களுக்கு ஆண்களைவிட அதிகம் இருக்கும். அழகு சிகிச்சை, அழகு உருவாக்கும் சாதனங்கள் என்பவை மிகவும் பிரபலமாக இருப்பதற்கு இதுதான் காரணம்.

## ரொறன்ரோவின் வயது முதிர்ந்தவர்கள் - GTA SENIORS

கனடாவில் வயது முதிர்ந்தவர்கள் (Seniors) இன் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிப்பதனைக் காணலாம். நீண்டகால வாழ்விற்கு ஆரோக்கியம், மருத்துவ முன்னேற்றம், மக்களின் ஆரோக்கியத்தின் மீதான ஈடுபாடு காரணங்களாகும். 2011ஆம் ஆண்டின் கணக்கின்படி 5,825 கனடியர் 100 வயதைத் தாண்டி வாழ்வதாகவும். இந்நிலைமை 2061இல் 80,000ஐ தாண்டலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கனடாவின் இன்றைய சனத்தொகை ஏறக்குறைய 37 மில்லியன் ஆகக்காணப்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப இந்த 80,000 எண்ணிக்கையிலும் மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

வயது முதிர்ந்தவர்கள் 65இற்கு மேற்பட்டவர்கள் ரொறன்ரோவின் வாழ்க்கைச் செலவை தவிர்ப்பதற்காக கனடாவில் வெவ்வேறு பகுதிக்கு இடம் பெயர்கின்றார்கள் என புள்ளிவிபர ஆராய்வுகள் தெரிவிக்கின்றன. வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்வதாக/வும் தெரிய வருகின்றது.

ஆதனத்தின் வியாபார விலை என்பது குறிப்பிட்ட குறிச்சியின் காலநிலை, மருத்துவ வசதிகள், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதிகள் மற்றும் அமைதியான சூழல் போன்றவை முன்நிற்கக் கூடியவை. அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் கீழுள்ள பகுதிகள் (Areas/locations) முதல் 10 பகுதிகளாகக் காட்டப்பட்டுள்ளது.

1. Owen sound 2. Strartford 3. Elliot lake
4. The Niagara Region 5. Peterborough
6. London (Ontario) 7. Windsor 8. Ottawa
9. Oakville 10. Collingwood



# அந்தப் பூரணமான தொழில் - The Perfect Job

மக்கள் எப்போதும் தமது தொழிலை வைத்தே தம்மையும் ஏனையோரையும் மதிப்பீடு செய்கிறார்கள். யாரோ ஒருவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தும்போது பல தடவை நாம் அவரிடம் "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்பதுண்டு". பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கடினமாகப் படிக்கச் சொல்வார்கள். அப்போதுதான் அவர்களால் தமக்காக எதனையும் சாதிக்க முடியும் என்பதற்காக.

பிரேம் ராவத் அவர்கள் மானிடராக இருப்பதன் நோக்கம் பற்றியும் - ஒவ்வொரு மானிடன் பற்றியும் மிகவும் உள்ளடக்கமானதொரு கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார். அவர் உலகெங்கும் பிரயாணம் செய்து, எமது வாழ்வில் அமைதியையும் ஆனந்தத்தையும் கண்டுகொள்வதற்கான சாத்தியம் பற்றி உரையாற்றி வருகிறார்.

நீங்கள் யார்? : மானிடன்.

பதவியின் பெயர் : தொழில் விபரம்: அமைதியுடனும் இணக்கப்பாட்டுடனும் வாழ்தல்

நான் அவதானித்த ஒரு வியடம் என்னவென்றால் "இயற்கையில் உள்ள எல்லாவற்றிற்கும் ஒரு தொழில் உள்ளது. சிறிய எறும்பிற்குக் கூட அது ஆற்றுவதற்கான பணி ஒன்று உள்ளது. அவர்களுக்கு வேலை இருக்கிறது அத்துடன் அவர்கள் வாழவேண்டும். இயற்கையில் ஏதாவது ஒன்று 'தொழில்' செய்யாவிட்டால் அது இறந்துவிடும். அது காணாமற்போய்விடும். அது சரித்திரமாகிவிடும். சகல டைனோஸர்களும் கொல்லப்பட்டுவிட்டன. மேலும் அவர்களுக்கான தேவை இல்லை.

"எனினும் மனிதர்களிடம் வரும்போது அவர்களிடம் தொழில் ஒன்றுள்ளதா?, அவர்கள் வேலையுடன் இருக்கிறார்களா அல்லது வேலையற்று இருக்கிறார்களா? இது ஒரு சுவாரஸ்யமான கேள்வி. அதற்கான பதிலை நான் இதுவரை கூறவில்லை. ஆனால் நான் அவர்கள் தொழில் செய்யவில்லை என்னும் முடிவிற்கே வருகிறேன்."

இது ஒரு புல்லைப்போல் மிகவும் எளிதானது என திரு. ராவத் கூறுகிறார். அது இந்தப் பூமியில் கோடிக்கணக்கான ஆண்டுகளாக, மனிதர்களைவிடக் கூடிய காலமாக வெற்றிகரமாக உயிர்வாழ்ந்து வருகின்றன. எதனால்? ஏனெனில் அவ்வளவு காலமும் அது ஒரு சந்தர்ப்பத்தைக்கூட வீணாக்கவில்லை. திறணடைந்ததுடன், மிகச் சிறியவற்றில் இருந்தும் முடிந்தளவில் பெற்றுக் கொண்டன.

"மனிதர்கள் அதற்கு எதிராகப் போயிருக்கிறார்கள்" என அவர் கூறுகிறார். புற்களும் மரங்களும், மீன்களும், பறவைகளும், ஆற்றலைக் கற்றுக்கொண்டதுடன், மனிதர்கள் அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் எல்லாம் மேலும் மேலும் வினைத்திறன் அற்றவர்களாக இருப்பதற்கே கற்றுக் கொண்டுள்ளனர்.

பரிபூரணமான மனிதனின் அதி உயர் சாதனை "அமைதியில் இருப்பதும் - மேலும் மேலும் பெற்றுக்கொண்டே இருக்காமல் எம்மால் எது முடியுமோ அதைப் புரிந்து அதைப் பேணி வளர்க்க வேண்டியதுமே என திரு. ராவத் கூறுகிறார். அது தூய மானிடன் ஒருவனின் செல்வாக்கல்ல. இயற்கையில் அது ஒருபோதும் தொழிற்படாது.

'தூய மானிடர்கள் என்ற ரீதியில் எம்மால் எதைச் சாதிக்கமுடியும்? நாம் அமைதியைத் தெரிவுசெய்தால் எம்மால் அமைதியை அடைய முடியும். ஆனால் நாம் அதைத் தெரிவு செய்ய வேண்டும். நாம் அந்த அமைதியைத் தெரிவு செய்ய வேண்டும். நாம் அந்த ஆனந்தத்தைத் தெரிவு செய்ய வேண்டும். அங்கு எவ்வளவு ஆனந்தம் இருக்கிறதென்பதற்கு ஏதாவது கட்டுப்பாடுகள் உள்ளதா? இல்லை. ஆனால் நாம் அதைத் தெரிவு செய்யவேண்டும். இக்கணத்திலேயே அதிகமான மக்கள் தமக்குத் தெரிவு எதுவும் இல்லாத காரணத்தினால் தாம் பொறியில் அகப்பட்டுள்ளதாக உணர்கிறார்கள்.

நான் அதைக் கூறுவதற்காகத் தான் இங்கே இருக்கிறேன் ஆம் எமக்குத் தெரிவு ஒன்று உள்ளது என அவர் கூறுகிறார். எமக்குத் தெரிவு உள்ளது. நாம் தெரிவு செய்யவேண்டும். ஒவ்வொரு மானிடனாலும் வாழ்வில் எமக்கு எது தேவையோ அதைத் தெரிவு செய்ய முடியும். அது அற்புதமான-தொரு அதிகாரமளித்தலாகும்.

நாம் இந்த உலகில் வாழ்கிறோம். இங்கு நாம் எதைச் செய்தாலும் அவற்றிற்கான பக்கவிளைவுகள் உள்ளன என திரு. ராவத் கூறுகிறார். "தமக்கு ஏன் இந்தப் பிரச்சினைகள் உள்ளன என்று ஒவ்வொருவரும் ஆச்சரியமடைகிறார்கள்." அமைதியில் வாழ்வதை நீங்கள் தெரிவு செய்தீர்களா அல்லது பிரச்சினைகளுடன் வாழ்வதை நீங்கள் தெரிவு செய்தீர்களா? இப்படியான-தொரு வாழ்க்கைதான் உங்களுக்குத் தேவையா?

"புத்திசாலித்தனமாகத் தெரிவு செய்யுங்கள் - தெளிவைத் தெரிவு செய்யுங்கள் - அமைதியைத் தெரிவு செய்யுங்கள் - விவேகத்தைத் தெரிவு செய்யுங்கள், உங்கள் வாழ்வில் புரிந்துகொள்தலைத் தெரிவு செய்யுங்கள்."

எமக்கு மழை சௌகரியமில்லாது இருக்கலாம். ஆனால் புற்தளிர்களுக்கு அது ஒரு கொடையாகுமென திரு. பிரேம் ராவத் கூறுகிறார். இதற்காகத்தான் அது காத்திருந்தது. அது வரும்போது அது நேரத்தை வீணாக்காமல் பச்சைப்பசேல் என மாறிவிடும். அடுத்த தடவை நீங்கள் புல்லின்மேல் நடக்கும்போது உங்களைவிடப் புத்திசாலித்தனமான ஒன்றின் மேல் நடப்பதை யோசித்துப் பாருங்கள். ஏனெனில் நீங்கள் அந்தப் புல்லின் தளிர் அளவிற்கு ஆற்றல்மிக்கவர் அல்ல. "ஆற்றல்மிக்கவராக இருங்கள். உள்ளே வரும் இந்தச் சுவாசமானது: இதை நான் எப்படி திறமாக பிரயோசனப்படுத்தலாம், என்னால் என்ன செய்ய முடியும்? நான் என்னவாக இருக்கலாம்? எவ்விதம் இந்தக் கொடையை என்னால் பெறமுடியும்? உண்மையாகவே பெற்றுக் கொள்ள முடியும்? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் எமக்குத் தரப்படும் இந்தக் கொடையை முற்றுமுழுதாக எப்படிப் பெற்றுக்கொள்வது?

"உங்கள் கண்களைத் திறவுங்கள், நடை-பெற்றுக்கொண்டிருக்கும் அந்த அழகிய நாடகத்தை, அந்த நடனத்தைப் பாருங்கள், வாழ்வை கொண்டாடுவதற்கான நடனம்"

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:

1.877.707 3221 Toll free

416 431 5000 தமிழ்

www.wopg.org www.tprf.org



Math tutorial377

Answers to tutorial 376

1)The number of 3 words possible is $26^3$.The number of 3 letter word s that contain atleast one of a,e,I,o,u or y is $26^3$-$20^3$ =9576 , similarly the 4and 5 is

$26^4$-$20^4$=296976 and $26^5$-$20^5$ =8681376

Therefore the total is 9576+296976+8681376 =8987928

2)The vector perpendicular to each of the given vectors is the croo product of these vectors ,that is

(1,3,2)x(4,-6 ,7 )=[3(7)-2(-6)],[2(4)-1(7)] ,[1(-6)-3(4)]

=(33 ,1 ,-18)

3)Given the points A(2 ,3 -2 ) and B(4 ,-1 ,5 ), the mid point of AB is M=(3 ,1 ,3/2),the line passes through C(0 ,-1,1)and M direction vector is CM=(3 ,2 ,1/2 ). The parametric equations are x=6t,y= -1+4t ,z=1+t

4)E(v) (1600v)/($v^2$+6400 ) 0≤ v≤ 100 differentiatinE(v) &equating to zero for max. &min.

1600$v^2$=6400x1600,v=80 km/h

Tutorial377 (questions)

1)Differenciate E(V) =(1600V)/($V^2$+6400) and find the maximum value of v

2)The cost in dollars,to produce x litres of maple syrup for Christmas celebration isC(X) =75($\sqrt{X}$ -10), X≥ 400 (a) what is the average cost of producing 625L?

(b)What is the marginal cost at1225L ?

3)Find the equation of the tangent to the graph of $y^3$ -3xy -5 =0 at the point (2 ,-1)

4)Find the parametric equations of the line passes through the point A(6 ,4 ,0 )and is parallel to the line passing through B(-2 ,0 ,4 )and (3 ,-2 , 1)

By Mr.S.F.Xavier (Teacher)

Tel6473409490/416732 2228

# பாரதியார் பிறந்த நன்னாள்

**- வே. பாலச்சந்திரன் -**

தமிழ் உலகம் போற்றும் கவிஞர் நமது சுப்பிர மணியபாரதியார் திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள எட்டயபுரத்தில் ஐயர் சின்னச்சாமிக் கும் லட்சுமி அம்மாளுக்கும் பிறந்தார். எட்டய புர சமஸ்தானப் புலவர்கள், வித்துவான்களால் அளிக்கப்பட்ட பட்டம்தான் பாரதி. 1894 - 1897 வரை உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி கற்றார். அந்தக்கால வழக்கப்படி பால்ய விவாகம் 15 வயதில். ஏழு வயது நிரம்பிய செல்லம்மாவைக் கைப்பிடித் தார். 1898ஆம் ஆண்டில் காசியில் தன் அத்தை வீட்டில் வாழ்ந்து கொண்டே அலக பாத் சர்வகலாசாலையில் ஹிந்தியும் சமஸ் கிரிதமும் கற்றார். பின்னர் எட்டயபுரம் வந்து 2 ஆண்டுக்குப் பின்னர் மதுரை சென்று விவேகபானு என்ற பத்திரிகையில் கவிதைகள் கட்டுரைகள் எழுதி வந்தார். இவரது முதல் பாடலான தனிமை இரக்கம் என்ற பாடல் இவ் விவேகபானு என்ற பத்திரிகையில் வெளி வந்தது. 1905இல் தீவிரமாக அரசியலில் ஈடு பட்டார். அதன் காரணமாக ஆங்கிலேய அரசாட்சியின் கெடுபிடி காரணமாக 1910வரை பாண்டிச்சேரியிலிருந்து தனது அரசியற் பணியை ஆற்றினார். 1912 இல் பகவத் கீதையை தமிழில் மொழி பெயர்த்தார். மேலும் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்கள் படைத்தார். ஏராளமான தனிப்பாடல்களையும் அவ்வப் போது இயற்றினார். 1918இல் பாண்டிச்சேரியி லிருந்து வெளியேறி கடலூருக்கு அருகே சிறைபட்டு சிறையிலும் சிறிதுகாலம் இருந் தார். 1920இல் சுதேசமித்திரன் பத்திரி கையில் உதவி ஆசிரியராகக் கடமை புரிந் தார். 1921 செப்ரெம்பர் 11ஆம் திகதி திரு வல்லிக்கேணி கோயில் யானையினால் தூக்கி எறியப்பட்டு சுகயீனமுற்று சிவபதம் அடைந்தார்.



பாரதியார் பக்தி உணர்வில் தலைசிறந்து விளக்கினார். அவர் மிகமிகப் போற்றி வணங் கியது பராசக்தியைத்தான். அவர் எப்போதும் காளிதாசராகவே இருந்து காளியின் அருளைப் பெற்றார். கவிதைகளை மாரிபோல் பொழிந்தார். அந்த மகாகவியை ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 11ஆம் திகதியில் தமிழர் களாகிய நாம் போற்றி அவரது கவிதை களைப்பாடிப் படித்து இன்புற வேண்டும்.

## யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: ஞாயிற்றுக்கிழமை, 2018, டிசம்பர் 09 காலை 09:00 மணி
இடம்: Scarborough Civic Centre
150 Borough Drive, Toronto ON M1P 4N7

உங்கள் கருத்துக்களைத் தெரிவித்து புதிய நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்வதற்காக அனைத்துப் பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா அன்புடன் அழைக்கிறது.

சங்கத்தில் அங்கத்தவராக இன்னும் இணைந்து கொள்ளாத பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும், 2018, டிசம்பர் 01க்கு முன்னர் அங்கத்துவ விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தி அங்கத்தவராக இணைந்து, கூட்டத்தில் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அங்கத்துவத்தைப் புதுப்பிக்க வேண்டியவர்களையும் அவ்வாறே 2018, டிசம்பர் 01க்கு முன்னர் புதுப்பித்து, கூட்டத்தில் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆண்டுச் சந்தா அங்கத்துவர் களின் அங்கத்துவ நிலையும் அங்கத்துவ முடிவு திகதியும் யாழ். இந்து இணையத்தளத்தில் விரைவில் பிரசுரிக்கப்படும். அங்கத்துவ விண்ணப்பப் பத்திரத்தினை இவ் இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம்.

வேட்பு மனுக்கள் 2018, நவம்பர் 10ஆம் திகதி மு.ப 10:00 இலிருந்து, 2018, டிசம்பர் 01ஆம் திகதி பி.ப 11:59 வரை மின்னஞ்சல் மூலமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. வேட்புமனுக்களை 2018 டிசம்பர் 1ஆம் திகதி பி.ப 3:00இல் இருந்து பி.ப 6:00 வரை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். அதற்குரிய இடம் விரைவில் எமது இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அத்துடன் மின்னஞ்சல் மூலமும் அறிவிக்கப்படும். வேட்பு மனுக்களை, பொதுக்கூட்டம் நடைபெறும் நாளில் ஏற்றுக்கொள்ளும் நடைமுறை நீக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை கீழே தரப்பட்டுள்ள யாழ். இந்து இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். ***www.jaffnahinducanada.com***

கிருஷ்: 416-930-9119    ரவீந்திரா: 416-230-0360
கனகவரதா: 416-725- 2041    ஜெயானந்தசிவம்: 647-802-7482

# யானை இருந்தாலும் ஆயிரம் பொன்... இறந்தாலும் ஆயிரம் பொன் !

## ஸ்ரீபன் ஹொக்கிங்

யானை இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழிக்கு ஏற்ற வகையில் பிரபல அறிவியல் ஆராய்ச்சி யாளர் ஸ்ரீபன் ஹொக்கிங்கின் சக்கர நாற்காலி $393,000க்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.
ஸ்ரீபன் ஹொக்கிங் பிரிட்டனைச் சேர்ந்த



இயற்பியல், வானியல், கோள்கள், கருந்துளை ஆராய்ச்சிகளை வெற்றி கரமாக நடத்தி வந்தார்.

ஸ்ரீபன் ஹொங்கிங் மறைந்த பிறகு அவர் பயன்படுத்திய 22 பொருள்களை நியூ யோர்க் நகரைச் சேர்ந்த "கிறிஸ்டி" என்ற அமைப்பு ஏலத்தில் விட்டது. 1965ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்துக்காக ஸ்ரீபன் ஹொங்கிங் கைப்பட எழுதிய 117 பக்கங்கள் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரை $767,000 க்கு ஏலம் போனது. நோயால் பாதிக்கப்படுவதற்கு முன் ஸ்ரீபன் ஹொக்கிங் கைப்பட எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை இது.

இயற்பியல் ஆராய்ச்சியாளர் ஸ்ரீபன் ஹொக்கிங் கடந்த மார்ச் மாதத்தில் தன் 76ஆவது வயதில் இறந்தார். எழுந்து நடக்க முடியாத ஸ்ரீபன் ஹொக்கிங்கின் வாழ்க்கை சக்கர நாற்காலியில்தான் கழிந்தது. சிறுவயதிலேயே நரம்பு நோயால் பாதிக்கப்பட்டதால் அவரால் நடக்க முடியாமல் போனது, கைகள் இயக்கம், பேச்சு போன்றவை பாதிக்கப்பட்டன. இதனால் அவரின் வாழ்க்கை சக்கர நாற்காலியிலேயே கழிந்தது. எனினும், சோர்வடைந்து விடாத ஸ்ரீபன் ஹொங்கிங்

ஸ்ரீபன் ஹொங்கிங்கை வாழ்நாள் முழுவதும் தாங்கி வந்த பிரசித்திபெற்ற நவீன வசதிகள் கொண்ட சக்கர நாற்காலி $393,000க்கு ஏலம் போனது. "ஹாக்கிங்கின் சக்கர நாற்காலி உடல் குறைப்பாட்டின் அடையாளம் அல்ல... நவீன அறிவியல் அடையாளம்" என்று சொல்வார்கள். ஸ்ரீபன் ஹொக்கிங் அறக்கட்டளை உருவாக்குவதற்காக அவர் பயன்படுத்திய பொருள்கள் ஏலத்தில் விடப்பட்டன.

# புரட்சிக்கு வித்திட்ட கவிஞன் பாரதி

இனியதமிழ் நடையினிலே யரும் பொருளைப் பொதிந்து வைத்து
இனியகவி இயற்றி வைத்தான்
அழியுமுயிர் பேணுதற்கு அடிவரும் பேடிகளை
அவனியிலே யிகழ்ந் துரைத்தான்
விழியினுயர் சுதந்திரத்தின் பெருமையினைப் பாடியிங்கு
வீரத்தை வளர்த்து விட்டான்
தெளிவு பெறும் சிந்தனையை மக்களிடை வளர்த்ததனால்
புரட்சியினை வெடிக்க வைத்தான்

கைகட்டி வாய் பொத்தி யூழியங்கள், புரிந்தவரைக்
கண்திறந்து பார்க்க வைத்தான்
மெய்தட்டி நிமிர்ந்தெழுந்து, விலங்குடைத்துப் போராடும்
உணர்ச்சியினைப் பெருக்கி விட்டான்
பொய்யுரைத்துப் புகழ்மொழியால் உயிர்வாழ முயன்றவரை
எச்சரித்துத் திகைக்க வைத்தான்
வெய்யதுய ருற்ற போது வீறெழுப்பும் கவிகள் யாத்து
இளைஞர்களை உசுப்பி விட்டான்



டிசம்பர் 11, 1882
செப்ரெம்பர் 11, 1921

வறுமையிலு மிறுங்காத மனவுறுதி யோடு நின்று
தமிழர் தலை நிமிர வைத்தான்
செறுநர்படை மிரட்டலுக்கு உறுதியோடு எதிர்த்து நிற்கும்
தொண்டர்களைத் திரள வைத்தான்
மறையுரைத்து, இறைபரவி ஞானநெறி அறிவுறுத்தி
அஞ்ஞானம் மடிய வைத்தான்
நிறைவுதரு தொழிற்றிறமை, ஆளுமையு முயர்ந்ததமிழ்
நாடுலகில் மலர வைத்தான்

பெண்ணடிமை கொள்வதனைச் சாடியதை நீக்கியுயர்
சமத்துவத்தை நிலைக்க வைத்தான்
தண்ணளியில் விஞ்சுமுள்ளங் கொண்டவரைத் தாழ்த்துகின்ற
கொடுமையினைத் தகர்த் தெறிந்தான்
திண்மையுடை மகளிடை வாண்மையினை வளர்த்தெடுத்து
பாரினையே யாள வைத்தான்
எண்ணமதிற் புரட்சியிடை மண்விடியப் பண்பாடி
விண்ணுயரக் காட்சி தந்தான்.


**- மாரீசன் -**

நகைச்சுவைத் தொடர் 386

# ராசம்மா ராச்சியம்



இலை உதிர்கிறது, பனிவிழுகிறது...
கால மாற்றம்... காலத்தின் மாற்றம்....
இன்றிருப்போர் நாளை இங்கே இருப்பதென்ன உண்மை...
இதை எண்ணிடாமல் சேர்த்துவைத்து
காத்து என்ன நன்மை?



உலகர் பலமுறை கேட்டு ரசித்த ‘மனமுள்ள மறுதாரம்’ படப்பாடல்
சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் காதில் ரீங்காரமிட்டது....



இந்தப்பாடல் மனிதவாழ்க்கை....அரசியல்...எல்லாவற்றிற்கும் பொருந்தும்.
நேற்று அரசியல் பதவியில் இருந்தவர் இன்றிருப்பாரா?
இன்று பதவியேற்பவர் நாளை இருப்பாரா?
உலகே மாயம்! வாழ்வே மாயம்!

பிரதமருக்கு நிதி நிறுத்தப்படுகிறது! என்ற செய்தியை வட்ஸ்அப்
வரதன் வாசித்ததும் செக்கண்ட்புளோர் செல்லம்மா பெலத்து
சிரித்துவிட்டா...



உலகரும் கூகிள் கோகிலாவும் ஒரே நேரத்தில் செக்கண்ட்புளோர்
செல்லம்மாவை பார்க்க...



வரதன்.. வெளிநாடுகள் எத்தனைவிதமான நிதியை இலங்கை
அரசாங்கத்திற்கு குடுத்தவை?
போராட்ட நிதி (ஆயுதம், ஆயுத தளபாடங்கள், ஹெலிகொப்டர்,
கப்பல், உளவுத்துறை அது...இது)
சுனாமி நிதி - சுனாமி அள்ளிக்கொண்டு போனதைவிட அதிலை வந்த நிதியை
அள்ளிக்கொண்டு போனவை...)

போர் நிவாரணம்...வெள்ள நிவாரணம்...எல்லாம் உரியவர்களுக்குக் கிடைக்காமல்
தடைசெய்த செய்திகள் வரேல்லை. வாடகையில்லாமல் அலரிமாளிகையிலை அடிபிடி,
கலாட்டா செய்யிறவைக்கு நிதியை நிப்பாட்டினா...என்ன?
ஆட்டிலறி அன்னம்மா தொடங்கினா...



இராம - இராவண யுத்தம் எத்தனை நாள்?
பாரதப்போர் எத்தனை நாள்? வியட்நாம் - அமெரிக்கா (அமெரிக்கா
தோல்வியடைந்த) யுத்தம் எத்தனை நாள்? இந்தியா - பாகிஸ்தான் -
பங்களாதேஸ்...
அந்தநாடு இந்தநாட்டு சண்டைகள் சில ஓய்ந்தும் ஓயாமலும்
இருக்கின்றன... ஆனால் அலரி மாளிகை...இன்றைய அலறல்
மாளிகையில் சண்டை!



எப்பதான் முடியுமோ? அன்றைய ஆங்கிலேயர் ஆண்ட சிலோன்,
சிங்களவர் ஆண்ட சிலோன், சுதந்திரம் கிடைத்த சிங்கள இலங்கை,
சிங்களவர் ஆண்ட குடியரசு ஸ்ரீலங்கா, அடாவடி-அதர்மம்-அழிவுகளைச்
செயற்படுத்தும் அலரி மாளிகை.

இன்று நாளொரு மந்திரி, மணிக்கொரு பிரதமர். விடாக்கண்டன் கொடாக்கண்டன் பதவி
வகுக்கும் திரிசங்கு சுவர்க்கத்திலிருக்கும் ஜனாதிபதி. இல்லையில்லை
ஜனாதிபதிக்குக்கூட தெரியாமல் அலரிமாளிகையில் தொடங்கிய சண்டை எப்போ
முடியும்???

இத்தனை அமளிக்குள்ளும் தமிழ் பகுதிகளில் மஞ்சள் சிகப்பு கொடிகள் பட்டென
காற்றில் பறக்க...மாவீரர் தினம் நினைவு கூரப்பட்டது.

பிரிந்த, மறைந்த உறவுகளுக்காக மனச்சுமையை இறக்கி கண்ணீர் மழை பொழிந்து
கல்லறைகளை நனைத்த காட்சிகள்...உடனுக்குடன் கொண்டுவரப்பட்டது. ஊடகங்கள்
உறக்கமின்றி தமது பங்கையும் கடமைகளையும் செய்தனர். உறவுகள்
மறைந்தவர்களை மறக்காது நாட்கள் கடந்தாலும் நாடு கடந்தாலும் ஒவ்வொரு
தமிழனும் தமக்குள்ள பங்கை முழுமனத்தோடு பங்கெடுக்கத் தவறவில்லை.

ஞாபகம் இருக்கிறதா டிசம்பர் 1 - 15.




01. சர்வதேச எயிட்ஸ் தினம்.




02. ஐக்கிய நாடுகள் சர்வதேச அடிமை ஒழிப்பு தினம்

02. நிலக்கண்ணி வெடிகளைத் தயாரிப்பது மற்றும் பயன்படுத்தும்
ஒப்பந்தத்தில் 121 நாடுகள் ஒட்டாவாவில் கையொப்பமிட்டனர். அமெரிக்கா,
ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை.

03. பன்னாட்டு மாற்றுதிறனாளிகள் நாள்.




05. நல்லை ஆறுமுக நாவலர் (தமிழ் உரைநடையின் தந்தை)



05. நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தலைவர்
நோபல் பரிசு பெற்றவர். (1918-2013)



05. ஜெ. ஜெயலலிதா தமிழக முதலமைச்சர் 2வது நினைவு தினம்.



06. ஐக்கிய அமெரிக்காவில் அடிமை முறை 1865இல் தடை செய்யப்பட்டது.

09. அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினம். (2003)

10. மனித உரிமைகள் நாள்.



11. சுப்பிரமணிய பாரதியார் ஜெயந்தி தினம்.

11. எம்.எஸ். சுப்புலட்சுமி கர்நாடக இசைக்கலைஞர் (1916-2004)





# நல்லை ஆறுமுக நாவலர்



பிறப்பு - டிசெம்பர் 18, 1822
இறப்பு - டிசெம்பர் 05, 1879

தோன்றினார் ஆறுமுகன் தெய்வீக சிந்தையுடன்
ஆன்றவிந்த நல்லறிவும் ஆற்றலும் - சான்றோனாய்
முன்வரவே சாதனைகள் மேலோங்க இன்னலின்றி
என்னவெலாம் செய்தாரே ஏற்று.

பார்சிவல் பாதிரியார் பற்றாக ஏற்றவரைச்
சீர்பெருக நற்கல்வி சிந்தைபுக - ஆர்வமுடன்
கற்பிக்க ஆறுமுகன் கற்றாரே ஆங்கிலத்தைத்
தற்பெருமை ஏதுமின்றித் தான்.

நல்லா சிரியரை நாடினார் செந்தமிழை
வல்லமையாய்க் கற்கவே வாய்ப்பாக - நல்லறிஞர்
சேனாதி ராசரை சென்றடைந்தே கற்றாரே
தேனாகத் தாய்மொழியைத் தான்.

பண்டைத் தமிழைப் பலநோக்கு டனேதான்
கண்டறிந்தே கற்றார் கசட - வண்டமிழின்
வல்லமையை வாய்ப்பாகத் தானறிந்தே எல்லோர்க்கும்
செல்வதற்கு ஏற்பாகத் தான்.

செந்தமிழும் சைவமும் செம்மையுறப் பாடுபட்டார்
எந்தவித துன்பந்தான் ஏற்பட்டும் - சிந்தை
சிதறாதே சீர்திருத்தம் செய்யச் சிறப்பாய்
பதறாப் பணிசெய்தார் பார்.

செந்தமிழைச் சீர்செய்யச் செவ்விதாய் ஆராய்ந்து
குந்தக மற்ற குறியீடு - சிந்தைபுக
ஆய்வுசெய்தே சீராக ஐயம் அகற்றியே
மெய்யறிவைக் காட்டினாரே தேர்ந்து.

நாவல ரானபின் நாடெங்கும் செல்லவில்லை
காவலராய்ச் செந்தமிழைக் காப்பாற்ற - நாவசைத்துப்

பேசியே பேறுபெற்ற பேராளா உன்பணியால்
ஆசிபெற்ற செந்தமிழே ஆம்.

வீட்டுக்கு வீடு பிடியரிசி பெற்றேதான்
வாட்டமுறு மாணவர்க்கு வாய்ப்பாக - ஏட்டறிவைக்
கற்பிக்கக் கட்டினார் கல்லூரி காய்வின்றி
உற்றநற் சேவையென்றே தான்.

தாய்நாடு சென்றேதான் தக்க இடம்பிடித்தே
வாய்ப்பாய்த் தமிழை வளமாக்க - தூய்தாக
நூல்கள் பதிப்பித்தே நுண்ணறிவைக் காட்டியே
கால்கோள் அமைத்தாரே காண்.

வள்ளலார் வாழ்விலும் வாய்ப்பாய்ச் செயற்பட்டார்
அள்ளி எறிந்தார் அறிவினை _ உள்ளம்
சிதறா இராமலிங்கர் கோடேறிடச் சித்தி
பதறாது பெற்றாரே பார்.

- முருகேசு மயில்வாகனன் -

## வாழ்வளிக்கும் ஔடதம் வதைத்து விட்டது

நீரின்றி அமையாது உலகு
மக்களை வாழ்விப்பது நீர்
நாகரிகங்கள் நதிக்கரையில் தோன்றின
வானின்று நீர் கிடைப்பதனால்
அமிழ்தம் என அழைக்கப்படுகின்றது
துப்பாகியும் துப்பை யாக்குவதும் நீர்
வாழ்வும் வளமும் நீரிலாவது
நீரில்லா நாட்டு மக்கள்
நேரிடும் துன்பங்கள் அனந்தம்
நிலம் சேமித்து வைக்கும் மாமருந்து நீர்
ஐம்பூதங்கள் மக்கள் வாழ்வை வளமாக்கும்
அதேவேளை அச்சுறுத்தவும் செய்கின்றன
நிலம் பிளந்து கக்குவது எரிமலை
காற்று கனவேகத்தில் வீசுவது புயல்
கடல் கொந்தளித்து கரை மீறுவது சுனாமி
தீபரவி காட்டுத் தீயாக நிலை கொள்ளும்
வான் மின்னி முழங்கி இடி விழும்
இவற்றின் நடுவே சிறு ஜந்து மனிதன்
இயற்கை சக்திகளின் ஆதிக்கம் - மனிதன்
எதிர்த்து நிற்பது மிகக் கடினம்
மூன்று மணித்தியாலம் பேய்மழை



வாளியால் கொட்டியது போல்
தமிழகத்தை தாக்கியது தொடராய்
குடியிருப்பே வெள்ளம் நிரம்பியது
உடமைகள் அழிந்தன உயிர்களும் தான்
இயற்கையே உனக்கு நமஸ்காரம்
இழப்பீடுகளை குறைத்து விடு
மனிதரை வாழ விடு.



- நா.க சிவராமலிங்கம் -

## எங்கள் பெருமை உணர்ந்த புரட்சிக்கவி



எங்கெங்கு காணினும் சக்தியடா என்றார்
எங்கள் பெருமை உணர்ந்த புரட்சிக்கவி
எங்கள் பெருமையை உணராப் புழுக்களே!
எங்களால் உங்களை நசுக்கவும் முடியும்
எங்களோடு வாழ நினைத்தால் வாழுங்கள்
எங்களைப் புறக்கணிக்க நினைத்தால் நினையுங்கள்!
புறக்கணிக்கப் படப்போவது நாங்களல்ல, நீங்கள்தான்!
புறக்கணிக்கப் போவது பெண் சமுதாயமே!
பெண்ணெனும் கோவிலை என்றும் மறவாதே!
பெண்மையை அனுதினமும் போற்றிட மறந்திடாதே!
பெண்மையும் ஆண்மையும் ஒருங்கே இணைந்தால்
பெற்றிடுவோம் வாழ்வில் பெரும் பேறு!
இதுவே ஓர் அபலையின் அன்புக் கட்டளை!
மதுவை விடக் கொடியவர்கள் நாங்கள்
மதுவால் அழிந்த மன்னரை விட
மாதுவால் அழிந்த மன்னரே அதிகம்!
கண்டதே காட்சி கொண்டதே கோலமென
கசக்கிப் பிழியும் கயவர் கூட்டமதில்
கன்னிப் பெண் காலங் கழிப்பதெப்படி?
கற்றோரே நீங்கள் தான் கூறவேண்டும்

- K. சேஷாத்ரி -

## ஈழமுரசு நடத்திய தமிழீழத் தேசியத் தலைவரின் 64ஆவது அகவை விழா



ஈழமுரசும், கனடாவாழ் தமிழ் மக்களும் இணைந்து கொண்டாடிய தமிழீழத் தேசியத் தலைவரின் 64 ஆவது அகவை விழா 3840 FINCH AVE. EAST SCARBOROUGHஇல் அமைந்துள்ள METROPOLITAN CENTER இல் கார்த்திகை 26ஆம் திகதி திங்கட்கிழமை மண்டபம் நிறைந்த மக்களோடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

கனடிய, தமிழீழத் தேசியக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு அகவணக்கம், மங்கல விளக்கேற்றல், தமிழ்தாய் வாழ்த்து, மங்கல இசையோடு தேசியத் தலைவரின் அகவை விழா ஆரம்பமாகியது. ஈழமுரசு பத்திரிகை நிர்வாகத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் விஸ்வநாதன் அவர்களது வாழ்த்துச் செய்தி காணொளி மூலம் எடுத்து வரப்பட்டது. வழமைபோல் தேசியத் தலைவரின் அகவை விழாவை எழுச்சி மிக்க நடனங்களால் மெருகூட்டும் நடன ஆசிரியர்களின் மாணவிகள் வழங்கிய எழுச்சி நடனங்கள் மிக அற்புதமாகவும் அரங்கம் நிறைந்த கரவொலி, பாராட்டுக்கள் பெற்றவையாகவும் அமைந்திருந்தன. சுதந்திரப் பறவைகளின் எழுச்சி கானங்கள், வாழ்த்துக் கவிதைகள், இளையவர்களின் எழுச்சி மிக்க பேச்சுக்கள் என்பன இடம்பெற்றன. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் 64ஆவது அகவை சிறப்பு வெளியீடான வரம் எனும் பிரபாகரன் இசைத்தட்டு வெளியிடப்பட்டது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா பணிமனைப் பொறுப்பாளர் திரு. றெஜி சபாரட்ணம் அவர்கள் உரையாற்றுகையில் ஈழத்தில் ஈழமுரசுப் பத்திரிகை தடைசெய்யப்பட்ட பின்னர் கனடாவிலேயே ஈழமுரசுப் பத்திரிகை சில தடங்கல்கள் ஏற்பட்ட போதிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. தமிழீழத் தேசியத் தலைவரின் 50ஆவது அகவை விழாவில் இருந்து இன்றுவரை அகவை விழாக்களை வெற்றிகரமாக ஈழமுரசுப் பத்திரிகை முன்னெடுத்து வருகிறதென கண்ணன் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டிருந்ததை மீள் பதிவு செய்து 65ஆவது அகவை விழாவை பெருமெடுப்பில் தாங்களும் இணைந்து கொண்டு செய்ய விரும்பும் உறவுகள் ஈழமுரசுப் பத்திரிகை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு, தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளையும், அதனோடு இணைந்து பயணிக்கும் அறக்கட்டளை அமைப்புகள் இந்தோனேசியாவில் அகதிகளாக வாழும் தமிழீழ உறவுகளுக்கும், தாயகத்தில் வாழும் மாவீரர்களின் குடும்பங்கள், போராளிகள் குடும்பங்கள், போரினால் அங்கவீனமாக்கப் பட்ட போராளிகள், மற்றும் உறவுகளுக்கும் உதவிகள் வழங்கி வருவதையும் குறிப்பிட்டு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எல்லாவகையிலும் வெளிப் படைத் தன்மையோடு இயங்கி வருவதைத் தெளிவாகத் தெரிவித்து கனடாவாழ் எம் உறவுகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத் தினைப் பலப்படுத்த வேண்டு மென தனது உரையில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

உறுதி மொழி எடுக்கப்பட்டு தேசியக் கொடிகள் இறக்கி வைத்து நம்புங்கள் தமழீழம் நாளை கிடைக்கும் எனும் தமிழீழக் கனவு சுமந்த எழுச்சிப் பாடலோடு ஈழமுரசு நடத்திய தேசியத் தலைவரின் அகவை விழா 64 இனிதே நிறைவு பெற்றது.





உ

அருள்மிகு

# கனடா கந்தசுவாமி கோவில்

நூதனாலய பிரதிஸ்டா நவகுண்டபக்ச

# மகாகும்பாபிசேகம்

## 14.12.2018 வெள்ளிக்கிழமை காலை 7:10 முதல்

## (திருக்குட திருமஞ்சன பெருந் சாந்தி விழா)





முருகன் அடியார்களே!
ரொரன்ரோ மாநகரில் 733 பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள கந்தகோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் வள்ளிதேவசேனா உடனுறை கந்தசுவாமிப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் விளம்பி வருடம் கார்த்திகை 29ம் நாள் (14.12.2018) வெள்ளிக் கிழமை சப்தமி திதியும் சதய நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 7:10 முதல் 8:05 வரை உள்ள விருச்சிகலக்கின சுபமுகூர்த்த வேளையில் நூதனாலய பிரதிஸ்டா நவகுண்டபக்ச மகாகும்பாபிசேகம் நடைபெற இறையருள் கூடியுள்ளது. அனைவரையும் கலந்துகொண்டு கந்தனின் அருள்பெற அன்புடன் அழைக்கிறோம்.

கர்மாரம்பம் 8.12.2018 சனி அதிகாலை 5:00மணி முதல்

எண்ணைக்காப்புச் சாத்துதல்: 08.12.2018 சனி காலை 10மணி முதல்
12.12.2018 புதன் மாலை 3மணி வரை

திருவிளக்குப்பூசை 09.12.2018 ஞாயிறு காலை 10மணி
மாலை 5மணி


திருவிளக்குப் பூசையில் பங்குபெற விரும்புவோரும், மண்டலாபிசேகத்தில் பங்குபெற விரும்புவோரும் ஆலய செயலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

733 Birchmount Road; Scarborough, ON M1K 1R5
Tel: 416.438.1882

பக்தியுடன்
அறங்காவல் சபையினர்



FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Refinance
Purchase
Renewal
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for
1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*
APPROVED
APPROVED
APPROVED
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
*Some conditions apply
MORTGAGE ALLIANCE
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca


வீடு என்பது நமது கனவு
The Realtor for your Dream House
BUY...
SELL...
LEASE...
INVEST...
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாடகைக்கு பெற்றிட...
Mega Financial Group
Vany Jeganmohan
Cell: 416.670.7436
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
FREE Home Evaluation
FREE Home Staging
FREE Virtual Tour
For all your
Real Estate needs...
Natheesh Parameshvaran
647.545.8462
SALES REPRESENTATIVE



MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


GT|Brokers
Protect You & Your Family
YOUR FINANCIAL FREEDOM IS
OUR SERVICE
DON'T WAIT! LET'S START
Pathmini Wigna
Financial Security Advisor
647.868.7443
Wigna Somasundram
Financial Security Advisor
647.409.6429


வீடு, நிலம், வர்த்தகநிலையங்கள்
வாங்க, விற்க, வாடகைக்கு விட அழையுங்கள்...
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
*Independently Owned & Operated


BUY & SELL
WITH CONFIDENCE
FREE HOME
EVALUATION
Free Home Staging, Professional Photography,
Floor Plan & Flexible Commission
THELEPAN
VIGNESWARAN
416-666-1401
www.thelepan.com
Homelife Galaxy Real Estate Ltd. Brokerage Independently Owned & Operated


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


Life Insurance
Non Medical
Super Visa
RESP
வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416.716.1540
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


BUY / SELL / LEASE
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com
www.newcondoproject.ca/com
RE/MAX
DYNASTY REALTY INC.
Dynasty Realty Inc.
Tel: 905.471.0002


BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229


Get Personalized Home listing for FREE
647-296-0596
tisipara@gmail.com
www.tisipara.com
Text any realestate questions to me
Para Tisikulasingam
Sales Representative